தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1975 நவம்பர் 6.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள் விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

Reduction of voting age

* 206 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether this Government have received any communication from the Centre on the reduction of voting age from 21 to 18; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) தேர்தல் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வருவது தொடர்பாக ஆலோசனை கூறுவதற்கென்று நியமிக்கப்பட்ட மக்களவை கூட்டுக் குழுவின் அறிக்கையை இந்திய அரசு இம்மாநில அரசுக்கு 1972 மே திங்களில் அனுப்பியது. இது பற்றி கருத்து தெரிவிக்குமாறு இந்திய அரசு இம்மாநில அரசைக் கேட்டது. வாக்களிக்கும் வயது 21 என்பதை 18 ஆகக் குறைக்க வேண்டுமென்றும் அதற்கேற்ப அரசியலமைப்புச் சட்டத்தின் 326-வது பிரிவு திருத்தப்பட வேண்டுமென்றும் மக்களவையின் கூட்டுக் குழு பரிவுரை செய்துள்ளது.

முதலமைச்சர்கள் மாநாடு ஒன்றில் இக்கருத்து விவாதிக்கப்படலாமென்றும், எனினும், இது இந்திய அரசு முடிவெடுக்க வேண்டிய ஒரு கொள்கைப் பிரச்சினை என்றும் இந்திய அரசுக்கு இந்த மாநில அரசு தெரிவித்துள்ளது.

[1975 நவம்பர் 6

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சரவர்கள் மாநாட்டில் இந்த 21 வயது வரம்பை 18 ஆகக் குறைப்பதற்கு வற்புறுத்துவார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, முதலமைச்சர்கள் கூடுகிற நேரத்தில் அதைப்பற்றி அரசு எந்த முடிவை மேற்கொள்வது என்பதைப்பற்றி பரிசீலிக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்த வயது வரம்பு இத்தாலி போன்ற நாடுகளில் 18 ஆகக் குறைக்கப் பெற்றிருக்கிறது. இங்கும் குறைக்கலாம் என்ற கருத்தை இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் வலியுறுத்திக் கூறுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கடிதத் தொடர்புகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போதே, பத்திரிகைகளிலே வந்த செய்திகளின்படி, வயது வரம்பைக் குறைப்பதென்றால் அரசியலமைப்புக்குத் திருத்தம் செய்ய வேண்டியுள்ளது, ஏற்கெனவே கொண்டு வரப்பட்ட பல அரசியல் சட்டத் திருத்தங்கள் பாராளுமன்றத்தில் பரிசீலிக்கப் படாமலிருக்கும்போது, மேலும் ஒரு திருத்தம் கொண்டுவரவேண்டி யிருக்கிறது; வாக்காளருக்கு வயதைக் குறைக்கும்போது, உடனே மேலும் பத்து கோடி பேர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டிவரும்; வாக்காளர் பட்டியலைப் புதிதாகத் தயாரிப் பதானால், தேர்தலை நடத்துவதற்குக் கால தாமதம் ஆகும்; பணச் செலவும் அதிகமாகும்; வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கையும் அதிகமாகும்; தேர்தல் பணியாளர்களையும் அதிகமாக நியமிக்க வேண்டியிருக்கும்; அதன் காரணமாகத் தேர்தல் தொகுதிகளை வரையறுக்கும் பணிகளை மறுபடியும் மேற்கொள்ள வேண்டிவரும்; தேர்தல் செலவு அதிகமாகும்; இத்தகைய காரணங்களால் வயது வரம்பைக் குறைக்கும் கருத்தை தற்போது இந்திய அரசு கைவிட்டுவிட்டதாகப் பத்திரிகைச் செய்திகளிலிருந்து தெரிய வந்தது. ஆனால், அரசுக்கு எந்தவிதமான தகவலும் வரவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, சோவியத் யூனியன் போன்ற நாடுகளிலும் வாக்காளர் வயதை 18 ஆக நிர்ணயித்திருக்கிறார்கள். இப்படிப் பல நாடுகளில் இருக்கும் போது, தமிழக அரசு இதைப்பற்றி என்ன கருத்தைக் கொண் டிருக்கிறது? 21 வயதை 18 ஆக்கவேண்டும் என்பது அரசாங்கத் தினுடைய கருத்தா?

1975 நவம்பர் 6]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இவைகளெல்லாம் மக்கள் தொகை அடிப்படையில் பார்க்க வேண்டிய விஷயங்களாக இருக்கின்றன. திரு கே. டி. கே. அவர்கள் சோவியத் யூனியனில் உள்ள முறையைப் பற்றி குறிப்பிட்டார்கள். சோவியத் யூனியன் மக்கள் தொகை இந்தியாவின் மக்கள் தொகையைவிட மிகவும் குறைவானது; சற்றேறப்ப ஆறு பங்கு குறைவானது என்றுகூடச் சொல்லலாம். சோவியத் யூனியனில் உள்ளதையெல்லாம் அப்படியே பின்பற்றுகிற உத்தேசம் இல்லை என்று பிரதமரேகூட கூறியிருப்பதை நாம் மனத்திலே கொள்ள வேண்டும்.

திரு. செ. அரங்கநாயகம் : இன்றைக்கு நாட்டில் அமலில் இருக்கும் பல்வேறு சட்டங்களின்கீழ் 18 வயதானவர்கள் மேஜராகக் கருதப்படுகிறார்கள். அவர்களாகவே தனித்து முடிவு எடுக்கும் சந்தர்ப்பமும் அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே, 18 வயது வந்தவர்களுக்கு வோட்டு அளிக்கும் உரிமை தருவது நல்லது, உரியது என்ற வகையில் தமிழக அரசு அதை ஆதரிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த பொதுத் தேர்தலைப் பொறுத்தவரையில், எல்லாம் முடிந்துபோன விவகாரமாக ஆகிவிட்டது. மீண்டும் அந்தப் பிரச்சனை கிளப்பப்படுகிறபோது தமிழக அரசு அதுபற்றி யோசனை தெரிவிக்கும்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, 18 வயது வந்தோருக்கு வோட்டுரிமை அளிப்பதன் மூலமாக பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாகும். அதே நேரத்தில், பரவலாக மக்கள் பிரதிநிதித்துவம் ஏற்பட வாய்ப்பு ஏற்படும். அது சம்பந்தமாக அரசு கணக்கெடுத்து, எவ்வளவு பேர் வருவார்கள் என்று ஆராய்ந்து, இந்த வயது வரம்பைக் குறைக்க முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த வயதுக் குறைப்பு காரணமாக பாராளுமன்றத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாகும் என்பதை நான் உடனடியாக ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஒரு தொகுதியில் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமாகுமே தவிர, உறுப்பினர்களுடைய எண்ணிக்கை அதிகமாகுமா என்பது சந்தேகம்தான்.

[1975 நவம்பர் 6

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே. 21 வயதை 18 ஆகக் குறைக்கலாம் என்ற கருத்து கூறப்படுகிறது. அதேபோல், வயதான முதியவர்களைப் பொறுத்து, 90—95 வயதானவர்கள் வோட்டுச் சாவடிக்குச் செல்வதில் ஏற்படும் வீண் சிரமங்களைத் தவிர்க்க, அப்படிப்பட்டவர்களுக்கு வாக்குரிமையை மறுக்க வற்புறுத்தப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வயது ஆக ஆகத்தான் அவர்கள் நல்ல அரசியல் அனுபவத்தைப் பெறுவார்கள். ஆகையால், வயதானவர்களுக்கு மறுப்பதில் பயன் இல்லை.

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, there is a growing feeling among the great thinkers and also top political leaders that there should be some kind of qualification fixed for granting voting rights to the people. May I know from the Hon. Chief Minister whether he would also consider this, as an important thing?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 21 வயதுத் தகுதியை 18 வயதாக்க வேண்டும் என்பதைத் தவிர, அப்படிப்பட்ட தனித் தகுதிகளைப் பற்றியெல்லாம் யோசிப்பதற்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, வயது வரம்பைக் குறைப்பது பற்றி முதலமைச்சர்கள் மாநாட்டில் விவாதிக்கப்பட்டதா? நம்முடைய அரசாங்கம் அந்த மாநாட்டில் என்ன கருத்தினை அறிவித்தது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முதலமைச்சர்கள் மாநாடு கூட்டப்பட்டால் அதில் நம்முடைய அரசாங்கத்தின் கருத்தை அறிவிக்கலாம். ஆனால், முதலமைச்சர்கள் மாநாடே கூடவில்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, அரசியல் அனுபவத்தை நல்ல முறையில் பெறுவதற்கு 21 வயதே போதுமானது அல்ல என்று கருதப்படும்போது, 18 வயதுள்ளவர்கள் உணர்ச்சி வசப்படுபவர்களாகத்தான் இருப்பார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, மக்களுக்கு 21 வயதே இருந்தால் போதும்—வோட்டளிப்பதற்கு—என்று நம்முடைய அரசு ஆலோசனை கூறுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உணர்ச்சி இப்பொழுதெல்லாம் வயதின் அடிப்படையில் இல்லை. (சிரிப்பு.)

1975 நவம்பர் 6]

திரு. என். கே. பழனிசாமி : எலெக்டோரல் ரோல்ஸ் அடிப் படையில் 21 வயதிலிருந்து 18 வயதாக குறைக்க வேண்டும் என்பது முக்கியமான தேர்தல் சீர்திருத்தம் ; எல்லாக் கட்சிகளும் ஒத்துக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. அப்படியிருக்கும் போது, பல காரணங்களைச் சொல்லி தப்பித்துக்கொள்வதென்பது, இருக்கக்கூடிய அரசியலமைப்புக்கு ஆபத்து வந்துவிடுமே என்கிற பயமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இதைப் பற்றியெல்லாம் மத்திய அரசுதான் ஒரு தீர்மானமான முடிவுக்கு வரவேண்டும். அதற்காகத்தான் கடிதம் எழுதப் பட்டிருக்கிறது. எல்லா அமைப்புகளையும் கலந்தாலோசித்து முடிவுக்கு வரவேண்டும். இந்திய அரசு எடுக்கவேண்டிய கொள்கை என்று நாம் அவர்களுக்குப் பதில் எழுதியிருக்கிறோம். அதற்கு அவர்களிடமிருந்து பதில் வரவில்லை. பத்திரிகைகளில் செய்தி வந்ததைப் பார்த்தோம். 18 வயது என்பதைக் கைவிட்டுவிட்டதாக.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, வாக்களிக்கின்ற உரிமை 21 வயது உள்ளவர்களுக்கு இருக்கிறது. அதே நோக்கில் அந்த உரிமை தேர்தலில் நிற்பவர்களுக்கு, பாராளுமன்றத்திற்கும் சட்டப் பேரவைக்கும், இல்லையே. இதையாவது மத்திய அரசுக்கு எழுதி, 21 வயது இருந்தால் எதிலும் நிற்கலாம் என்று ஆலோசனை கூற அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தேர்தலைப்பற்றியெல்லாம் மிகப் புரட்சிகரமான மாற்றங்கள் வரும் என்று நாடு எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, இப்போது இதைப்பற்றி யெல்லாம் யோசிப்பது நல்லது அல்ல.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இந்த வயது குறித்து பத்திரிகையில் வந்த செய்தியை முதலமைச்சர் அவர்கள் படித்துக்காட்டினார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது, 1976-ல் 18 வயதா, 21 வயதா என்று முடிவு எடுக்கப்படாமலிருப்பதாகத் தெரிகிறது. 1976-ல் தேர்தல் வருவது நிச்சயம் என்று நம்முடைய அரசுக்கு மத்திய அரசிடமிருந்து செய்தி வந்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாலையில் மழைவரும் என்பதைப் போல எப்பொழுது தேர்தல் வரும் என்று அறிக்கை எதுவும் இதுவரை வரவில்லை.

[1975 நவம்பர் 6

திரு. எ. சுப்பிரமணியம்: இந்த 21 வயதை 18 வயதாகக் குறைப்பது பற்றி இந்த சட்டமன்றத்தினுடைய கருத்தினை அறியும் பொருட்டு இங்கே அதுபற்றி விவாதிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? சட்ட மன்ற உறுப்பினர்களின் கருத்தை அறிந்து அதை மத்திய அரசுக்கு அறிவிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்படிப்பட்ட கருத்துக்களையெல்லாம் அறியவேண்டும் என்பது டெல்லியில் ஆளும் கட்சியாக இருப்பவர்களின் எண்ணமாக இருந்திருக்கவேண்டும். அந்தக் கட்சியைச் சார்ந்த திரு. சுப்பிரமணியம் அவர்களுக்கு அந்த எண்ணம் இருக்கிறது. அந்த எண்ணம் டில்லியில் உள்ளவர்களுக்கு இருந்திருந்தால், எல்லாச் சட்ட மன்றங்களும் அது பற்றி விவாதித்து, கருத்துக்களைத் தெரிவித்ததற்குப் பிறகு இது குறித்து முடிவு எடுத்திருப்பார்கள். ஆனால், அதற்கு முன்பே முடிவு எடுத்துவிட்டார்கள்.

சாத்தப்பாடியில் பிற்பட்டோர் மாணவர் இல்லம்.

* 207. **வினா—திரு. மு. மாரிமுத்து**: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சாத்தப்பாடியில் ஒரு பிற்பட்டோர் மாணவரில்லம் துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சேலம் மாவட்டம், சாத்தப்பாடியில் ஒரு பிற்பட்டோர் மாணவரில்லம் இக்கல்வியாண்டிலேயே துவக்க அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. மு. மாரிமுத்து: தலைவர் அவர்களே, இப்போது இந்த இல்லம் ஒரு வாடகைக் கட்டிடத்தில் நடக்கின்றது. புதிதாகக் கட்டிடம் கட்டுவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, வாடகைக் கட்டிடத்திலாவது ஒரு இல்லம் தேவை என்று முதலில் வற்புறுத்தப்பட்டது. இல்லம் வந்ததும் புதிய கட்டிடம் வருமா என்று கேட்கப்படுகிறது.

1975 நவம்பர் 6]

திரு. தி. பொன்னுமலை: தலைவர் அவர்களே, சாத்தப்பாடிக் கிராமம் பின் தங்கிய மலைப் பகுதி கிராமம். எனவே அந்த கிராமத்திற்கு மாணவர் இல்லம் விரைவாக ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவ்வில்லம் ஜூலை மாதத்தில் ஏற்படுத்தப்பட்டுவிட்டது என்பதை என் பதிலில் சொன்னேன்.

Broadcasting Unit

* 208 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :--

(a) whether the students of the Tamil Nadu Polytechnic in Madurai have fabricated a broadcasting unit in January 1975; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: *(அ) ஆம்.*

(இ) இறுதி ஆண்டு மின் இயல்துறை மாணவர்கள் 10 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு ஒலி பரப்பக்கூடிய 10 வாட் ஒலி பரப்பி ஒன்றை சுமார் ரூபாய் 500 செலவில் செய்துள்ளார்கள்.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister whether such broadcasting units (watts transmitter) discovered by these electrical engineering students in the Madurai Polytechnic will be popularised in the entire State?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பல் தொழில் நுட்பப் பள்ளிகளில் பயிலும் எலக்டிரிகல் என்ஜினியரிங் மாணவர்களுக்கு ஒரு பிராஜெக்ட் கொடுக்கப் பட்டது. அதில் ஒன்று தான் ரூ. 500 செலவில் 10 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு ஒலி பெருக்கக்கூடிய டிரான்ஸ்மிட்டர் ஒன்றை கண்டு பிடித்திருக்கிறார்கள் அதை ஒரு சுற்றடுக்கில் உள்ள மாணவர்களுக்குப் பயன் படக்கூடிய அளவுக்கு செயல்படுத்த வேண்டும் என்பது தான் நோக்கம். அதை ஒரு ஸ்டேஷனை வைக்க முடியாது. அப்படி வைப்பதற்கு இந்திய சர்க்கார் அனுமதி வேண்டும். பெரிய அளவுக்கு ஒரு திட்டம் தீட்டவேண்டு மானால் அதற்கு அதிக செலவாகும். மாணவர்கள் ரூ. 500 செலவில் ஒரு டிரான்ஸ்மிட்டரைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவர்களின் திறமை பாராட்டப்பட்டுள்ளது.

[1975 நவம்பர் 6

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, இதைக் கண்டு பிடித்த மாணவர்கள் பாராட்டப்பட்டதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். படிப்பு நேரங்களைத் தவிர மற்ற ஓய்வு நேரங்களில் இவ்விதமான நல்ல முறையில் நேரத்தை செலவிட இன்சென்டிவ் ஏதாவது பரிசாகக் கொடுக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆண்டு தோறும் பாலிடெக்னிக்கில் புதிய முறைகள் கண்டு பிடிப்பவர்களுக்கு இன் சென்டிவ் என்ற முறையில் பரிசுகள் வழங்கும் திட்டம் உள்ளது. இந்தப் பரிசு வழங்கப்பட்டதா வழங்கப்படுமா என்பதற்கான குறிப்புகள் இப்போது இல்லை. ஆண்டுதோறும் ஒரு பிராஜெக்ட், அதாவது டிரான்ஸ்மிட்டர் ஏ. சி. வோல்ட்டேஜ் என்ற அளவுக்கு ஒரு பிராஜெக்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே பாலிடெக்னிக் மாணவர்கள் பாட்டரியில் கார் ஓட்டமுடியும் என்று நிரூபித்துக் காட்டினார்கள். அவர்களுக்கு ஏற்கனவே பரிசுகள் வழங்கப் பட்டன. பெரிய அளவில் கமர்சியல் அடிப்படையில் செய்ய முடியுமா என்பதை மாணவர்களும், ஆசிரியர்களும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மதுரை பாலிடெக்னிக்கின் மாணவர்கள் சிறப்பான ரிசர்ச் செய்திருக்கிறார்கள். இந்த மாணவர்களின் லிஸ்டை எடுத்து வேறு மாநிலத்திற்கு பயிற்சி பெறுவதற்கோ அல்லது அவர்களின் அனுபவத்தை தெரிவிப்பதற்கோ செல்லுவதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்களுக்கும் தேவையான ஊக்கம் அளிக்கலாம். பாலிடெக்னிக் முதல்வர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அந்த வகையில் விண்ணப்பித்தால் அரசாங்கம் அந்த வகையில் ஊக்கம் அளிக்கும்.

தமிழ் சுருக்கெழுத்து ஆராய்ச்சி நிலையம்.

* 209 வினா—**திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு கல்வி-சுற்று லாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தமிழ் சுருக்கெழுத்து வளர்ச்சி ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

1975 நவம்பர் 6]

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, தமிழ் சுருக்கெழுத்து பற்றி ஆராய்ச்சி செய்யக்கூடிய குறிப்பு இல்லையென்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைய்தினம் உலகம் பூராவும் சுருக்கெழுத்து வளர்ந்திருப்பது பிட்மென்ஸ் சுருக்கெழுத்து முறையின் ஆராய்ச்சியின் விளைவாகத்தான். அதாவது, பிரேசஸ், இடியம்ஸ், ஸ்பீட் கட்டிங், அட்வான்ஸ்ட் பிரேசாகிராபி கண்டுபிடித்ததன் விளைவாக ஒரு நிமிடத்திற்கு 200 வார்த்தை எழுதக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் எந்தவித ஆராய்ச்சியும் செய்யாததால் பழங்காலத்தில் இருப்பது போல் தமிழ் சுருக்கெழுத்தில் 80, 100 வார்த்தைகள் தான் எழுத முடிகிறது. ஆகவே உடனடியாக தமிழ்ச் சுருக்கெழுத்தில் ஆராய்ச்சி செய்வதற்காக அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்துவாரா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதுவரையில் அதற்கான செயற்குறிப்பு எதுவுமில்லை. ஆனால் தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. தமிழ் சுருக்கெழுத்து அகராதி, தமிழ் சொற்றொடர் அகராதி ஆகியவற்றைத் தயாரிக்கும் பொருட்டு தமிழ் வளர்ச்சி இயக்குநர் தலைமையில் ஒரு அறுவர் குழுவை அமைத்து, ஆராய்ந்து வருகிறது. தமிழ்ச் சுருக்கெழுத்து என்ற முறையில் தனி ஆராய்ச்சி நடத்துகிற நிலைமை ஏற்பட்டால் அதற்குத் தேவையான குறிப்புகளை மாண்புமிகு உறுப்பினர் தந்தால் அவைகளை ஆராயலாம்.

திரு. எஸ். வடிவேல் : தமிழ்ச் சுருக்கெழுத்து ஆராய்ச்சி செய்வதோடு இன்றைக்கு நம் அரசின் மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு போன்ற பல குழுக்களின் அறிக்கைகள் தமிழில் அச்சிட்டுக் கொடுக்கப்படுவதில்லை. ஆங்கிலத்தில்தான் அச்சிட்டுக் கொடுக்கப்படுகின்றன. அம்மாதிரி கொடுக்காமல், தமிழ் அன்னையை முதற்படியில் வைத்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்களே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இந்தக் கேள்வியின் கீழ் வராது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தமிழ்ச் சுருக்கெழுத்து வளர்ச்சி அடைவதற்குத் தேவையான பயிற்சியாளர்கள் இல்லை

யென்று சொல்லப்படுகிறதே, உண்மையா? தேவையான பயிற்சியாளர்களை உருவாக்க அரசாங்கம் தனி முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. தனியார் துறைகளில் பல்வேறு இடங்களில் இந்தப் பயிற்சி தருவதற்கு நிறுவனங்கள் இருக்கின்றன. அரசாங்க அலுவலர்கள் அதிகாரிகள் போன்றவர்களுக்குப் பயிற்சி அளிக்க சிலபல முறைகள் இருக்கின்றன.

திரு. ஏ. எம் இராஜா: தமிழ்ச் சுருக்கெழுத்து வளர்ச்சிக்கு இது வரையிலும் எந்தக் கமிட்டியும் போடப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அரசாங்கத்தின் சார்பில் முயற்சி மேற்கொள்ளப்படாவிட்டால் இது வேகமாக வளர்ச்சியுறாது. எனவே சுருக்கெழுத்தில் பயிற்சி பெற்றவர்கள், திறமையுள்ளவர்கள் இவர்களை எல்லாம் வைத்து ஒரு கமிட்டி போட்டு அதன் மூலம் 2 அல்லது 3 ஆண்டு காலத்திற்குள் தமிழ் சுருக்கெழுத்தில் ஒரு டைரக்டரி, பாடப் புத்தகம் தயார் செய்வதற்கு அரசு முன் வருமா? அந்தக் கமிட்டி போடும்போது நம்முடைய உறுப்பினர் வீராசாமி தமிழ் சுருக்கெழுத்தில் உயர்நிலை ஹையர் பாஸ் செய்திருக்கிறார்கள். இதுபோல் சட்டப் பேரவைத் துறையிலும் வேறு சிலர் பாஸ் செய்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்களையெல்லாம் அந்தக் கமிட்டியில் போட்டு அரசு அமைக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: முதலிலே குறிப்பிட்டேன், அதற்கான பாடப்புத்தகம் இருக்கிறதென்று. அச்சிடப்பட்டு 5 ஆயிரம் பிரதிகள் வெளிடப்பட்டிருக்கின்றன. மீண்டும் அச்சிடுவதற்கும். அகராதிகள் தயாரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு வீராசாமி தெரிவித்தது போல் தமிழ்ச் சுருக்கெழுத்து ஆராய்ச்சி செய்வதற்கு ஒரு தனி அமைப்பு ஏற்படுத்த முடியுமா என்பது பற்றி செயற்குறிப்பு இல்லையென்று குறிப்பிட்டேன். ஆராய்ச்சி செய்ய வழிவகைகள் இருக்கின்றன. வேறு பல மொழிகளில் ஆராய்ச்சி செய்து சிறந்த பலன்கள் ஏற்பட்டுள்ளன என்று குறிப்பிட்டார்கள். அது பற்றி குறிப்புகள் தந்தால் அது பற்றி ஆராயலாம் என்று குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் வீராசாமியை அந்தக்

1975 நவம்பர் 6]

கமிட்டியில் இடம் பெற வைப்பது பற்றி மாண்புமிகு திரு. ராஜா சிபாரிசு செய்து தான் போட வேண்டிய அவசியம் இல்லை. திரு. வீராசாமி அவர்கள் இங்கு இருப்பதால் அவர்களே வேண்டுகோள் விடுக்கலாம்.

கலைமாமணி பட்டம் பெற்றவர்கள்.

* 210 வினு—**திரு. கா. வேழவேந்தன்** : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் மூலம் 'கலைமாமணி' பட்டம் பெறுவோர்க்கு ரொக்கப்பரிசு வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்படுகின்றதா ?

(இ) ஆம் எனில், இதுவரை அப்படி வழங்கப்பட்டவர்களின் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இதுவரை கீழ்க்கண்ட பத்து பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர்களின் பெயர்கள் :—

1. திருமதி எம். எஸ். திரௌபதி (நடிகை)
2. திரு. நாரண துரைக்கண்ணன் (நாடக ஆசிரியர்)
3. திருமதி எஸ். ஆர். ஜானகி (நாடக நடிகை)
4. திரு. டி. என். சுப்ரமணிய பாகவதர் (ஹரிகதா வித்வான்)
5. திரு. மன்னர்குடி நடேசபிள்ளை (மொகர்சிங்)
6. திரு. இராகவ வாத்தியார் (மதுரை) (நாடக பாடலாசிரியர்)
7. திரு. ஓ. என். கிட்டு (நாடக நடிகர்)
8. திரு. சிவஞான பாண்டியன் (தெருக்கூத்து)
9. திரு. பி. ஐ. நடேசபிள்ளை (சென்னை நாதசுர வித்வான்)
10. திரு. சி. தங்கையா (செல்வல்குளம், வில்லுப்பாட்டு)

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, நலிந்திருக்கிற கலைஞர்களுக்கு கலைமாமணி பட்டத்தோடு ரொக்கப் பரிசு கொடுத்த வகையில் பத்துப் பெயர்களை அமைச்சர் அவர்கள்

சொன்னார்கள். இவர்களோடு இந்த நாடகத் துறை, நாதஸ்வரக் கலைத்துறை, இலக்கியத் துறையில் ஏற்கனவே ஈடுபட்டு புகழ் வாய்ந்த கலைஞர்கள் இப்போது நலிந்துள்ளார்கள்; அவர்களுக்கு இயல் இசை நாடகமன்றம் மூலம் இந்தப் பரிசுத் தொகையை அளிப்பதற்கு அரசு ஆராய முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தக் கலைஞர்களில் வயதாகி வறுமையில் வாடுகிறவர்களுக்கு மாதம் ரூ. 75 முதல் 100 என்ற அளவுக்கு பென்ஷன் வழங்குவது என்ற முறையில் 500 பேருக்கு நாம் தனியாக வழங்குகிறோம். அதைத் தவிர, அந்தந்தத் துறைகளில் இருக்கிற சிறந்தவர்களைத் தேர்ந்தெடுத்து ஆண்டுதோறும் ஒவ்வொரு துறையிலும் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவருக்கு கலைமாமணிப் பட்டத்தையும் வழங்கி பொற்பதக்கம் வழங்கி, சான்றிதழ் வழங்குகிற நிகழ்ச்சி தொடர்ந்து 15 ஆண்டுகளாக நடைபெறுகின்றது. இதுவரையில் 352 கலைஞர்கள் கலைமாமணி பட்டம் பெற்று, பொற்பதக்கம் பெற்றுள்ளனர். கலைமாமணி என்று பட்டம் பெற்றவர்கள், அதன் பிறகு, மேலும் வறுமையில் ஆழ்ந்திருந்தால், ஓரளவுக்கு அவர்களை ஊக்குவிக்க, சென்ற ஆண்டு ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. அவர்களில் ஆண்டுதோறும் 10 பேரைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொருவருக்கும் ஆயிரம் பொற்கிழி கொடுக்க வேண்டுமென்று முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதுபோல் ஒவ்வொரு ஆண்டும் பத்து பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, பொற்கிழி வழங்கப்பட்டு வருகிறார்கள். அதற்கென்று மாண்புமிகு டாக்டர் கலைஞர் முதல்வர் அவர்கள் முதலமைச்சர் நிதியிலிருந்து ரூ. 1 லட்சம் வைப்பு நிதியாக ஒதுக்கியிருக்கிறார்கள். அதிலிருந்து ஆண்டுதோறும் பத்தாயிரம் ரூபாய் வட்டி கிடைக்கும். 10 கலைஞர்களுக்கு, ஆயிரம் ரூபாய் விதம்—தொடர்ந்து வருகிற ஆண்டுகளிலும் தர ஏற்பாடு செய்யப்பட்டு சென்ற ஆண்டு தொடங்கப்பட்டு இருக்கிறது. இந்த ஆண்டு பத்து கலைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திரு. எஸ். வடிவேல் : கலைமாமணி என்ற பட்டத்தை யாருக்கு வழங்குவது என்பதை ஒரு குழு அமைத்து பரிசீலித்து சிபார்சு செய்கிறதா? அல்லது அரசாங்கமே நேரடியாகப் பரிசீலிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

1975 நவம்பர் 6]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இயல், இசை, நாடகம் என்பதாக மூன்றுதுறை வல்லுநர்களையும் இணைத்து ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். அவர்கள் கலைமாமணி பட்டம் பெறுவதற்குத் தகுதி உடையவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள்—புகழ் பெற்றவர்களாக இருக்க வேண்டும்—வயதானவர்களாக இருக்க வேண்டும்—வறுமை உடையவர்களாக இருக்க வேண்டும். ஆண்டுதோறும்—இவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற 10 பேர்களுக்கு வழங்கப்படுகிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : கலைமாமணிப் பட்டம் பெற்றவர்களுக்கு பொற்கிழி வழங்குவதுபோல—மேல்நாடுகளில் பாடுகிற கலைஞர்களது குரலையே இன்ஷூர் செய்கிறார்களே, அதன்மூலம் அவரது குரல் நயம் குறைந்து, மூப்படைகிறபோது கணிசமான தொகை இன்ஷூரன்ஸ் மூலம் கிடைக்க வழி செய்யப்பட்டிருக்கிறதே. அதுபோல நம்முடைய தமிழகத்திலும் ஏற்பாடு செய்ய முன்வருவார்களா? அரசாங்கமே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. அப்படிச் செய்வதாக இருந்தால் அந்தப் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா என்பது அடுத்ததாகக் கவனிக்க வேண்டிய ஒன்று.

காஞ்சிபுரம் புற்றுநோய் நிலையம்.

* 211 **வினு—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு மக்கள்-நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக சுகாதார நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் தமிழ்நாடு அரசு காஞ்சிபுரத்தில் புற்றுநோய்த் தடுப்புத் திட்ட நிறுவனத்தை உருவாக்கி வருகின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) தமிழக அரசு 1969 ஆம் ஆண்டு மார்ச் மாதம் உலக சுகாதார நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் காஞ்சிபுரத்தில் அறிஞர் அண்ணு நினைவு புற்றுநோய் நிலையத்தை அமைத்து புற்றுநோய் கட்டுப்பாடு முன்னேடி திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகிறது.

திரு. கா. வேழவேந்தன் : இந்தச் சீரிய திட்டம் தாமதப்பட என்ன காரணம்? விரைவுபடுத்தத் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : புற்றுநோய் தடுப்புத் திட்டம் என்ற முறையில், புற்றுநோய்த் தடுப்பு நிலையத்திலே, அதுவும் கருப்பையின் வாய்ப்புறத்தில் தோன்றுகிற புற்றுநோய் பற்றி, நோய் தோன்றுவதற்கு முன்கூட்டியே ஏற்படுகிற அடையாளங்களைப் பரிசோதனை செய்து, மருந்துகள் கொடுத்து, அதனைத் தடுக்கின்ற பணி நடந்து கொண்டிருக்கிறது. இது வீடு வீடாகச் சென்று—இருபது வயதிற்கு மேற்பட்ட எல்லாப் பெண்களையும் கேள்வி கேட்பதன் மூலம் உடல் கூற்றினை அறிந்து கொண்டு, ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

வெறும் தடுப்புத் திட்டம் என்ற முறையில் பணியாற்றினால் போதாது, புற்றுநோய் கண்டவர்களுக்கு விரிவாகச் சிகிச்சை அளிக்கப்பட வேண்டுமென்று, ஏறத்தாழ 200 படுக்கைகள் கொண்ட புற்றுநோய் மருத்துவ நிலையம் காஞ்சிபுரத்தில் நடந்து கொண்டிருக்கிறது. அதில் சிறிது தாமதம் இருக்கிறது. அது நிறைவேற்றிய பின்னர், சிகிச்சை வழங்கும் பணி தொடங்கும்.

ஊத்துக்கோட்டை மருந்தகக் கட்டடம்.

* 212 வினா. திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், ஊத்துக்கோட்டை அரசினர் மருந்தகத்திற்குக் கட்டடம் கட்டும் திட்டம் எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது நலத் துறை இயக்குநருடைய ஆய்வில் இருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன் : இந்த மருந்தகம் கட்டுவதற்கு ஏற்கனவே 30 ஆயிரம் ரூபாய் அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது. இடம் கிடைக்கவில்லை என்பதற்காக தாமதப்படுகிறது. இப்போது வேளாண்மைத் துறையினர் இடத்தை தருவதாக அறிவித்திருக்கிறார்கள். அந்த இடத்தில் இந்த ஆண்டாவது கட்டிடத்தை கட்ட அரசு முன்வருமா?

1975 நவம்பர் 6]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதற்கு நிதி கூட கொள்கையளவில் ஒதுக்கப்பட்டாலும், இன்னும் இடம் அரசிடம் ஒப்படைக்கப்படவில்லை. நிலம் ஒப்படைக்கப்படுமானால் தொடர்ந்து அதற்கான கட்டிடப் பணிகள் நடைபெறும்.

கிருஷ்ணராயபுரம் சுகாதார நிலையக் கட்டடம்

*213 **வினா. திரு. பெ. சௌந்தரபாண்டியன்** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தின் ஒரு பகுதி 1975 இல் திடீரென இடிந்து விழுந்து விட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) வாடகைக் கட்டிடத்தின் ஒரு பகுதி 22-2—75 காலை இடிந்து விழுந்ததாக திருச்சி மாவட்ட சுகாதார அலுவலர் தெரிவித்துள்ளார். இந்த இடிபாட்டினால் ஆரம்ப சுகாதார நிலைய மருந்துகள் வைத்திருந்த அறை சேதம் அடைந்தது என்றும் சில மரச் சாமான்கள் சேதம் அடைந்தன என்றும் கூறியுள்ளார். மேற்படி விபத்து இயற்கையானதே என்றும் வெடிவைப்போ அல்லது வேறு விதமான தீய நோக்கத்தோடோ செய்ததில்லை என்றும் காவல் துறையினர் 9—5—75 ஆம் தேதியிட்ட அறிக்கையில் கூறியுள்ளனர்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த வாடகைக் கட்டிடம் உறுதியான கட்டிடம் தான். இயற்கையின் கோளாறினால்தான் இடிந்து விழுந்தது என்று சொல்லப்படுவது பொருத்தமாக இல்லை. இப்படி இடிந்து விழுந்ததற்கு என்ன காரணம் என்பதை அரசாங்கம் இனிமேலாவது ஆராய முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நல்ல உறுதியான கட்டிடமாக இருந்த காரணத்தினால்தான், மொத்தமாக இடிந்து விழாமல் ஓரிடத்தில் மட்டும் இடிந்து விழுந்திருக்கிறது. இதுபற்றி போலீசாரும் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இது இயற்கைக் கோளாறினால் இடியவில்லை என்றால், வேறு என்ன காரணம் என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிந்தால் எழுதி அனுப்ப வேண்டும்.

Physically handicapped for medical profession.

* 214 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government have issued any instruction providing priorities for the physically handicapped candidates for admission into the Medical Colleges in the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) உடலூன முற்ருேர் மருத்துவப் பணிக்குத் தகுதியுள்ளவர்களாக இருக்கவியலாது என்பதால், அவர்களுக்கு முன்னுரிமை எதையும் அரசு அளிக்கவில்லை.

திரு. என். டென்னிஸ்: பிறவியிலேயே உடல் ஊனமுற்றவர்கள் பல கஷ்டங்களை அனுபவிக்கிருர்கள். அவர்களைக் காப்பாற்றுவது அரசின் கடமையாதலால், மெடிகல் காலேஜ் அட்மிஷனுக்கு, இவர்களுக்குப் ப்ரையாரிடி கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மருத்துவக் கல்லூரி அட்மிஷனுக்கு உடல் நன்ருக இருப்பவர்களே, மெடிகல் எக்சாமினேஷன் செய்யப் பெற்று, மெடிகலி பிட் என்ற சர்டிபிகேட்டைப் பெற்ற பின்னரே சேர்த்துக்கொள்ளப் படுகிருர்கள். இப்படி மருத்துவர்களாக வரக்கூடியவர்கள் மனவலிமை, உடல் வலிமை பெற்றவர்களாக அமைவது சமுதாயத்திற்கு லாபமே தவிர உடல் ஊனம் உள்ளவர்களே டாக்டராக வந்து சிகிச்சை அளிக்கிறபோது இவர்களிடத்து வருகிற நோயாளிகளுக்கு என்ன நம்பிக்கை ஏற்பட முடியும். முன்பு உயரம் குறைந்தவர்களை செவிலியர்களாகத் தேர்ந்தெடுத்துவிட்டார்கள், இந்த செவிலியர்களிடம் நம்பிக்கையோடு உதவியைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை அங்கங்கே ஏற்பட்டது. அதன்காரணமாக, செவிலியர்களுக்குக் கூட குறைந்த அளவு உயரம் வைக்கப்பட்டிருக்கிறது. உடல் ஊனமுற்றவர்களுக்கு எதிலே முன்னுரிமை கொடுப்பதனுல் சமுதாயத்திற்கு நன்மை கிடைக்குமோ, அதில்தான் கொடுக்கலாமே தவிர எல்லாத் துறைகளிலும் முன்னுரிமை கொடுப்பது என்பது பொருந்தாது

1975 நவம்பர் 6]

கரூர்—மைலம்பட்டி சாலையில் பாலம்.

* 215 வினா. திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணி துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கரூர்—மைலம்பட்டி சாலையில் உள்ள லிங்கத்தூர் வாரியில் பாலம் கட்டும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: போதுமான நிதி வசதி இல்லாததால், இப்பாலம் கட்டும் திட்டம் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

(முற்பகல் 9.30)

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: திட்ட மதிப்பீடு தயாரிக்கப் பட்டு ஏறத்தாழ 6 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் நிதிநிலை சரி இல்லை என்றால் இது பொருத்தமாக இல்லை. எனவே, இந்தத் திட்டத்தை உடனடியாக எடுத்து நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 1975 ஆம் ஆண்டு பரிந்துரை செய்யப்பட்டது. ரூ. 7 லட்சம் தேவைப்படும் என்று தலைமைப் பொறியாளர் தெரிவித்திருக்கிறார். நிதிநிலை சரியில்லாத காரணத்தால் இது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திருப்புவனம் கண்மாய்

* 216 வினா. திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்புவனம் கண்மாயின் கீழுள்ள ஆயக்கட்டுகள் எத்தனை ஏக்கர்கள்?

(இ) இந்த ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் கண்மாய் மராமத்து செய்யும் செயற்குறிப்பு அரசின் ஆய்விலுள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் மதிப்பீடு என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) திருப்புவனம் கண்மாயின் கீழுள்ள ஆயக்கட்டு 2,030 ஏக்கர்கள்.

(இ) ஆம்.

(உ) ரூ. 30,000.

பெண் கிராம முன்சீப்புகள்.

* 317 வினா. **திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம முன்சீப்களாக பெண்களும் நியமிக்கப் பட்டுள்ளார்களா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) ஒன்பது பெண்கள் கீழ்க்கண்ட மாவட்டங்களில் கிராமத் தலைவிகளாக (கிராம முன்சீப்களாக) நியமிக்கப் பட்டுள்ளனர்:—

மாவட்டம்	எண்ணிக்கை
கோவை	1
சேலம்	2
திருநெல்வேலி	2
வட ஆற்காடு	3
மதுரை	1
மொத்தம்	9

திரு. வை. பாலசுந்தரம்: பெரும்பாலான கிராமங்களில் அரிசனங்கள் கிராம முன்சீப்பாக இல்லை. அரிசனங்களை ஊக்குவிக்கின்ற முறையில் அரிசனங்களை அதிகமாக கிராம முன்சீப்களாக நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1975 நவம்பர் 6]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எந்தெந்த கிராமங்களில், விதிகளின்படி, பொறுப்புகளை வகிக்க பொறுத்தமாக, அரிசனங்கள் முன்வருகிறார்களோ, அவர்கள் நியமிக்கப்படுவதில் ஆட்சேபணை கிடையாது.

ஒட்டன் கால்வாய் மராமத்து

*218 **வினா. திரு. எம். முத்தையா:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரம் வட்டம், கீழமங்கலம் கிராமத்தில் உள்ள ஒட்டன் கால்வாய்க் கரைகளைச் செப்பனிடும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கீழமங்கலம் ஊராட்சியைச் சேர்ந்த ஒட்டன்கால்வாயிலிருந்து சிப்பிகுளம் கண்மாய்க்கு செல்லும் பிரிவு கால்வாய் ஓரத்தில் ஏற்பட்ட உடைப்பும் ஒட்டன்காலில் ஏற்பட்ட உடைப்பும் மராமத்து செய்யப்பட்டு 16—8—1975-இல் முடிவு பெற்றது.

திரு. எம். முத்தையா: ஒட்டன்காலிருந்து கீழமங்கலம் பெரிய கண்மாய்க்கு நீண்ட காலத்திற்கு முன்னால் வெட்டப்பட்டது. இதுநாள் வரை அதை மராமத்து செய்யவில்லை. இப்போதாவது அதை மராமத்து செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதைப் பற்றி பொதுப் பணித் துறைக்கு எழுத வேண்டும்.

தூத்துக்குடி அனல் மின் திட்டம்.

*219 **வினா. திரு. கா. வேழவேந்தன்:**
திரு. என். கே. பழனிசாமி: மாண்புமிகு

தொழில்—மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி அனல் மின் திட்டத்தின் பணிகள் எந்நிலையில் உள்ளன?

(இ) எப்போது உற்பத்தி தொடங்கப்படும்?

[1975 நவம்பர் 6

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) தூத்துக்குடியில் அனல் மின் நிலையம் ஒன்றை அமைப்பதற்கு இந்திய அரசின் திட்ட ஆணைக்குழு தனது ஒப்புதலை அளித்தது.

துறைமுகத் திட்ட அதிகார மன்றத்திடமிருந்து 360 ஏக்கர் பரப்புள்ள நிலம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. கட்டுமானங்கள் அமைய வேண்டிய இடங்கள் முளையடிக்கப்பட்டு அடையாளமிடப் பட்டுள்ளன. பென்ச் மார்க், கிரிட் பில்லர் (இணைப்புத் தூண்) ஆகியவற்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இடம் தெரிந்தெடுப்பதற்கான ஆய்வுகள் நடந்தேறி வருகின்றன. நீரைக் குளிர வைப்பதற்கான இயந்திரத்திற்கும் கரியை எடுத்துச் செல்வதற்கான கருவிக்குமுரிய சாத்தியக் கூறு அறிக்கைகள் ஆலோசகர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளன. கொதிகலன்கள், சுழல் மின்உற்பத்தி இயந்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கான ஆணைகள் அனுப்பப்பட்டுள்ளன.

(இ) முதலாவது பிரிவு 1978 டிசம்பரிலும் இரண்டாவது பிரிவு 1979 ஜூலையிலும் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, தூத்துக்குடி அனல் மின் நிலையத் திட்டப் பணிகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேறு ஏதாவது தடைகள் இருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இதில் தடைகள் ஏதுமில்லை. நிதி கிடைப்பது தான் கஷ்டமாக இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, கேள்வியில் (பி) பிரிவுக்கு பதில் சொல்லப்படவில்லை. இந்த அனல் மின் நிலையம் எப்போது கமிஷன் செய்யப்படும்? இதற்குத் தேவையான உபகரணங்களை ராஞ்சி போன்ற பொதுத் துறையிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு வழி இருக்கிறதா ? அல்லது வெளி நாடுகளிலிருந்து தான் இறக்குமதி செய்ய வேண்டுமா ? இந்த வருஷம் மத்திய சர்க்கார் இதற்கு எவ்வளவு உதவி அளித்து இருக்கிறது என்பதை அறியலாமா ?

1975 நவம்பர் 6]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, தூத்துக்குடி அனல் மின் திட்டம் 420 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஒரு திட்டம். இதற்கு ஏற்படக்கூடிய செலவு 110 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போது 210 மெகாவாட் மின் உற்பத்தி செய்கின்ற அளவில் யந்திரங்களைக் கொண்ட ஒரு திட்டத்தை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸ் நிறுவனத்திடமிருந்து பாய்லர்களை வாங்க முடியும் என்று முடிவு செய்திருக்கிறார்கள். பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்திற்கு முன் பணமாக ரூ. 4,42,00,000 கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மத்திய அரசு ரூ. 10 கோடி ஒதுக்கினார்கள். நாம் இன்னும் 9 கோடி கேட்டோம். ரூ. 1 கோடி கொடுத்திருக்கிறார்கள். ஆக, ரூ. 11 கோடி தான் செலவிடப்பட சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

திரு. எம். தேவராசன்: தலைவரவர்களே, 20 அம்சத் திட்டத்தில் இந்த மாதிரியான திட்டங்களுக்கு பொதுத் துறைக்கு முன்னிடம் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசு கூறியிருக்கிறது. எனவே மத்திய அரசிடம் மேற்கொண்டு பணத்தை கடனாகவாவது கேட்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நாங்கள் ரூ. 9 கோடி கேட்டோம். அவர்கள் கொடுத்தது ரூ. 1 கோடி.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): சில தினங்களுக்கு முன்பாக நமது முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தைப் பற்றி அளித்த விசை அறிக்கையில் இந்த மின் நிலையம் 1979-இல் தான் முடியக்கூடிய நிலை இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். மத்திய அரசு அண்மையில் எல்லா மாநிலங்களுக்கும் ஏறத்தாழ ரூ. 300 கோடிக்கு மேல் ஒதுக்கி இருந்தாலும் நமது மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பது மிகக் குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். எனவே, இந்தத் துறையைச் சேர்ந்த அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று இந்த விவரங்களை சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சரிடத்தில் எடுத்துச் சொல்லி அதிகத் தொகையைப் பெறுவதற்கு முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1975 நவம்பர் 6

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, ஏற்கனவே நமது முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமரிடத்தில், ஒதுக்கி இருக்கிற தொகை போதாது என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மேலும் நமது அதிகாரிகள் டெல்லி போகும்போதெல்லாம் அங்கே இருக்கிற அதிகாரிகளைச் சந்தித்துச் சொல்லி இருக்கிறார்கள். நான் சில மாதங்களுக்கு முன்பு டெல்லி போன போது சம்பந்தப்பட்ட அமைச்சரைப் பார்த்துச் சொல்லி இருக்கிறேன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா: இந்த மின் உற்பத்தி நிலையம் தொழில்களுக்கு மிகவும் முக்கியமானது. எனவே, இந்த நிலையத்திற்காக பப்ளிக் லோன் ஃப்ளோட் பண்ணுவதற்கு மத்திய அரசிடம் அனுமதி பெறுவது பற்றி யோசிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதைப் போன்ற செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

திரு. எஸ். வடிவேல்: இந்த மின் நிலையத்தின் உற்பத்தி எப்போது துவங்கும் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 1978 ஆம் ஆண்டு டிசம்பரில் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, மத்திய அரசு இந்தத் திட்டத்திற்கு எத்தனை கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறது? இதில் மாநில அரசின் பங்கு எவ்வளவு? அதே நேரத்தில் நமது தமிழ் நாட்டில் இன்னும் பல்வேறு மின்சாரத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றனவா? அதற்கெல்லாம் சேர்த்து மொத்தமாக எவ்வளவு கோடி ரூபாய் மத்திய அரசு கொடுத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மற்ற திட்டங்களைப் பற்றிய விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. இந்த ஆண்டு மத்திய அரசை ரூ. 19 கோடி கேட்டோம். ரூ. 11 கோடி தான் கொடுத்திருக்கிறது.

1975 நவம்பர் 6]

Power house near Paraliaru

* 220 Q.—THIRU T. GANAPATHY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state whether there is a proposal to construct a power house with a view to utilise the waters of the Paraliaru above the Perunchani Dam in Kanniyakumari district?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்தத் திட்டம் எப்போது எடுத்துக் கொள்ளப்படும்? திட்டத்திற்கு ஆகும் செலவு எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இந்த பரலியாறு மின் நிலையத் திட்டத்தைப் பொறுத்த வரையில் இந்திய மின் விசைக் குழுவிற்கு 1971-ஆம் ஆண்டு மார்ச் மாதம் மின் வாரியம் ஒரு திட்டத்தை அனுப்பியது. அத்திட்டம் மத்திய மின்சாரக் குழுவின் பரிசீலனையில் இருக்கிறது. அவர்கள் சில விளக்கங்களைக் கேட்டிருக்கிறார்கள். அந்த விளக்கங்களையும் 1975-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் அனுப்பி இருக்கிறோம். அதற்குப் பதில் வந்த பிறகுதான் மேற்கொண்டு என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பது தெரியும்.

திரு. என். டென்னிஸ்: இந்தத் திட்டம் ரூ. 563 லட்சம் செலவாகக் கூடிய ஒரு திட்டம். இத் திட்டம் செயலாக்கப்பட்டால் 35 மெகாவாட் மின்சாரம் ஜெனரேட் செய்ய முடியுமென்று திட்ட மிடப்பட்டிருக்கிறது. 1971-ஆம் ஆண்டிலிருந்து இது ஒரு லாங் பெண்டிங் மேட்டராக இருந்து வருகிறது. ரூ. 5½ கோடி எஸ்டிமேட் உள்ள இத் திட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றா விட்டால் மாநில அரசே இதை நிறைவேற்றுவதற்கு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இது மத்திய அரசின் 'சென்ட்ரல் வாட்டர் பவர் கமிஷன் பரிசீலனையில் இருக்கிறது. மாநில அரசு இதை நிறைவேற்று கின்ற பிரச்சினை தற்போது எழவில்லை.

[1975 நவம்பர் 6

புதிய நெல் வகைகள்.

* 221 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1974-75-ல் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நெற்பயிர்களின் வகைகள் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: 1974-75 ஆம் ஆண்டில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நெற்பயிர்களின் வகைகள் பின்வருமாறு:—

(1) ஆடுதுறை 30.

(2) ஆடுதுறை 31.

(3) கோயம்புத்தூர் 38.

(4) கோயம்புத்தூர் 39.

திரு. கா வேழவேந்தன்: தலைவரவர்களே, 1974-75-இல் புதிய ரக நெல் விதைகள் எவை எவை வெளியிடப்பட்டிருக்கின்றன? அவைகளுக்குப் பெயர்கள் இடப்பட்டிருக்கின்றனவா? இந்த புதிய நெற்பயிர்களை விளம்பரப்படுத்துவதற்கு திரைப் படங்களில் ஸ்லைடுகள் போட்டுக் காட்டுவதற்கும், பிரச்சாரம் செய்வதற்கும் வழிவகைகள் ஏதேனும் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, பிரச்சாரம் நடந்து வருகிறது. ஆனால் இப்போது அறிமுகப் படுத்தப்பட்டுள்ள நெற்பயிர்களின் ரகங்களுக்குத் தனித் தனி குணம் இருக்கிறது. அதை அனுசரித்து எந்தெந்த மாவட்டங்களில் அதை பிரச்சாரம் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்ய வேண்டும். ஆடுதுறை 30 என்பது 85 நாள் பயிர். ஆடுதுறை 31 என்பது 103 நாள் பயிர். கோ. 38 என்பது நீண்ட நாள் பயிர்—145 நாள். இது கோவை மாவட்டத்தில் பரப்பப்பட்டு வருகிறது. அங்கே இதற்கு நல்ல விளைச்சல் காணப்படுகிறது. கோ. 39 மூன்று மாதப் பயிர். இதிலும் நல்ல விளைச்சல் இருக்கிறது.

1975 நவம்பர் 6]

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon Minister the total acreage under CO.38, CO.39, ADT. 30 and ADT 31 in the entire State. Also, whether these are better strains than ADT-27, IR-8 and IR-21?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, மொத்தம் எவ்வளவு நிலப்பரப்பில் இந்தப் புதிய ரகங்கள் இதுவரை பரப்பப்பட்டுள்ளன என்ற கேள்விக்கு என் கையில் உடனடியாகப் பதில் இல்லை. அதுபற்றி தகவல் சேகரித்து கொடுக்க முடியும்.

ஆனால் இவைகள் எல்லாம் புது ரகங்கள்; இவைகளைத் தீவிர மாகப் பரப்ப ஏற்பாடுகள் நடக்கின்றன. குறிப்பாக, ஆடுதுறை 31 என்பது 103 நாள் பயிர். எல்லா மாவட்டங்களிலும் நன்றாக விளைகிறது. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் ஒரு ஏக்கருக்கு 3 டன் விளையக் கூடும். திரு. அழகர்சாமி அவர்கள் தலையில் கையைத் தூக்கிவைத்துக் கொண்டிருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்தில் 4 டன், செங்கற்பட்டில் 4¼ டன் வரையில் விளைவித்துக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் அந்த ஆடுதுறைப் பயிரை கார் காலம் குறுவை சீசனில்தான் பயிரிட முடிகிறது. செங்கற் பட்டு, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் நவரைப் பட்டங் களில் பயிர் செய்ய முடிகிறது. கூடிய விரைவில் எல்லாப் பகுதி களிலும் பரப்பப்படும்.

திரு. அ. ஆறுமுகம் : ஆடுதுறை 30, 31 என்ற பெயரை மாற்றி, பழங்காலத்துத் தமிழர்களுடைய பெயரை வைப்பதற்கு அல்லது தமிழ்ச் சொல்லை வைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இது ஆலோசிக்கப்பட வேண்டிய காரியம். பார்க்கலாம் என்றுதான் நான் பதில் சொல்ல முடியும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சரவர்கள் பொறுப்பேற்ற பிறகு, குறைந்த உரம், குறைந்த தண்ணீர் உபயோகித்து, ஆனால், அதிக விளைச்சல் தரக்கூடிய ஏதாவது விதைகளைக் கண்டுபிடிக்க முயற்சி எடுத் திருக்கிறார்களா ? அப்படிக் கண்டு பிடிக்கப்பட்ட விதைக்கு அவருடைய பெயர் வைக்கப்படுமா ?

[1975 நவம்பர் 6

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஒன்றுமட்டும் நிச்சயமாக என்னால் சொல்ல முடியும் என்னுடைய பெயரை எந்த விதைக்கும் வைக்கக் கூடாது என்றே நான் சொல்லியிருக்கிறேன். முன்னால் கூட்டுறவுத் துறையின் பொறுப்பிலிருந்தபொழுது கூட பல இடங்களில் என் படத்தைத் திறக்கப்போகிறோம் என்று சொன்னார்கள். தென்னாற்காடு, புதுக்கோட்டை, நெல்லை போன்ற பல மாவட்டங்களில் திறக்கக் கூடாது என்று சொல்லி இருக்கிறேன். தந்தியடித்துக்கூட நிறுத்தியிருக்கிறேன். உண்மையிலே இதிலே ஏதாவது திறமை, பெருமையிருக்கிறதென்றால் அது இந்த அமைச்சரவையின் தலைமைப் பொறுப்பையேற்றிருக்கிற முதலமைச்சரைச் சாரும் என்ற காரணத்தினால் என்னுடைய பெயரை எதற்கும் வைப்பதில்லை.

திரு. எஸ். நல்லசாமி: தலைவரவர்களே, இந்த உயர் விளைச்சல் நெல் உற்பத்தி செய்யக்கூடிய சமயத்தில் அதற்கு விளக்கமான அட்டைகளைக் கொடுக்க வேண்டும். குறிப்பாக, ஆடுதுறை 31 விவசாயம் பண்ணக்கூடிய விவசாயிகள் என்று எடுத்துக் கொண்டால் அவர்கள் வீட்டிலே எந்தெந்த காலத்திலே, என்னென்ன உரங்களை இடவேண்டுமென்ற விவர அட்டைகளை அவரவர்கள் பண்ணையிலே வைப்பதற்கு அரசே அட்டைகள் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யுமா? அந்த அட்டையில் கையெழுத்திடக்கூடிய அளவுக்கு விவசாய ஆஃபீஸில் இருந்து அதிகாரிகள் வந்து பார்வையிட ஆட்கள் அமர்த்தப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இந்த ஆடுதுறை 31 விதை வெகு வேகமாகப் பரப்பப்படுகிறது. ஆனால், பரவலாக எல்லாமாவட்டங்களிலும் கேட்பவர்களுக்கெல்லாம் கொடுக்கக் கூடிய அளவுக்கு இன்னும் பெருக்கப்படவில்லை. ஆகவே, ஆடுதுறை 31 வைத்திருக்கக்கூடிய இடத்தில் எல்லாம் அட்டை கொடுக்கக்கூடிய நிலையில்லை. அடுத்த குறுவைப் பருவத்தில் கேட்பவர்களுக்கெல்லாம் இதனைக் கொடுக்கமுடியும் என்ற நிலை வரும்போது, விளக்க அட்டை செய்து கொடுக்கமுடியும். தாளடிக்கோ, சம்பாவுக்கோ நல்ல விளைச்சல் தரக்கூடியதாக இது இல்லை. இது நீண்ட காலப் பயிர் அல்ல. ஆகவே, அடுத்த

1975 நவம்பர் 6]

குறுவைக்கு முன்னால் இதனை தேவையான அளவு அளிக்க, பிரச்சாரம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதியைச் சொல்ல முடியும்.

திரு. க. உரொ. எட்மண்ட் : நம்முடைய மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சரவர்கள் தான் கூட்டுறவுத் துறையிலேயிருந்த போது, தன்னுடைய படம் வைக்கக்கூடாது என்று . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி நெல் விதையைப் பற்றியது. அவருடைய படத்தைப் பற்றியதல்ல.

விதை நெல்லின் விலை.

*** 222. வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விவசாயிகளுக்கு வழங்கப்படும் விதை நெல்லின் விலை குறைக்கப்பட வேண்டுமென கிழக்கு இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சி மன்றம் அண்மையில் அரசை வேண்டியுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சிமன்றத்தில் இருந்து அரசுககு எந்தக் கோரிக்கையும் வரவில்லை. ஆனால், திருவாடானை பஞ்சாயத்து யூனியன் பெரும் தலைவர், காளையார் கோயில் பெரும் தலைவர் ஆகியோர் கோரி இருந்தார்கள். இப்பொழுது விற்கப்படுகின்ற நெல் விதை, லாப நோக்கம் இல்லாத விலைக்குத் தான் விற்கப்படுகிறது. அதை மேலும் குறைப்பதற்கில்லை.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இப்பொழுது ஒரு ஏக்கருக்கு ஏறக்குறைய 30 கிலோ நெல் தேவைப்படும். அதை இராமநாதபுரம் மாவட்டத்திலே கிழக்குப் பகுதியிலே மழை வந்தவுடனே விதைப்பார்கள். மறுபடியும் மழை வரும்போது திரும்ப விதைப்பார்கள். ஒரு கிலோ நெல் ரூ. 3-க்கு விற்கப் படுவதாகச் சொல்லப்படுகிறது. நியாயமான விலை ஒரு கிலோவுக்கு ரூ. 1 தானிருக்க வேண்டும். விதையென்றால் ரூ. 1½ என்றிருக்கலாம். ஆகவே, அரசாங்கமே தேவையான விதைகளைத் தயார் பண்ணி, குறைந்த விலைக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நெல்லினுடைய விலை ஒரு கிலோ ரூ. 1 என்ற அளவுக்கு வருமானல் அது அவருடைய கட்சியின் கோரிக்கை நிறைவேறியதாகக் கருதப்படும் என்று சொன்னர்கள். இப்பொழுதே அவர்கள் சொல்கிருர்கள், ரூ. 1-க்கு விற்கப்படுகிறது என்று. ஆனல் விதையை அதே விலைக்கு விற்பது நல்லதும் அல்ல, சரியானதும் அல்ல. இப்பொழுது அரசாங்கத்திற்கு இலாப நட்டம் இல்லாத விலைக்கு விற்கிருேம். இதை விடக் குறைவாக விற்கத் தொடங்கினல் இந்த நெல்லெல்லாம் விதைக்கு உபயோகிக்கப்படாமல் அரிசியாக ஆக்கப்பட்டு வேறு காரியங்களுக்குப் பயன்படும். விதைக்குப் பயன்பட வேண்டுமென்ற நோக்கில் எந்தவித லாபமும் இல்லாமல் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, பொதுவாகவே, நெல்லுக்கும் விதைக்கும் உள்ள வித்தியாசம் அதிகமாகத்தானிருக்கிறது. ஆனல், அமைச்சரவர்கள் சொல்வதைப் போல் சில குறிப்பிட்ட ஏரியாக்களில் இந்த நெல்லைக் குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விதைகளை விற்கிருர்கள். அப்படிப்பட்ட நிலை ஏற்படும்போது சில தவறுகளும் ஏற்படுகின்றன. ஆகவே, அதைப் போக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: நெல் விதை தமிழகத்திலே உள்ள எல்லா அரசுக் கிடங்குகளிலும் (டெப்போக்களிலும்) லாப நட்ட மில்லாமல் விற்கப்படுகிறது.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, இப்பொழுது நெல் ஒரு கிலோ ரூ. 3½-க்கு விற்கப்படுகிறது. கொடுக்கப்படுகிற விதை நெல்லிலும் 10 கிலோ வாங்கினல் ஏறக்குறைய 2 அல்லது 3 கிலோ பதராக இருக்கிறது. விதையை உற்பத்தி செய்கின்றவர்கள் அதற்காகத் தனிப்பட்ட அக்கறை எடுத்து உற்பத்தி செய்யவில்லை. சில விவசாயிகளுடைய காடுகளிலே போடப்படுகிறது. அங்கிருந்து அறுத்து விற்கிருர்கள். கிலோ ரூ. 3½ என்பது அதிகமாக இருக்கிறது. அந்த விலையைக் குறைத்து,

அதே நேரத்தில் பதரில்லாமல் நல்ல விதையாகவும் கொடுக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : நல்ல சிறந்த விதையாக இருக்கவேண்டுமென்பதற்காகத்தான் சான்றிதழ் (சர்ட்டிஃபிகேட்) முறை கையாளப்படுகிறது. நல்ல விதையாக இருக்குமானல் அதற்குச் சான்றிதழ் கொடுக்கப்படுகிறது. Seed Certification Scheme is in operation. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்களோ அல்லது விவசாயிகளோ விதையை வாங்கும் போதே சான்றிதழ் கொடுக்கப்பட்ட விதைகளை வாங்குமாறு தலைவரவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, இந்த விதை நெல்களைச் சரியான முறையிலே தயாரித்து அளிப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் ஏதாவது அரசாங்கம் செய்திருக்கிறதா? அல்லது விவசாயிகள் பொறுப்பிலே விட்டு, விதை நெல்லை எடுத்த பிறகு, அதனை அரசாங்கம் வாங்குகிறதா? சரியான திட்டத்தோடு அதனை உற்பத்தி செய்வதன் மூலமாக பலவகை நெல்கள் கலக்காமல் பார்த்துக்கொள்வதற்கும் உற்பத்தியை அதிகப்படுத்தவும் வாய்ப்பு ஏற்படும். அதில் எந்தப் பாதுகாப்பை அரசாங்கம் செய்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : அதற்கு நான் ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன்.

திரு. எஸ். வடிவேல் : பேரவைத் தலைவரவர்களே, விதை நெல் என்பதற்காகக் கொஞ்சம் கூடுதலாக வைத்து விற்றால் பரவாயில்லை. ஆனல் ஒன்றுக்கு மூன்று மடங்கு அதிகமாக விலை வைத்து விற்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டதற்கு, அரிசியாக ஆக்கி விற்று விடுவார்கள், ஆகவே அதிக விலைக்குக் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது என்று சொன்னார்கள். விதைப்பண்டத்தை அப்படி வீணக்க மாட்டார்கள் உழவுத் தொழிலில் உண்மையான நம்பிக்கை உள்ளவர்கள். எனவே விலை கொஞ்சம் கூடுதலாக வைத்து விற்பதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறியு விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, இலாபமும் இல்லாமல், நஷ்டமும் இல்லாமல் இருக்கும் விலைக்கு விற்கப்படுகிறது என்று ஏற்கனவே சொன்னேன். வாங்குகின்ற விலையைவிட மூன்று மடங்கு இருக்கும் என்று நான் கருதவில்லை. ஆனால் வாங்கும் விலையைவிட அதிகமாகத்தான் இருந்தாக வேண்டும். தரமானதா என்று பார்க்க வேண்டும், சான்றிதழ் கொடுக்க வேண்டும். சான்றிதழ் உள்ள விதை சற்று அதிக விலையானாலும்கூட அடக்க விலைக்கு விற்கப்படுகிறது என்ற உறுதியின் அடிப்படையில் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய கம்பு ரகம்.

* **223 வினா—திரு. எம். முத்தையா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வீரிய ஒட்டுக் கம்பு எச்.பி. 3 என்ற ரகத்திற்குப் பதில் வேறு கம்பு ரகம் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, இது கம்பு ரகத்தைப் பற்றிய கேள்வி. புதிய எச். பி. 3 (New Hybrid Bajra-3) புதிய எச். பி. 5 (New Hybrid Bajra-5) இந்த இரண்டு ரகங்களும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டவை. இவை மற்ற ரகங்களைவிட அதிக மகசூல் கொடுக்க வல்லவை. தேமல் நோய் (Downy mildew) இந்த ரகங்களை அதிகமாகத் தாக்குவதில்லை. தாக்குவதில்லை என்று சொல்லவில்லை, அதிகமாகத் தாக்குவதில்லை. மேலும், நோய்கள் தாக்காத ரகங்கள் உருவாக்குவதற்காக தீவிரமாக ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, இந்த ரகத்தை மழை காலத்திலே பயிர் செய்வதா அல்லது கோடை காலத்தில் பயிர் செய்வதா? இதனால் அதிகப்படியாக எத்தனை குவிண்டால் வரும் ?

1975 நவம்பர் 6]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இதைக் கோடையிலும் பயிர் செய்ய முடியும், மழைக் காலத்திலேயும் பயிர் செய்ய முடியும். இதற்குத் தண்ணீர் தேவை என்ற அடிப்படையில் மழைக் கால முடிவில் பயிர் செய்வது சிறந்தது. 90 நாள் என்ற அளவிற்கு தகுந்த பருவத்தே பயிரிட வேண்டும் என்பது மட்டுமல்ல, இந்த ரகங்கள் நோயினால் தாக்கப்படுகின்றன என்றும் தெரியும்.

திரு. வி. பழனிவேல்: தலைவரவர்களே, இப்பொழுது உயர்ந்த ரக விதை என்று 5-ஆம் நம்பர் கம்பு விதை கொடுக்கப்பட்டு கதிர் முழுவதும் வருவதற்குள்ளாகவே வீணாகி ஒரு ஏக்கருக்கு இரண்டு மூன்று மூட்டைகள்கூட விளையாத நிலை ஏற்பட்டது. அப்படிப்பட்ட தவறுக்கு எந்த அதிகாரி காரணம் அல்லது அப்படிப்பட்ட விதைகளைச் சேகரிப்பதற்கு யார் காரணம் என்பதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இந்தப் புதிய எச்.பி. 3 என்றாலும், புதிய எச்.பி. 5 என்றாலும் இந்த கம்பு ரகங்களை இன்னும் நோய் தாக்காத வண்ணம் இருக்கும் விதைகளைக் கண்டுபிடிக்கவில்லை. ஆகவேதான் ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னேன். ஆனால் இப்பொழுது சில இடங்களில் போட்டுப் பார்த்துக் கொண்டு வருகிறார்கள். எச். பி. 3, எச். பி. 5 என்ற இரண்டு ரகங்களையும் பூச்சி தாக்குவது சற்றுக் குறைவாக இருக்கிறது, அதைத்தான் சொல்ல முடியும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இந்த வீரிய விதைகளை அரசாங்கப் பண்ணையில் உற்பத்தி செய்திருக்கிறார்களா? அல்லது தனியார்கள் உற்பத்தி செய்ததை இவர்கள் கொள்முதல் செய்து விநியோகிக்கிறார்களா? அரசாங்கப் பண்ணையிலேயே இவைகளை உற்பத்தி செய்ய அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, மொத்தத்தில் சொல்லும்பொழுது அரசாங்கப் பண்ணையில் விதை உற்பத்தி மொத்தத் தேவைக்கு—நான் எல்லா ரகங்களையும் சேர்த்துச் சொல்கிறேன் — 7 சதவிகிதம்தான் உற்பத்தி செய்கிறோம். ஆனால் 7 சதவிகிதம் என்பதை மாற்றி 100 சதவிகித

மாகப் பெருக்க தீவிரமாக முயற்சி செய்தாக வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக இந்த விதை உற்பத்தி செய்யும் முறையைக் கையாண்டு வருகிறோம். தற்பொழுது தனியாரிடத்திலே வாங்கினாலும்கூட, சோதித்துப் பார்த்து, சான்றிதழ் கொடுத்து, அதற்குப் பிறகு விற்க அனுமதிக்கப்படுகிறது.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் கம்பானாலும் சரி, நெல்லானாலும் சரி, ஆண்டுக்காண்டு அதனுடைய வீரியம் குறைந்துகொண்டே வருகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் ஏ. டி. டி. 27 முதலில் இருந்த விளைச்சல் இப்பொழுது இல்லை. எனவே, இந்த வீரியம் குறையாமல் பாதுகாக்க நல்ல திட்டம் ஏதேனும் அரசு வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இதற்காகத்தான் விதைப்பண்ணை தேவைப்படுகிறது. ஹைப்ரிட், வீரியம் அதிகமாக உள்ள விதைகள் எல்லாமே நாளாவட்டத்தில் தலைமுறைக்குத் தலைமுறை சற்றுக் குறைவாக விளைகிறது. ஆகவேதான், நாங்களும் புதிது புதிதாக விதைகளைக் கண்டுபிடித்துக் கொண்டு வருகிறோம். பஜ்ரா அல்லது கம்பு என்று சொல்லப்படும் விதையை நிச்சயமாக அரசாங்கத்திடமிருந்து பெற வேண்டும், அரசாங்க விதை பண்ணையிலிருந்து பெற வேண்டும். அல்லது அரசாங்கம் சர்ட்டிபிகேட் பெற்றதைப் பெற வேண்டும். வெளியிலே வாங்கினால் வீரியம் குறைவாகவும். விளைச்சல் குறைவாகவும் இருக்கும்.

அறநிலையத் துறை முன்னுள்ள வழக்குகள்

*** 224 வினு—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்**: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலுள்ள இந்து அறநிலையத் துறை துணை ஆணையாளர் முன்பாக 1972, 1973, 1974 நிதியாண்டுகளில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை?

(இ) அவைகளுள் இதுவரை தீர்ப்பு கூறப்பட்டவை, தீர்வு காணுமல் இருக்கும் நேர்வுகள் முறையே எத்தனை?

(உ) தீர்வு காணுமல் இருக்க காரணம் என்ன?

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] 1975 நவம்பர் 6]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) 371.

(இ) அவைகளில் தீர்ப்பு கூறப்பட்டுள்ளவை 293. தீர்வு காணுமல் நிலுவையில் இருப்பவை 78.

(உ) மொத்தம் நிலுவையிலுள்ள 78 வழக்குகளில் 45 வழக்குகள் திருநெல்வேலி துணை ஆணையருக்கு மாற்றப் பட்டுள்ளன. மீதியான 33 வழக்குகள் விசாரணையில் உள்ளன.

திருப்பெரும்புதூர் கிராமத்தொழில் திட்டக்குழு

*225 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அறநிலை யத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம், திருப்பெரும்புதூரில் அமைந் துள்ள கிராமத்தொழில் திட்ட ஆலோசனைக்குழுக் கூட்டம் சீராக நடைபெறுவதில்லை என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, ஏற்கனவே திருப்பெரும்தூரில் கிராமத் தொழில் திட்ட ஆலோசனைக் குழு திருப்பெரும்புதூர் வட்டத்திற்கும், திருவள்ளூர் வட்டத்திற்கும் உரியதாக இருந்தது. அப்பொழுது எல்லாச் சட்டமன்ற உறுப் பினர்களும் அதில் உறுப்பினர்களாக இருந்தார்கள். ஆனால் இப்பொழுது மாவட்டம் முழுவதற்குமாக உருவாக்கி ஒரு சட்ட மன்ற உறுப்பினர் மட்டும் அதில் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் தொகுதி தொழில் திட்டம் பற்றிக் கூறும் வகையில் மாவட்டத்தின் எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் அதில் இடம்பெற நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, முதலில் இந்தத் திட்டம் சில மாவட்டங்களினுடைய சில இடங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டது. பிறகு மாவட்டம் முழுவதும் விரிவாக்கப்படும் நேரத்தில் மாவட்டத்தின் சார்பில் ஒரு சட்டமன்ற உறுப்பினரும், ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும்

அந்தக் குழுவில் இடம் பெற்றால் போதும் என்று சொல்லி 74-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. சட்டமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினரும் அதிலே பங்குகொள்ள வேண்டியதைப்பற்றிய உத்தரவு 1975—மார்ச் மாதத்தில் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினரும் அந்த மாவட்டம் முழுவதும் இருக்கின்ற குறைபாடுகளை அந்தக் குழுவிலே சொல்ல முடியும் என்ற நம்பிக்கையில்தான் நாம் நியமனம் செய்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) குழித்துறை காவல் துறை ஆய்வாளர் ஒரு வழக்கறிஞரை அவமதித்ததாகக் கூறப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. ஜே. ஜேம்ஸ், திரு. என். டென்னிஸ் ஆகிய மூவரும்

"the serious and tense situation prevailing at Kuzhithurai by the conduct of the Inspector of Police, Kuzhithurai on the alleged insult committed against Sri S. R. Muthiah, Advocate, Kuzhithurai Bar on 29th October 1975 at about 10 a.m. and the boycott of the Courts by the Members of the Local Bar Association."

என்ற பொருள்பற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய முக்கியத் துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1975 நவம்பர் 6]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்தத் துர்பாக்கியமான நிலைமை அந்தப் பகுதியிலே உருவானதைக் கண்டு மிகவும் வேதனையோடு இந்தத் தீர்மானத்தை இந்த அவையில் கொண்டு வருகிறேன். ஓரிரு-சிறு விளக்கங்கள் கூறினால் பொருத்தமாக இருக்கும் என்றே கருதுகிறேன்.

எஸ். ஆர். முத்தையா என்பவர் குழித்துறை பாரில் ஒரு வழக்கறிஞராக பல்லாண்டுக் காலமாகப் பணியாற்றி வருகிறார். அவரும், அவருடைய மனைவியாரும் வாதிகளாகவும், அவருடைய மாமியார் பிரதிவாதியாகவும் கொண்ட ஓ.எஸ். 832/73 என்ற ஒரு வியாஜ்யம் அந்தக் குழித்துறை முன்சீப் கோர்ட்டில் நடக்கிறது. அதில் வாதி தரப்பிலே இன்ஜங்ஷன் பெற்றிருக்கிறார்கள். 29—10—75-ம் நாள் சுமார் 10 மணியளவில் அவர் தன்னுடைய வழக்கறிஞர் ஆபீசிலே இருக்கின்ற நேரத்தில் அவருடைய மைத்துனர்கள் பென்னட் வில்பர்ட் ஹாரிஸ் என்ற இரண்டு பேர்கள் அவருக்குச் சொந்தமான நிலத்திலே மரங்களை வெட்டி அப்புறப்படுத்தியதாகத் தகவல் கிடைத்தது. உடனே அவருடைய சம்சாரம் போலீஸ் நிலையத்திலே முன் அறிவிப்புக் கொடுக்கச் சென்றார்கள். அவர்கள் சென்று சொன்ன நேரத்திலே எந்தவிதமான கேசும் பதிவு செய்துகொள்ளாமல் அவர்களை உதாசீனம் செய்து அனுப்பிவிட்டார்கள். இதுசம்பந்தமாக வழக்கறிஞர் அந்தப் போலீஸ் நிலையத்திற்குச் சென்று அவருடைய புகாரையும் கொடுத்தார்.

31—10—75-ஆம் தேதி சுமார் 8 மணியளவில் இன்ஸ்பெக்டர் அவர்கள் இந்த வழக்கறிஞரை போலீஸ் நிலையத்திற்கு அழைப்பதாகத் தகவல் வந்து, இவர் போலீஸ் நிலையத்திற்குச் சென்றார். அப்பொழுது இப்படி சிவில் வழக்கு இருக்கிறதே, என் கேஸ் எடுக்கவில்லை என்று பேசிய நேரத்திலே அவருடைய மைத்துனர் பென்னட் அவர்களும் இருந்தார். இவர்கள் இரண்டுபேரும் ஏதோ பேசிவிட்டார்கள் என்பதற்காக இந்த வழக்கறிஞரைக் கைது செய்து 75-வது பிரிவு—சிட்டி போலீஸ் ஆக்டின் கீழ் ஒரு வழக்கைப் பதிவு செய்தார்கள். வழக்கைப் பதிவு செய்ததுமின்றி

[முற்பகல் 10.00]

கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தியதாகவும் கூறப்படுகிறது.

அதுமட்டுமின்றி இவர்களை ரைட்டர் ரூமுக்கு அழைத்துச் சென்று வைத்திருந்த நேரத்தில் இவர்கள் கையில் இருந்த கேஸ் கட்டை மகள் கையில் கொடுக்க முனைந்த நேரத்தில் அவதூறான வார்த்தைகளை ஒரு போலீஸ் கான்ஸ்டபிள் பேசியிருக்கிறார். போலீஸ் கான்ஸ்டபிளின் எண் 1073 என்று தந்திருக்கிறார்கள். அவர்கள் தனக்கு ஜாமீன் வேண்டுமென்று கேட்ட நேரத்தில் கொடுக்க முடியாது என்று மறுத்து அவர்களைக் குழித்துறை மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் ஆஜர் செய்து, பின்னர் ஜாமீனில் விட்டிருக்கிறார்கள். அவர் வழக்கறிஞர் சங்கத்திற்குப் புகார் மனுவைக் கொடுத்தார்கள். வழக்கறிஞர்கள் சங்கம் இதை விசாரித்து ஒரு நாளைக்குக் கோர்ட்டுகளைப் பகிஷ்கரிப்பது என்று முடிவு செய்து மாவட்ட போலீஸ் அதிகாரிக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் மனுக் கொடுக்க வேண்டிய ஏற்பாடு செய்தார்கள். பிரசிடென்ட், செகரடரி போன்றவர்கள் எஸ்.பி. அவர்களை அணுகி இந்த விவரத்தைப்பற்றிக் கூறினார்கள். ஆனால் தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லை. குறிப்பாக, போலீஸ்காரர்களுக்குச் சாதகமாக இருந்ததாகக் கூறினார்கள். இந்த மாதிரி நிலைமை புதிதாக ஏற்பட்டதல்ல. இந்தக் குறிப்பிட்ட இன்ஸ்பெக்டர் மேல் பல்வேறு புகார்கள் இருந்து வருகின்றன.

இன்னொரு கேசிலே கூட, ஒரு திருட்டு வழக்கிலே சம்பந்தம் இல்லாத நபர் கையில் 20 பவுன் நகையைக் கொடுத்தார்கள் என்று சொன்ன அடிப்படையில் அவர்களிடமிருந்து பலாத்கார மாக அந்த நகைக்குப் பதிலாக கோல்டைக் கைப்பற்றியதாகப் புகார் இருக்கிறது. அதற்குப் பிறகு அந்த நகையைத் திருடி யவன் வேறொருவன் என்றும் அவன் கேரளத்திற்குத் தப்பிப் போய்விட்டதாகவும் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதோடு சம்பந்தமற்ற வழக்கு களைப் பற்றியெல்லாம் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த இன்ஸ்பெக்டர் அந்த ஊரைச் சேர்ந்தவர். அந்த ஜூரிஸ்டிக்ஷனிலேயே இருக்கிறார். அவருடைய பிரதர் ஒருவர் வழக்கறிஞராக இருக்கிறார். இவரைப்பற்றிப் பல்வேறு புகார்கள் வந்திருக்கின்றன. இந்த மாதிரி அதிகாரிகள் நடந்து கொண்டால் வழக்கறிஞர்களுக்குத் தொடர்ந்து தொல்லைகள் இருந்து கொண்டுதான் இருக்கும். இந்த

நிலையில் வழக்கறிஞர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்தது. இதை அன்றாட நிர்வாகப் பிரச்சினை யாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இந்தப் பிரச்சினை மீது விவாதிக்க அனுமதி தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஒரு ஆசிரியரும், ஒரு வழக்கறிஞரும் கைது செய்யப்பட்டதற்காக— ஆசிரியர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து ஆசிரியர் சங்கமும், வழக்கறிஞர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து வழக்கறிஞர் சங்கமும் கண்டனத் தீர்மானங்களைப் போட்டிருக்கிறார்கள்.

இதிலே என்ன வேதனை என்றால்—இந்த இரண்டு பேருமே சொந்தக்காரர்கள். அதிலும் வழக்கறிஞர் முத்தையா அவர் களும், ஆசிரியர் பென்னட் அவர்களும் மைத்துனர்கள். பென்னட்டின் சகோதரியின் கணவர்தான் முத்தையா. இந்த இரண்டு பேருக்குள்ளே தனிப்பட்ட தகராறு காரணமாக சிவில் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. இதன் காரணமாக எழுந்த பெரும் தகராறை ஒட்டி அவர்கள் காவல் துறையினருக்கு மனுச் செய்து கொண்டார்கள். 31—10—1975 அன்று முத்தையா அவர் களையும், பென்னட் அவர்களையும் குழித்துறை ஆய்வாளர் வட்ட அலுவலகத்திற்குக் கூப்பிட்டு அவர்களிடத்தில் அதுபற்றி விசாரித்துக் கொண்டு வருகிறார்கள். அவர்களிடையே ஏற்பட் டிருக்கக்கூடிய அமளியான சூழ்நிலை குறித்து விசாரித்துக் கொண்டு வருகிறார். ஆய்வாளர் முன்னிலையிலேயே இரண்டு பேரும் தாவா செய்து கொண்டார்கள். ' நான் மரத்தை வெட்டு வேன் ' என்று பென்னட் சொல்ல ' நீ மரத்தை வெட்டினால் நான் உன்னை வெட்டுவேன் ' என்று இவர்—மைத்துனர் சொல்ல—இரண்டு பேரும் இங்கே வெட்டிக் கொள்ள வேண்டாம்; மரத்தையும் வெட்ட வேண்டாம், மனிதனையும் வெட்ட வேண்டாம் என்று கூறி இரண்டு பேரும் கைது செய்யப்பட்டு பெயிலில் விடப்பட்டார்கள்.

திரு பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னது போல் இரண்டு பேரும் காவல் துறை சட்டம் 75 வது பிரிவின்படி கைது செய்யப் பட்டு உடனடியாக ஜாமீனில் விடப்பட்டார்கள். வழக்கு நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கிடையே ஆசிரியர் சங்கமும், வழக்கறிஞர்கள் சங்கமும் தீர்மானங்கள் போட்டு இந்த இரண்டு

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 நவம்பர் 6

சங்கங்களும் இதைப் பெரிய விவகாரமாக ஆக்கியிருக்கிறார்கள். ஆனால் விவகாரம் சிறிய விவகாரம். மைத்துனர்களுக்கிடையே ஏற்பட்ட சண்டை சட்டசபைக்கு வந்து அந்த மைத்துனர் களுக்கு விளம்பரமாகி இருக்கிறது.

ஆய்வாளரைப் பற்றிச் சொன்னார்கள். அதுபற்றிக் குறிப்புகள் இருக்குமானால், அந்த அதிகாரிகள் தவறாக நடந்து கொண்டார்கள் என்பது பற்றிய தகவல்களைத் தந்தால் அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்து இதை அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து, இந்தப் பொருள்பற்றி விவாதிக்கத் தேவையில்லை யென்ற காரணத்தினால் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

(ஆ) சென்னை ரப்பர் தொழிற்சாலையில் கதவடைப்பும் தொழிலாளர் வேலையிழப்பும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜேம்ஸ் அவர்கள்—

"That the Madras Rubber Factory has been locked out since 25th October 1975 and consequently more than 2000 workers thrown out of employment and the tense situation prevailing in that locality."

என்ற பொருள் பற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி பேரவையில் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கத் தக்க முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி சுருக்கமாக விளக்க வேண்டும்.

THIRU K. T. K. TANGAMANI : On the same subject I have given a Calling Attention Notice.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்போது கொடுத்தீர்கள் ?

THIRU K. T. K. TANGAMANI : This morning.

1975 நவம்பர் 6]

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, சென்னையில் இருக்கும் ரப்பர் பாக்டரியில் கடந்த இரண்டு மாத காலமாகப் பல்வேறு தகராறுகளினால் ஏறத்தாழ இரண்டாயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தகராறு 3—9—75-ம் நாள் அன்று தொடங்கியவுடன் லேபர் கமிஷனர் அவர்கள் தலையிட்டு ஒரு செட்டில்மென்ட் செய்திருக்கிறார்கள். 3—9—75 முதல் 22—10—75 வரையிலும் நிர்வாகம் தனது தொழிலாளர்களுக்கு ஒழுங்கான முறையில் வேலை கொடுக்கவோ அல்லது வேலை செய்த தொழிலாளர்களுக்கு ஊதியம் கொடுக்கவோ தயாராக இல்லாத காரணத்தால் பல்வேறு தகராறுகள் ஏற்பட்டன. கடைசியாக, 23—10—75-ம் நாள் அன்று செட்டில்மென்ட் ஏற்பட்டு தொழிலாளர்களுக்கு நியாயமாக வேலை கொடுப்பது என்றும், பாக்டரியைத் திறந்து நடத்துவது என்றும் ஒப்பந்தம் ஏற்பட்டு அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய ஊதிய பாக்கியை ஆர்பிட்ரேஷனுக்கு விட்டு முடிவு செய்வது என்றும் செட்டில்மென்ட் செய்து கொண்டார்கள். ஆனால் இந்த செட்டில்மென்டுக்கு விரோதமாக 25—10—75-ம் நாள் அன்று இந்த நிர்வாகம் லே-ஆப் செய்ததாக நோட்டீஸ் போர்டில் அறிவித்தார்கள். நியாயமாக இந்த ஒப்பந்த அடிப்படையில் நிர்வாகம் லே-ஆப் செய்ய எந்த நியாயமும் கிடையாது.

இப்போது நம்முடைய நாட்டில் இருக்கும் நெருக்கடி நிலைமையில் எந்தத் தொழில் நிறுவனமும் லே-ஆப் செய்யக் கூடாது என்ற விதிமுறைகள் இருக்கும் சூழ்நிலையில் எம்.ஆர்.எப் லே-ஆப் செய்தது விபரீதமான சம்பவம் என்று இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன். உடனடியாகத் தொழிலாளர்கள், லே-ஆப் செய்தது சரியல்ல, வேலை வேண்டும். வேலை செய்த நாட்களுக்கு ஊதியம் வேண்டுமென்ற கோரிக்கையை முன்னிட்டு போராட்டம் நடத்தினார்கள். ஆனால் எதிர்பாராத முறையில் 25—10—75-ம் நாள் அன்று சில நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. அந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து 26—10—75 முதல் அந்த நிர்வாகம் பாக்டரியை மூடியிருக்கிறார்கள். அப்படி மூடியதன் பயனாக ஏறத்தாழ இரண்டாயிரம் தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கிறார்கள். அந்தப் பகுதியில் தொழிலாளர்கள் சாதாரணமாக நடந்து செல்லவோ, வீடுகளில் இருக்கவோ வழி இல்லை. நிர்வாகத்தின் தூண்டுதலால் போலீசார் அத்துமீறி

நடந்து வருகிறார்கள் என்பதை இந்த மன்றத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழிலாளர்களைப் பழி வாங்கும் முயற்சியில் நிர்வாகம் முனைந்து நிற்கிறது என்பதைக் கூறிக் கொள்ளுகிறேன்.

ஆகையால் இது பெரும் முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம். தொழிலாளர்கள் பிரச்சினை. அவர்கள் அன்றாட வாழ்க்கைக்குக் கூட வழி இல்லாமல் இந்த இரண்டரை மாதங்களாகச் சம்பளம் இல்லாமல் பட்டினி இருக்கும் சூழ்நிலையில் இதைப் பற்றி விவாதித்து இதற்குப் பரிகாரம் தேடக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே, இந்த மன்றத்தின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து இதைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்துக்குமிடையே சுமார் 128 லீவ் ரிசர்வ் பிரிவு தொழிலாளர்கள் வட்ட முறையில் (in rotation) வேலை செய்வது சம்பந்தமாக ஒரு கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து, 3—9—75 அன்றிலிருந்து தொழிற்சாலையில் வேலை நின்றுவிட்டது. எந்தப் பிரிவில் தொழிலாளர்கள் விடுப்பு எடுத்ததன் காரணமாகவோ, அல்லது வேலைக்கு வராத காரணங்களினாலோ ஏற்படும் காலி இடங்களில் இந்த ஜி.எல்.ஆர். தொழிலாளர்கள் சென்று வேலை செய்வது வழக்கம் என்று நிர்வாகத்தின் தரப்பில் கூறப்பட்டது. ஆனால் தொழிற்சங்கத்தின் சார்பில் இது போன்று வட்ட முறையில் அவர்கள் வேலை செய்ததில்லையென்றும், அவர்களை ஒரு குறிப்பிட்ட பிரிவில் நிரந்தரமாக வேலை செய்ய நிர்வாகம் அனுமதிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது.

இத்தொழிற் தகராறில், தொழிலாளர் துறை ஆணையாளர் தலையிட்டு, அவரது ஆலோசனையின் பேரில் சென்னை தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு 22—10—75 அன்று ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் ஜி.எல்.ஆர். தொழிலாளர்கள் ஒரு மாதத்தில் இரண்டு வாரங்களுக்கு அவரவர்களுக்கு கொடுக்கப்படும் பகுதிகளுக்குச் சென்று வேலை செய்வதென்றும், எந்த முறையில் வேலைக்கு அனுப்பப்படுவதென்னும் பிரச்சனை சம்பந்தமாக இருதரப்பாரும் நேரடியாகப் பேசுவதென்றும், ஒரு மாத காலத்துக்குள் இதில் ஒரு உடன்பாடு ஏற்படாவிட்டால், தொழில் தகராறு சட்டத்தின் கீழ் உரிய நடவடிக்கைகள் மேற்

1975 நவம்பர் 6] [திரு. க. இராசாராம்]

கொள்ளப்படுவதென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. அந்த நடவடிக்கைகளின் முடிவு தெரியும் வரை, 4 வாரங்கள் வரை ஒரு பிரிவில் வேலை செய்வது என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. 22—10—1975 அன்று தொழிற்சங்க உறுப்பினர்களின் பொதுக் குழுக் கூட்டத்தில் இந்த ஒப்பந்தத்திற்கு சம்மதம் பெற்று அதன் பின்னரே தொழிலாளர் துறை ஆணையர் முன்பு ஒப்பந்தம் கையெழுத்தாகியது.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் 23—10—75 அன்று தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர். ஆனால் டிரெட் எக்ஸ்ட்ரூடர் (tread extruder) என்னும் இயந்திரத்தில் இரும்பு துண்டுகள் புகுத்தப்பட்டு இயங்க முடியாமல் செய்யப்பட்டு இருந்தாலும், அதைச் சீர்படுத்த தொழிலாளர்கள் மறுத்ததாலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது ஷிப்ட் சில பிரிவு தொழிலாளர்களுக்கு லே-ஆப் விடப்பட்டது. 24—10—75 அன்று எல்லாத் தொழிலாளர்களும் போனஸ் அவசரச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பொருட்டு அடையாளவேலை நிறுத்தம் செய்தனர். 25—10—75 அன்று காலை முதல் ஷிப்ட்டில் எல்லாத் தொழிலாளர்களுக்கும் வழக்கம் போல் வேலை கொடுக்கப்பட்டது. டிரட் எக்ஸ்ட்ரூடர் (tread extruder) என்னும் மெஷினில் மீண்டும் இரும்புத் துண்டுகள் புகுத்தியது கண்டுபிடிக்கப்பட்டு அதன் காரணமாக இந்த இயந்திரம் பழுது பார்க்கப்பட வேண்டியதாயிற்று. இயந்திரத்தைப் பழுது பார்க்கும் வேலையை தொழிலாளர்கள் மெதுவாகச் செய்ததால், இரண்டாவது ஷிப்டில் சில தொழிலாளர்களுக்கு (சுமார் 200) லே-ஆப் விடப்பட்டது. இதை ஆட்சேபிக்கும் வகையில் முதல் ஷிப்ட் தொழிலாளர்களும், இரண்டாவது ஷிப்ட் தொழிலாளர்களும் பிற்பகல் 3 மணிக்கு வன்முறைச் செயல்களில் ஈடுபட்டு, அலுவலர்களைத் தாக்கவும், தொழிற்சாலையின் பொருட்களுக்கு பெரும் சேதம் விளைவிக்கவும் செய்தனர். இந்த வன்முறைச் செயல்களின் காரணமாக நிர்வாகம் 25—10—75 அன்று மூன்றாவது ஷிப்ட் தொடக்கத்திலிருந்து இரவு 11 மணியளவில் தொழிற்சாலையைக் கதவடைப்பு செய்தனர்.

இந்தக் கதவடைப்பு சம்பந்தமாக தொழிலாளர் துறை அலுவலர் முன்பு விசாரணை எடுத்துக் கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து, இந்தப் பொருள்பற்றி விவாதிக்கத் தேவையில்லை யென்ற காரணத்தால், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

(3) கவன ஈர்ப்பு.

(அ) 'புகையான்' என்ற பூச்சியால் நெற்பயிர் தாக்கப்பட்டதும் விவசாயிகள் நஷ்டத்திற்கு ஆளாகியதும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் குழ. செல்லையா, துரை கோவிந்தராசன் ஆகியோர் பேரவை விதி 41-ன் கீழ் ஒரு அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. குழ. செல்லையா: தலைவர் அவர்களே, இந்த ஆண்டு குறுவைச் சாகுபடியில் 'புகையான்' என்ற புதுவித நோயால் நெல் பயிர் தாக்கப்பட்டு விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகியுள்ளது பற்றிய அவசர பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது நோயைப் பற்றிச் சொல்கிறார்களா அல்லது பூச்சியைப் பற்றிச் சொல்கிறார்களா என்று தெரியவில்லை. நோய் என்று சொல்லியிருந்தாலும் கூட 'புகையான்' என்பது ஒரு பூச்சி. கண்ணால் பார்க்கலாம் அதை எவ்வாறு தாக்கியிருக்கிறது, எவ்வாறு மருந்து அடிக்க முடியும் என்பதுபற்றியெல்லாம் அறிக்கை அச்சிட்டு பேரவை உறுப்பினர் களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

திரு. குழ. செல்லையா: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது பூச்சியா நோயா என்று கேட்டார்கள். பூச்சி இல்லாமல் நோய் வருவதில்லை. அது அமைச்சர் அவர்களுக்குத் தெரிந் திருக்கும் என்று கருதுகிறேன். அந்த நோய் கடந்த ஆண்டும் இருந்தது என்று அறிக்கையிலும் இருக்கிறது. இந்தப் பூச்சி

1975 நவம்பர் 6]

யினால் தஞ்சை மாவட்டத்தில் இன்று குறுவைச் சாகுபடி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி, மதுரை, புதுக்கோட்டை போன்ற பகுதிகளிலும்கூட ஏ.டி.டி. 31, கருணை போன்ற குறுகிய காலப் பயிர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தஞ்சையைப் பொறுத்த வரையில் 4,32,000 ஏக்கர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைப் போடுங்கள்.

திரு. குழ. செல்லையா : பாதிக்கப்பட்ட இடங்களில், எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே அதுசம்பந்தமாக விளக்கம் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தஞ்சை மாவட்டத்தில் இந்தப் பூச்சியால் பாதிக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு ஏறத்தாழ ஆறுயிரம் ஏக்கர். மற்ற மாவட்டங்களில் பூச்சியால் பாதிக்கப்பட்ட நிலப்பரப்பு ஏறத்தாழ 3 700 ஏக்கர். தஞ்சை மாவட்டத்தில் இந்தப் பூச்சியைக் கொல்வதற்காக வெகு தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை அந்த மாவட்ட விவசாயிகளைக் கேட்டால் அவர்கள் சொல்வார்கள். இதைத் தடுப்பது கடுமையான ஒன்று என்பதை ஒப்புக்கொண்டுதானாக வேண்டும். இந்தப் பூச்சி எப்போது வருகிறது என்றால் வானம் மப்புமந்தாரமாகி மழை பெய்யத் தொடங்கி நிலத்தில் நீர் கட்டிய பிறகு வடிகால் இல்லாமல் இந்தப் பூச்சி தோன்றுகிறது.

கதிர் தோன்றுகிற பருவத்தில் பூச்சி தாக்குகிறது. நெல்லின் அடிப்பகுதியில் இருந்து நெல்மணி வரை விழுந்துவிடுகிறது. சாதாரணமாக தீயால் எரிக்கப்பட்டு கருகி எப்படி பயிர் போய் விடுமோ அப்படிப் போகும். வட்ட வட்டமாக சிறுசிறு பகுதிகளில் போகும். சில விவசாயிகளுக்கு இந்தப் பூச்சியால் அதிக நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க முடியும். வானம் மப்புமந்தாரமான பிறகு பூச்சி மருந்து தெளிப்பது கடினம். பயிரை விலக்கிவிட்டு இடையில் தெளிக்க வேண்டும். தண்ணீர் இருக்கும்போது தெளிப்பது கடினம்.

கூடுமான வரையில் விவசாயிகளிடம் சொல்லி வருகிறோம். தஞ்சை மாவட்டத்தில் கூட செப்டம்பர் மாதம் அறுவடை செய்தால் ஏ.டி.டி. 31 அல்லது குறுவைப் பயிர் ஏக்கருக்கு மூன்று டன்

விளையும். மற்ற மாவட்டங்களில்கூட அதிகம் விளையும். ஐப்பசி கார்த்திகை மாதம் செய்வது என்பது கடினம். பூச்சி தாக்கு வதற்கு முன்னால் என்ன செய்யலாம் என்பதைப்பற்றி அரசு தீவிரமாக பார்த்துக் கொண்டுவருகிறது. அடுத்த குறுவையில் தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் என்று கருதுகிறேன். வந்தபின் காப்பதைவிட வருமுன் காப்பது சிறந்தது என்ற அடிப்படையில் செயல்படுத்த இருக்கிறோம்.

திரு. குழ. செல்லையா: இந்தப் பூச்சி கதிர் அறுவடை செய் வதற்கு 15 தினங்களுக்கு முன்னால் விழுகிறது. அமைச்சர் அவர்கள் பூச்சி மருந்தை அடியில் போடும்படி சொல்கிறார்கள், தண்ணீரை வடித்துவிட்டு. 15 தினங்களுக்கு முன் விழுகிற பூச்சி நெல்லை மாவாக்கிவிடுகிறது. தண்ணீரை வடித்துவிட்டு மருந்து அடிப்பது இயலாத காரியம். ஆகவே, இதற்கு ஏதாவது மாற்றுத் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த புகையான் பூச்சி யைப் பொறுத்தவரையில் எவ்வளவு பகுதி இதனால் பாதிக்கப்பட் டிருக்கிறது என்பதை ஆராய்வதற்காக அமைச்சர் அவர்களும் மற்ற அதிகாரிகளும்கூட கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு சென்றிருந்தார்கள். கிட்டத்தட்ட 1 சதவிகிதம் அல்லது 2 சத விகிதம்தான் இந்தப் பூச்சியால் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதிக அளவில் இல்லை. எனினும் அந்தப் பாதிப்புக்கூட இனிமேல் ஏற்படாமலிருக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்கிறது.

(ஆ) பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து மேற்கு அண்ணா நகரில் ஒரு குடிசையில் மோதி, அதனால் மூவர் இறந்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, டாக்டர் எச். வி. ஹாண்டே, திருவாளர்கள் கே. டி. கே. தங்கமணி, ஏ. ஆர். மாரி முத்து, ஜே. ஜேம்ஸ் ஆகியோர் பேரவை விதி 41-ன்கீழ் ஒரு அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழி லாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

DR. H. V. HANDE: Mr. Speaker, Sir, I wish to call the attention of the Hon. Minister for Labour and Transport to a matter of urgent public importance, namely, the death of three persons when a Pallavan Transport Corporation bus drove into a hut at West Anna Nagar on 25th October 1975.

THIRU K. T. K. TANGAMANI: Sir, I wish to call the attention of the Hon. Minister for Labour and Transport to a matter of urgent public importance, namely, the death of three persons when a Pallavan Transport Corporation bus drove into a hut at West Anna Nagar on 25th October 1975.

THE HON. THIRU K. RAJARAM: On 25th October 1975, Fleet No. B 372 of route 41 (Mandavalli—Anna Nagar West) had taken trip at 22-06 hours from Mandavalli and was coming to Anna Nagar West bus terminus. Thiru Mohan (Staff No. 8965) and Thiru Kandasamy (Staff No. 7280) were detailed as Driver and Conductor on the bus. As the bus was proceeding along Second Avenue Road of Anna Nagar, instead of turning to right to reach the terminus, it went straight on the road and moved into three huts (Thillaiyadi Valli Nagar). As a result, a boy aged about 17 years, a girl aged about 12 years and a lady aged about 45 years were grievously injured. The boy and the girl were taken to K.M.C. Hospital and they died on the way to the hospital. The lady died on the spot. Besides these deaths, four persons were injured and they were admitted in the Hospital. Two were admitted in the K.M.C. Hospital and two in General Hospital.

It was alleged by the Driver that when he tried to apply the brakes and swerve to right, the brakes did not act and the vehicle went straight and stopped after hitting the huts; while the conductor stated that as the vehicle was going away from its course he blew a long whistle to stop the vehicle but in vain.

The preliminary investigation shows that the Driver must have been coming recklessly, at a very high speed and absent mindedly without turning right to reach terminus, went straight where the road ends and rammed the vehicle against the huts. The huts were demolished and the vehicle was heavily damaged. The

theory advanced by the driver that the brakes did not act is only an after thought. There was no doubt about his coming at good speed and also about his absent-mindedness. The Motor Vehicle Inspector's report is awaited.

The driver is kept under suspension an departmental action against him has been initiated. Action is being taken to pay compensation to the victims of the accident.

டாக்டர் எச். வி. ஹாண்டே: சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் அந்த பிரேக் அப்ளை செய்கிற நேரத்தில் சரியாக வேலை செய்யாததால் அந்த விபத்து ஏற்பட்டது என்று டிரைவர் கூறியதாகவும், அதை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் கூறினார்கள். ஆனால் இப்போது அரசாங்கத்தின் பல பஸ்களில் அந்த நிலைமை இருக்கிறது. ஆகவே, டிரைவர் சொல்லும் கருத்தையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது இருக்கும் பல பஸ்களுக்கு பிரேக், மற்ற கருவிகள் சரியான வகையில் இருப்பதில்லை, அதை டி. சி. ஆபீசில் செக் செய்வதற்கு, டெஸ்ட் செய்வதற்கு அதிக மாகத் தாமதம் ஆகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, அரசாங்க பஸ்களைப் பொறுத்தவரையில் சரியான வகையில் இந்த டெஸ்ட்களையெல்லாம் செய்து, சரியான கண்டிஷனில் இருக்கும் பஸ்களை விடுவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா?

அதே மாதிரியாக இறந்தவர்களுக்கும் காம்பன்சேஷன் கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். வேறு வசதிகள், வேறு உதவிகள் ஏற்பாடு செய்யப்பட்டதா என்பதையும் கனம் அமைச்சர் அவர்கள் அறிவித்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, சவ அடக்கத்திற்கு ஒரு நபருக்கு ரூ. 100 வீதம் அந்தக் குடும்பத்திற்கு நிதி வசதி தரப்பட்டது. சவ அடக்க ஏற்பாடுகளை போக்குவரத்து இலாகாவினரே பார்த்து இருக்கிறார்கள்.

பிரேக் ஃபெய்ல்யூரைப் பொறுத்தவரையில், அந்த பஸ் மந்தவெளியில் இருந்து, அண்ணா நகருக்கு பாசஞ்சர் பஸ்ஸாகப் போய் இருக்கிறது. ஷெட்டுக்குப் போகும்போதுதான் இந்த விபத்து ஏற்பட்டு இருக்கிறது. பிரேக் ஃபெய்ல்யூர் என்பது எப்போது வேண்டுமானாலும் ஏற்படலாம். பிரேக்கில் ஆயில் குறைந்து

1975 நவம்பர் 6] [திரு. க. இராசாராம்]

போனுலும் ஏற்படலாம், அல்லது டியூப் கட்டாகி விட்டாலும் ஏற்படலாம். இது திடீரென்று ஏற்படக்கூடியது. டிரைவர் சொல்வதிலும் உண்மை இருக்கலாம். அதை பிரேக் இன்ஸ்பெக்டர் வந்துதான் கண்டுபிடித்து முடிவு சொல்ல வேண்டும். பிரேக் இன்ஸ்பெக்டர் ரிப்போர்ட் இன்னும் அரசுக்கு வரவில்லை. அது வந்த பிறகு இந்த மன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். (குறுக்கீடு)

பஸ் பிட்னஸ் சர்ட்டிபிகேட் பெற்ற பிறகுதான் ஓடுகிறது. அந்த பஸ்ஸுக்கு பிட்னஸ் சர்ட்டிபிகேட் இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன். மந்தைவெளியில் இருந்து, அண்ணு நகருக்கு பாசஞ்சரை ஏற்றிக்கொண்டு போய் இருக்கிறது. ஷெட்டுக்குப் போகும்போதுதான் இந்த விபத்து ஏற்பட்டு இருக்கிறது.

அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். சீக்கிரம் வீட்டிற்குப் போக வேண்டுமென்ற எண்ணத்தில் வேகமாக டிரைவர் வண்டியை ஓட்டிச் சென்று இருக்கலாம். இரண்டாவ தாக, அண்ணு நகர் ரோடு 120 அடி ரோடு. அதைப் பார்த்தாலே டிரைவர்களுக்கு ஒரு குஷி வந்து விடும். டிரைவிங் தெரிந்தவர் களுக்கு அது தெரியும். உங்களுக்குத் தெரிந்து இருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே, அந்த வகையில் விபத்து ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. வேறு ஒன்றும் இல்லை.

காம்பன்சேஷனைப் பொறுத்தவரையில் அந்தக் குடும்பத் தாருக்கு அவர்கள் கேட்ட தொகைக்கும் அதிகமாகவே தொகை கிடைக்க இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இறந்து போனவர்கள்—ஆர்.எம்.எஸ்.-சில் பணியாற்றக்கூடிய கிருஷ்ணன் துணைவி யார், அவர்களுடைய மகன் பி.யு.சி. படித்துக்கொண்டு இருப்பவன், பெண் 8-வது வகுப்பு படித்துக் கொண்டிருப்பவள், திருநெல்வேலி குறுக்குச் சாலை சுப்பையா டாக்சி டிரைவர் மகள்—இவர்களது குடும்பங்களுக்கு அரசாங்கம் நேரடியாகக் காம்பன்சேஷன் கொடுக்க வேண்டும். காம்பன்சேஷன் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். அது எவ்வளவு கொடுக்கப் படுகிறதோ அது நேரடியாக உடனடியாகக் கொடுக்கப்பட வேண்டும்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 நவம்பர் 6

அன்று சவ அடக்கத்திற்காக ஆஸ்பிடலில் இருந்து திரு. கிருஷ்ணன் அவர்களை டிஸ்சார்ஜ் செய்து போகச் சொல்லி இருக்கிறார்கள். அவர் திரும்பி ஆஸ்பிடலுக்கு போன போது அவரை மறுபடியும் அட்மிட் செய்ய முடியாது என்று சொல்லி விட்டார்கள். இந்த நிலைமையைப் பார்த்தால் நான்கு பேருக்கும் வைத்திய வசதி கொடுக்கப்பட்டதா என்பது தெரியவில்லை. சர்க்கார் உத்தியோகஸ்தர், மனைவியின் சவ அடக்கத்திற்காக டிஸ்சார்ஜ் வாங்கிச் சென்றவர், மறுபடியும் வந்து அட்மிஷன் கேட்டபோது அட்மிஷன் மறுத்து இருக்கிறார்களே, இது அரசுக்குத் தெரியுமா? இம்மாதிரியான நிலைமைகளில் உடனடியாக அவர்களுக்கு காம்பன்சேஷன் கொடுக்க அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்து இருக்கிறது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: எனக்குக் கிடைத்த தகவல் படி கிருஷ்ணன், அமுதா, நாராயணசாமி, திலகவதி ஆகிய நான்கு பேருக்கும் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டதாகத் தகவல் கிடைத்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர், திரு. கிருஷ்ணன் அவர்களுக்கு மறுபடியும் சிகிச்சை அளிக்கப்படவேண்டுமென்று விரும்புவார்களானால், அதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்வதற்குத் தயாராக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். கிருஷ்ணனுடைய மகன் பி.யு.சி. படித்துக்கொண்டு இருப்பவன், இறந்து விட்டான் என்று கேள்விப்பட்டதும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகவும் வருந்தினார்கள். அந்த துக்கத்திலே—இந்த மன்றத்திலுள்ளவர்கள் துக்கத்தோடு—எங்களுடைய துக்கத்தையும் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருக்கிறோம். இந்த விபத்து எதிர்பாராதவிதமாக நடைபெற்று இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கான டிரிபியூனல் ஒன்று அமைக்கப்பட்டு இருக்கிறது. அந்த டிரிபியூனல் முன்னாலே, பாதிக்கப்பட்டவர்கள் போனால், நல்ல காம்பன்சேஷன் தொகை பெறுவதற்கு அவர்களுக்குச் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அந்த டிரிப்யூனலுக்குப் போய் வர எவ்வளவு நாள் ஆகும் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ரயில்வேயில் இந்த மாதிரியான விபத்துக்கள் ஏற்பட்டால் உடனடியாக இவ்வளவு தொகை காம்பன்சேஷன் என்று

1975 நவம்பர் 6] *[திரு. கே. டி. கே. தங்கமணி]*

கொடுத்து விடுகிறார்கள். அப்படிக் கொடுத்த பின்னாலே டிரிபியூனலுக்குப் போய் பேசலாம். அந்த மாதிரியான ஏற்பாட்டை இங்கேயும் செய்வதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அந்தக் குடும்பத்தார் விரும்பினால் உடனடியாக ஒரு தொகை கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யத் தயாராக இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, ரோடு விபத்துக்கள், இம்மாதிரியான அதிர்ச்சி தரத்தக்க நிகழ்ச்சிகள் நடைபெறாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். ஆனால் இப்போது சாதாரணமாக இம்மாதிரி விபத்துக்கள் நடைபெறுவதை நாம் கண்ணால் பார்த்து இருக்கிறோம். பஸ் விபத்துக்கள் என்பது ரோடுகளில் தான் ஏற்படும். ஆனால் இப்போது எல்லாம் பஸ்கள் ரோடுகளின் அருகில் இருக்கிற குடிசைகளைப் போய் தாக்கி விபத்து ஏற்படுகிறது. அருகில் உள்ள கிணறுகளில் பாய்ந்து இம்மாதிரி விபத்து ஏற்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் பஸ்ஸில் ஏற்படும் கோளாறுகள் தான்.

அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பஸ் மந்தைவெளியிலிருந்து அண்ணாநகருக்குச் சென்று இருக்கிறது, கண்டிஷனில் தான் இருந்து இருக்கிறது என்று. ஆனால் நாங்கள் தினமும் பஸ்களில் பயணம் செய்கிறோம். அப்படிச் செல்கிறபோது டிரைவர்கள் சொல்கிறார்கள், பஸ்ஸில் பிரேக் பிடிக்கவில்லை இருப்பினும் நாங்கள் கவனமாக ஓட்டிச் செல்கிறோம்; இன்று இந்த மாதிரி கம்ப்ளெயின்ட் இருக்கிறது என்று எழுதி வைத்தால், உதாரணமாக 22-ம் நெம்பர் ரூட்டில் ஓடிக்கொண்டிருக்கிற பஸ்ஸில் இந்த நிலைமை இருக்கிறது என்று எழுதி வைத்தால், அந்த பஸ்ஸை அடுத்த நாள் 23 ரூட்டிற்கு மாற்றிவிடுகிறார்கள். அந்த ரிப்பேர் பார்க்காமலேயே என்று புகார் சொல்கிறார்கள். வொர்க்ஷாப்பில் சரியான முறையில் அதைக் கவனிப்பது இல்லை. சரியான முறையில் ஸ்பேர் பார்ட்ஸ் இல்லை என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டிரான்ஸ்போர்ட் டிமாண்டில் பேசுவது போல் பேசக் கூடாது.

திரு. ஜே. ஜேம்ஸ்: ஆகவே, பிரேக் சரியாக இருந்தால் இந்த மாதிரியான நிகழ்ச்சிகள் நடைபெற்று இருக்காது. ஆகவே, பஸ்ஸில் டிரைவர் சொன்ன அந்தக் குறைபாடு இருக்கலாம் என்பது என்னுடைய எண்ணம். ஆகவே, இந்த மாதிரியான நிகழ்ச்சிகள் இனி நடைபெறா வண்ணம் அரசாங்கம் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், காம்பன்சேஷனைப் பொறுத்தவரையில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது உறுப்பினர்களுக்கு பேச வாய்ப்பு கொடுத்தது அமைச்சர் அவர்கள் கொடுத்த தகவலைத் தவிர வேறு ஏதாவது தகவல் பெறுவதற்குத்தானே தவிர யோசனை சொல்வதற்கோ, புதிய கருத்துக்களைச் சொல்வதற்கோ அல்ல.

திரு. ஜே. ஜேம்ஸ்: அமைச்சர் அவர்கள் காம்பன்சேஷன் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஒரு பி.யு.சி. படித்த மாணவனுக்கு ரூ. 20,000 முதல் ரூ. 30,000 வரையில் கிடைக்கும். ஆனால் அவன் வழக்காடி இதைப்பெறுவதற்கு நீண்ட நாட்கள் ஆகும் என்பதால், இந்தக் காம்பன்சேஷன் தொகையை அரசாங்கமே உடனடியாகக் கொடுக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியது போல், ரூ. 100 கொடுத்தால் போதாது. மாண்புமிகு சீப் மினிஸ்டர் பண்டிலிருந்தாவது உடனடியாக ரூ. 1,000 அல்லது ரூ. 2,000 கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தால் அது ஒரு பாதுகாப்பாக இருக்கும், அதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா?

(முற்பகல் 10-30)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, எந்த இலாக்காவும் அல்லது எந்தத் தனிப்பட்டவர்களும் பொறுப்பேற்க முடியாத சூழ்நிலையில் ஆதரவற்றிருந்துவிடுவார்களேயானால் உடனடியாக முதலமைச்சர் நிதியிலிருந்து உரிய தொகை, ஐயாயிரம், மூவாயிரம், இரண்டாயிரம் என்று வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்த விபத்தைப் பொறுத்த வரையில், இதற்கு பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் போக்குவரத்துத் துறை இருக்கின்ற காரணத்தால் தான், முதலமைச்சர் நிதியிலிருந்து தரப்படவில்லை. ஏற்கனவே இது போன்ற விபத்துக்களில், வழக்கு மன்றங்களுக்குச் சென்று அல்லது வேறு

வகையிலே, எந்த அளவுக்கு இழப்பீட்டுத் தொகை பெற்றிருக்கிறார்களோ, அதைக் கவனத்தில் வைத்துக்கொண்டு, இந்தக் குடும்பத்தைப் பொறுத்த வரையில், வழக்கு மன்றத்துக்குச் செல்லாத வகையிலே, அதைப் பூராவும் முன்கூட்டி வழங்க அரசாங்கம் முன்வரும். அதைப் போக்குவரத்து அமைச்சருடனும், மற்றவர்களுடனும் கலந்து விரைவில் நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப்படும்.

(4) அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 23-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, "பேரவையின் 23-ஆவது விதியை இன்று தளர்த்தி, பேரவை. அரசினர் அலுவல்களைப் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) 1975 ஆம் ஆண்டு, சக்தி பைப்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/75)—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூன்று நாட்கள் தான் பில்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு இரண்டாவது நாள். நாளையோடு பில்களை முடிக்கவேண்டும். மொத்தம் 11 பில்கள் இருக்கின்றன. ஆகவே ஒவ்வொரு பில்லுக்கும் எத்தனை மணி நேரம் என்பதைத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும் என்று அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, the three Bills to come after this Bill are the same and identical and so you can give substantial time to this Bill.

நான்கு பில்களிலும் ஒரே அம்சங்கள் வருகின்றன. ஆகவே, இந்த பில்லுக்கு அதிக நேரம் கொடுத்தால், மற்ற மூன்று பில்களும் இதில் ஒன்றாகப் போய்விடும். இந்த பில்லை விவாதிக்க 2 மணி நேரம் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது 10½ மணியாகிறது. மூன்று மணி நேரம் தான் இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்த பில்லிலே பொது விவாதத்தை வைத்துக்கொண்டு, பிரிவு வாரியாக பாஸ் செய்வதில் அதிக நேரமாக்காமல் பாஸ் செய்வது பொருத்தமாக இருக்கும். நான்கு பில்களும் ஒரே கருத்தைக் கொண்டவையாக இருக்கின்றன. ஆகவே இந்த மாதிரி செய்தால் சிறப்பாக விவாதங்களை நடத்துவதற்கு ஏதுவாக இருக்கும் என்று ஆலோசனை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எவ்வளவு நேரம் வேண்டும் என்பதைச் சொல்லுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவரவர்களே, இந்த பில்லை எடுத்துக்கொண்டு இரண்டு மணி நேரத்தில் முடித்துவிட்டு, பிறகு மற்ற மூன்று பில்களையும் விவாதம் இல்லாமல் முடித்துக்கொள்ள முடியும். அதன் பிறகு அர்பன் லாண்டு டாக்ஸ் பில் இருக்கிறது. அதைத் தனியாகத் தான் விவாதித்து முடிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 12½ மணிக்குள் நான்கு பில்களையும் முடிக்க வேண்டும். அர்பன் லாண்டு டாக்ஸ் பில்லுக்கு எவ்வளவு நேரம் வேண்டும்? அதையும் இன்றைக்கே விவாதித்து முடிக்க வேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அதை இன்றைக்கு முடிக்க முடியாது. அது முக்கியமான பில். பணம் சம்பந்தப்பட்ட பில்.

1975 நவம்பர் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த பில்களை இன்றைக்கு முடிக்கவில்லை என்றால், சனிக்கிழமை நான்-அபிஷியல் டே இல்லாமல் போகின்ற நிலைமை ஏற்படும். எப்படியாகிலும் இன்றைக்கே இந்த பில்களை எல்லாம் முடிக்க வேண்டும்.

திரு. செ. அரங்கநாயகம்: ஒரு மணி நேரத்தில் அர்பன் லாண்டு டாக்ஸ் பில்லை விவாதித்து முடிக்க முடியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிறைய உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு உறுப்பினரும் 10 நிமிடத்திற்கு மேல் எடுத்துக்கொள்ள வேண்டாம். பத்து நிமிடத்திற்கு மேல் போனால் மணியடித்து உட்கார வைக்க வேண்டி வரும்.

* **திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, பாக்கி பில்கள் பேரில் பேசப்போவதில்லை. ஆகவே கூடுமான வரையில் சிக்கிரம் முடித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

Yesterday, I had suggested that along with the Bill a statement showing in detail the past performance of this Company as well as the performance of the Company after the take-over of its management by the Government and the prospects as envisaged by the Government, ought to have been placed before this House.

Though the House would welcome this Bill as a progressive measure, it is entitled to know the full facts about its past, present as well as the future. That is why I have pointed out that a detailed statement giving the financial picture as well as the prospects regarding production, sale, etc. should have been placed before this House.

Now, Sir, I come to compensation. The Bill provides for payment of compensation of about Rs. 2 crores. The word compensation is not used but the word 'amount' is used. Sir, I fail to know why compensation should be paid to this Company and for what? Why such a reward should be given? When you see the Annual Report of this Company relating to 1974–75

of course, this report was given when it was being run by the Government—you will find that many crores of rupees have been invested in this Company. The product of this prestigious Company is a very dear one and it is in great demand. There is only one similar company in the whole country. Yet what is the position? The Company has incurred a huge loss.

We have no figures with regard to the functioning of the Company or its performance before December 19, 1972. But the picture that one finds in the Annual Report is that against a liability of Rs. 10.75 crores, the assets of the Company come to only about Rs. 7 crores—Fixed assets Rs. 342 lakhs, Current assets Rs. 332 lakhs and a partly sum of Rs. 87,000 towards investments. So, the assets are less than Rs. 7 crores whereas the liabilities come to Rs. 10.75 crores. Why has it happened? That is evidently because the Company has been mismanaged and there is no doubt about it. Yet instead of punishing the management, it is paid compensation. Also, out of this amount, the share capital is only about Rs. 2 crores and most of the share capital would be public money and only a small portion will be Directors' money and one of the Directors is the Chairman. What have they done with regard to this money? It has been frittered away and the Company has been mismanaged with the result that even now in 1975-76 the Company is not sure of its prospects.

I have here a report of the present Managing Director and I crave the indulgence of Mr. Deputy Speaker, to read a few portions of it. It says—

"The Company had procured one air-cooled machine to produce pipes of higher diameter namely 350 mm to 500 mm. Since this is different from conventional water cooled machines, there was not enough technology available for commissioning this machine, as the designer and supplier of this machine was killed in an accident earlier. Hence this machine was not used for manufacture"

I do not know when this deal was entered into between this Company and the designer and whether it was when the Company was under private management or after its take over by the

Government in December 1972. Whatever it be, this shows a very sorry picture. When the company enters into agreement with a foreign partner, it should be a company. Because the partner and supplier of the machine passed away, they could not do anything. The machine could not be commissioned. What is this? Many millions of rupees must have been paid to that partner for that agreement. But the machine could not be commissioned because the partner and supplier passed away. The company had therefore to go in search of a suitable person and go to various places for finding the person who has the know-how. This is a sorry state of affairs.

It is said that as a result of improvements carried out before starting of production and during the production, a production of 12,000 tonnes during 1973–74 was attained and it was the highest in the history of the plant. The Company was in existence for so many years and it was only in 1973–74 that this target could be attained and that was highest in the history of the plant. What does this show. The company was not properly run previously.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பத்து நிமிடங்கள் ஆகிவிட்டன. நேற்றைக்கு பத்து நிமிடங்கள், இப்போது பத்து நிமிடங்கள்—ஆக 20 நிமிடங்கள் பேசி இருக்கிறீர்கள். சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

THIRU A. SUBRAMANIAM: I shall try to finish quickly. The company had been mismanaged in the past. It is now rewarded for this by a huge amount of Rs. 2 crores. I would submit that this is highly atrocious. As my friend Mr. Palanisamy pointed out yesterday, if at all anything should be paid to the previous owner, it is not reward but punishment, for mismanagement for grossly mismanaging the company. Moreover I, am given to understand that the Government had advanced about more than Rs. 1 crore to this company. I am given to understand (I am subject to correction) that some of the loans advanced have been written off by Government. I would request the Hon. Minister to throw more light on these things.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்ளுங்கள்.

THIRU A. SUBRAMANIAM: Yes, Sir, Then there is this question of compensation. First of all, there should not be compensation. If at all you want to give it, why give it in cash, You can give it in bonds.

Now that the company has been taken over by Government, I want to say one thing. One of the points in the 20 point programme of the Prime Minister is labour participation in management of the company. Government may introduce this in this company and make it a model for others.

Another point is the top heavy management. My friend Mr. Palaniswamy pointed it out yesterday. In public sector industries, there is the tendency to increase, more and more, managerial posts and when it comes to labour side, they say there should be economy in labour expenditure. On the managerial side, there is no economy at all. This Sakthi Pipes should be run as a model without top heavy management. It should be seen that administrative expenditure is reduced to the minimum; efficiency should be maximised. I find that after take-over by Government, the losses are increasing. From Rs. 30 lakhs loss in 1973–74, in 1974–75 the loss has a mounted to Rs. 70 lakhs. Why? I submit so many things have to be told to this House and light has to be thrown on many points, connected with the functioning of this company. While I welcome this take-over, I say that after take-over this company should be run as a model company. It should show efficiency. Management should not be top-heavy. There should be good industrial relations on the basis of labour participation in management. Thank you.

* திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சக்தி பைப்ஸ் நிறுவனத்தை தேசிய மயம் ஆக்குகின்ற-கையகப்படுத்துகின்ற இந்த மசோதாவை அண்ணா தி.மு.க.-வின் சார்பில் நான் வரவேற்கிறேன். அது எங்களுடைய கொள்கை என்றாலும் இதோடு சேர்ந்துள்ள பல்வேறு நிலைமைகளை

1975 நவம்பர் 6] [திரு. செ. அரங்கநாயகம்]

இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டிய நிலை எங்களுக்கு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1967-க்கு முன்னால் துவக்கப்பட்ட இந்த கம்பெனி தரக்குறை வான பைப்களை உற்பத்தி செய்தது அப்போது ஆட்சியிலிருந்த காங்கிரஸ் கட்சியினர் அதற்கு ஆதரவு தர மறுத்தார்கள். ஆனால் 1967-க்குப் பிறகு ஓராண்டிற்குள் இங்கே நடைபெற்றுக் கொண் டிருக்கிற தி.மு.க. ஆட்சியினுடைய துணை கொண்டு ஒப்பந்தம் போடப்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் 40 லட்சம், 25 லட்சம், 20 லட்சம் என்று பல்வேறு கட்டங்களில் பல்வேறு தொகைகளை அந்த நிறுவனம் பெற்றிருக்கிறது.

நான் இதில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் இந்த மன்றத்தில் உறுப்பினராகிய இரண்டு ஆண்டு காலத்தில், இந்த மன்றத்தில் கொண்டு வரப்பட்ட நிதிநிலை அறிக்கைகளிலும் துணை நிதிநிலை அறிக்கைகளிலும் இந்த சக்தி பைப்ஸ் நிறுவனத்திற்கு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை பார்த்துக் கொண்டு வருகிறேன். நேற்று நிறைவேற்றப்பட்ட நிதி ஒதுக்கீட்டு மசோதாவில் கூட ரூ. 15 லட்சம் இந்த நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசின் செல்லப்பிள்ளையாக அந்த நிறுவனம் இருந்திருக்கிறது. இதற்கெல்லாம் காரணம், அந்தக் கம்பெனியின் பொறுப்பாளராக, மேனேஜிங் டைரக்டராக இருந்து வந்துள்ள பொள்ளாச்சி மகாலிங்கத்தின் செல்வாக்கு தான் என்பதை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன்.

அப்படிப் பார்க்கும்போது அந்த தனியார் நிறுவனம் நஷ்டத்தில் ஓடிக் கொண்டு இருக்கிறது. அதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சர்க்காரின் மேற்பார்வையின் கீழ் கொண்டு வந்த பிறகும் நஷ்டத்தில் தான் நடைபெற்று வந்திருக் கிறது. இந்தக் கருத்தில் இந்த மசோதாவைப் பார்க்கும் போது ரூ. 2 கோடி நஷ்ட ஈட்டுத் தொகை தந்திருப்பதாக இந்த மசோதா குறிப்பிடுகிறது. இந்த நிறுவனத்திற்கு யார் யார் உதவி செய்திருக்கிறார்கள். சர்க்கார் யார் யாருக்கெல்லாம்

நஷ்ட ஈடு தரப் போகிறது, எவ்வளவு தொகை தரப் போகிறது என்பதெற்கெல்லாம் சர்க்கார் தரப்பிலிருந்து எந்த விவரமும் தரப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு எங்களுக்குத் தரப்பட்டிருக்கிற மசோதாவில், கடைசி பகுதியில் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

According to Clause 22 of the Bill, if the liability specified in category I of the Schedule is not discharged fully by the Commissioner out of the amount paid to him that liability shall be assumed by the Government and transferred to the Government company.

என்று கூறப்பட்டிருக்கிறது. அதேபோல, கேடிகரி 1 என்று எடுத்துக் கொண்டால், அதிலே ஒரு விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

(a) Loans advanced by a Bank.

(b) Loans advanced by an institution other than a Bank.

(c) any other loan

(d) any credit availed of for the purpose of trade or other manufacturing operations.

என்று தரப்பட்டிருக்கிறது. ஆக, ரூ. 2 கோடி எ, பி ஆகிய இரண்டு ஐட்டங்களுக்கே சரியாகிவிடும். மேற்கொண்டு. சி.டி. ஐட்டங்களுக்கு பணம் தருவதாக சர்க்கார் இன்றைய தினம் பொறுப்பேற்று இருக்கிறது. அதிலே 22-வது பிரிவில் இன்னொன்றையும் சொல்லி இருக்கிறார்கள்;

Where any liability of the owner of the undertaking arising out of any item specified in category I of the Schedule is not discharged fully by the Commissioner out of the amount paid to him under the Act, the Commissioner shall intimate in writing to the Government the extent of the liability which remains undischarged and that liability shall be assumed by the Government.

என்று இருக்கிறது. ஆக, சர்க்காரின் மேற்பார்வைக்கு வந்ததற்குப் பின்னாலும் கூட அதனுடைய சொந்தக்காரரின் இது

1975 நவம்பர் 6] [திரு. செ. அரங்கநாயகம்]

சம்பந்தமான கடன்களை இந்த சர்க்கார் பொறுப்பேற்று தீர்த்து வைக்கும்படியான நிலை இருக்கிறது என்பதை இந்த இரண்டு மூன்று பகுதிகளிலிருந்து தெரிய வருகிறது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இதில் ஒரு சிறிய விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தர விரும்புகிறேன். கேடிகரி I பிரிவில் நிர்வாகத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு கம்பெனி இருக்கிறது. அதை அரசாங்கம் எடுத்துக் கொள்கிறது என்றால், ரிலீப் அண்டர்டேக்கிங்-ஆக அரசாங்கம் அதை டிக்ளேர் செய்கிறது என்றால் அரசாங்கம் மேனேஜ்மெண்டினை டேக் ஓவர் செய்கிறது. அந்த போஸ்ட் டேக் ஓவர் பிரியடில் அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு மேனேஜ்மெண்ட் முன்னர் கொடுக்க வேண்டிய கடன்களை கொடுப்பது தான் நியாயம், முறை. இது போஸ்ட் டேக் ஓவர் பிரியடில். மேனேஜ்மெண்ட் செய்த கடன்களை கொடுப்பது கடமையாக இருக்கிற காரணத்தால் இந்த இனங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

திரு. செ. அரங்கநாயகம்: அப்படியானால், "Where any liability of the owner of the undertaking arising out of any item specified in category I of the Schedule . . ." என்று இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

இது மட்டுமல்ல. வேறு சில பிரிவுகளையும் அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிர்வாகத்தை எடுத்துக்கொள்வதற்காக, சர்க்கார் எத்தனை பணம் தந்திருக்கிறது என்ற முழு விவரங்களையும் அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டவராக இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு கூட இந்த நிறுவனம் நல்லமுறையில் நடக்க வேண்டும் என்பதற்காக கோவை டெக்ஸ்டூல் கம்பெனி மேனேஜிங் டைரக்டரை ஒரு டைரக்டராகப் போட்டு இதைச் சீர்திருத்த ஒரு ஆய்வினைச் செய்யச் சொல்லியிருந்தார்கள். அவர் அவ்வாறு ஆய்வு செய்து 150 பக்கங்கள் கொண்ட ஒரு அறிக்கை

தந்தார்கள். அவர் செய்த சிபாரிசுகளை நடைமுறைக்கு கொண்டு வரத் தவறியதன் காரணமாக அந்தக் கம்பெனி இன்றுவரையில் நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது.

உதாரணமாக, இந்த நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படுகிற பைப்புகளை சர்க்காரே கூட வாங்கக்கூடிய நிலைமையில் இல்லை என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். அண்மையில் நடைபெற்ற திருவான்மியூர் குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக பாலித்தின் பைப்புகளை வாங்கியதாகச் சொல்லப் படுகிறது. ஆகவே சக்தி நிறுவனத்தின் பைப்புகள் தேவையற்றதாக இருக்கிறது என்ற நிலைமையில் இருந்தால் அந்த உற்பத்தியை நிறுத்தி அந்த நிறுவனத்தில் உள்ள சாதனங்களின் மூலமாக வேறுபல பொருள்களை உற்பத்தி செய்ய இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அப்படிப் பார்த்தால் ரெயில்வேக்கும், சுகர் இண்டஸ்ட்ரீஸ். சிமெண்டு இண்டஸ்ட்ரீஸ் இவைகளுக்கும் தேவையான பல்வேறு இரும்புச் சாமான்களை இந்த நிறுவனத்தின் மூலமாக உற்பத்தி செய்ய முடியும். அதற்கு ஒரு பெரும் சந்தை இருக்கிறதென்று கூட சொல்லப்படுகிறது. அத்தகைய முறையில் அரசு ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு கூட, இந்த நிறுவனத்தை ஆரம்பித்த பொள்ளாச்சி மகாலிங்கம் கோவை மாவட்டத்தில் செல்வாக்கு மிகுந்த நபராக இருந்ததால் அங்கேயிருக்கிற ஆயிரக்கணக்கான விவசாயிகளிடமிருந்து பணம் திரட்டப்பட்டு பங்குகளைச் சேர்த்து இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்றையதினம் அவர் எந்த அளவுக்கு தப்பித்துக் கொண்டார்கள் என்று தெரிகிறது. அவர்களிடம் ஏமாந்த விவசாயிகளுக்கு எந்தவிதமான பரிகாரமும் கொடுக்கப்படவில்லை. என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது எதில் கொண்டு போய் விடும்? கிராமப்புற வருமானத்தை பயன் படுத்திக் கொள்ள வேண்டுமென்று பல்வேறு அறிஞர்கள் சொல்லுகிறார்கள், அரசாங்கமும் சொல்லுகிறது. அவ்வாறு வேறு யாராவது தொழில் செய்ய வேண்டுமென்று விரும்பினால் முயற்சி எடுத்தால் கிராமப்புற விவசாயிகள் இனி பணம் தர

1975 நவம்பர் 6] [திரு. செ. அரங்கநாயகம்]

மறுப்பார்கள். அதற்கு ஒத்துழைப்புத் தர மறுப்பார்கள், என்பதைக் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, அதற்கான ஒரு நல்ல முயற்சியினை அரசு எடுக்க வேண்டும். சிறு விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் பொள்ளாச்சி மகாலிங்கத்தை நம்பித் தான் ஆயிரக்கணக்கான ரூபாயைப் போட்டார்கள். அந்த நிலைமையில் அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மசோதா ஒரு தொழிற்சாலையை தேசியமயமாக்குகிறது என்ற அடிப்படையில் வரவேற்கிறோம். பல தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கிறது என்ற முறையில் வரவேற்கிறோம். அதோடு கூட 25 சதவிகிதம் கேப்பாசிட்டியில் வேலை செய்து கொண்டிருக்கிறது. பல சீர்திருத்தங்களை மேற்கொண்டு முழு அளவில் உற்பத்தி செய்தால் ஏறக்குறைய 300 தொழிலாளர்கள் வேலை செய்யும் கம்பெனியில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்யவும் உற்பத்தியைப் பெருக்கி, கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டு அவைகளை விற்று லாபம் சம்பாதிக்கவும் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்ற அடிப்படையில் வரவேற்கிறோம்.

அதோடு சக்தி பைப்ஸ் கையகப்படுத்தும் மசோதா பொள்ளாச்சி மகாலிங்கத்தை ஓரளவுக்கு காப்பாற்றியிருக்கிறது என்று சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது என்று கூறி அமருகி றேன்.

***திரு. கா. வேழவேந்தன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநில அரசின் முன்னோடி திட்டங்களில் ஒரு மைல் கல்லாக விளங்குகிற இந்த மசோதாவை நிறை வேற்றுகிற நேரத்தில் என்னுடைய சில கருத்துக்களை இந்த மசோதாவின் மீது சொல்ல ஆசைப்படுகிறேன்.

நேற்றைக்கும் இன்றைக்கும் இந்த மசோதாவின்மீது பேசிக் கொண்டிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் இப்படிப்பட்ட தேசியமயமாக்கும் இந்த மசோதாவை வரவேற்கிற நேரத்தில் காரசாரமான கருத்துக்களையெல்லாம் சொன்னார்கள்.

முதலில் தன்னிலை விளக்கங்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகள் நிரம்பியிருக்கிற கும்மிடிபூண்டி தொகுதியில் ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு என்று கருவேப்பிலைக் கொழுந்து போல் இந்த ஒரு தொழிற்சாலை தான் இருந்து கொண்டிருக்கிறது. இந்தத் தொழிற்சாலையும் இரண்டு ஆண்டு காலம் மூடப்பட்டு அங்கு ஏறத்தாழ 500 தொழிலாளர்களின் குடும்பங்கள் நசித்து விடும் என்ற சூழ்நிலை ஏற்பட்ட பிறகு அரசாங்கம் முன் வந்து கருணை உணர்வோடு உரிய நிதி உதவி அளித்து இன்றைக்கு அந்த தொழிற்சாலை தேசியமயமாக்கப்படுகிறது என்ற நல்ல மகிழ்ச்சியான செய்தியை நாடு பார்க்கிறது.

இப்போது இந்தத் தொழிற்சாலை திறக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதை வரவேற்கிற நேரத்தில் ஒருவேளை இது மூடப்பட்டிருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர்கள், வலது கம்யூனிஸ்ட் நண்பர்கள், எதிர்கட்சி நண்பர்களும், கூட சொல்லியிருப்பார்கள் ஒரு தொழிற்சாலையை மூடிவிட்டார்களே, தொழிலாளர்களின் நிலைமை என்ன ஆவது என்று வேறு திசையிலிருந்து பேசியிருப்பார்கள். இப்போது அரசு உதவி செய்து அது திறந்து நடக்கிற நேரத்தில் பல குறைபாடுகள் சொல்லப்படுகின்றன.

இதில் முதலாவது சொல்லப்படுகிற வாதம், இந்த தொழிற்சாலைக்கு ஏறத்தாழ ரூ. 2 கோடி நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமா என்பது ஒரு பிரச்னையாகும். நான் வியாபார ரீதியில் பேசுகிறேன். இன்றைக்கு அந்த நிறுவனத்தின் மொத்த மதிப்பீடு ஏறத்தாழ ரூ. 3½ அல்லது 4 கோடி. அந்த மதிப்பீட்டு அடிப்படையில் பார்த்தால் இப்போது கொடுக்கப்படுகிற ரூ. 195 லட்சம் ஒரு நியாயமான வரம்பு என்பதை நடுநிலையோடு பார்ப்பவர்கள் நிச்சயமாக ஒத்துக்கொள்ளுவார்கள்.

நேற்று பேசிய கனம் உறுப்பினர் என். கே. பழனிசாமி அவர்கள் மறைமுகமாக இதில் மன்றத்தில் இருக்கிற ஒருவர் இயக்குநராக இருக்கிறார் என்று குறிப்பிட்டார்கள். நான் வெளிப்படையாகச் சொல்லுகிறேன். தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையிலும் கடந்த பல ஆண்டுகளாக அத்தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவனாக இருந்தவன் என்ற

1975 நவம்பர் 6] [திரு. கா. வேழவேந்தன்]

முறையிலும் கடந்த 1¼ ஆண்டு காலத்திற்கு முன்பு அதன் 13 இயக்குநர்களில் நான் ஒருவனாக இணைக்கப் பெற்றேன். இதுவரை ஏறத்தாழ நான்கு ஐந்து கூட்டங்கள்தான் போயிருப்பேன். இதுதான் என்னுடைய தொடர்பு என்பதை வெளிப்படையாகச் சொல்லுகிறேன். ஆனால் இதன் கதி என்ன?

1972-ம் ஆண்டுக்கு முன்பு சக்தி கம்பனியை அரசு எடுப்பதற்கு முன்னால் நஷ்டம் மட்டும் ரூ. 3 கோடி இருக்கும். இப்போது அது ஆண்டுக்கு ரூ. 60 லட்சமாக குறைந்துள்ளது என்பதை நினைத்து பாராட்டவேண்டுமே தவிர வேறு அல்ல.

இன்னொன்று, இயக்குநர்கள் என்ன செய்தார்கள் என்றால் என்ன பங்கு சிட்டிங் பீஸ், டிராவல்லிங் அலவன்ஸ், டெய்லி அலவன்ஸ் எதையும் வாங்குவதில்லை. சிட்டிங் பீஸ் என்ற முறையில் ரூ. 5 அல்லது பத்து கூட வாங்குவதில்லை என்று வெளிப்படையாகச் சொல்லுகிறேன். ஆகவே இதுதான் எங்கள் வரைக்கும் உள்ள பொறுப்பு.

ஏற்கனவே பல கோடி ரூபாயை பல்வேறு பைனான்சியல் இன்ஸ்டிட்யூஷன்களிலிருந்து கடன் பெற்று இந்த நிறுவனம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் ஆந்திரா எல்லையோரத்தில் அமைந்திருக்கும் இந்த கம்பெனிக்கு ஆரம்பத்தி லிருந்தே லாபத்தில் நடை பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. ஆந்திராவில் முல்கி போராட்டம் நடைபெற்றது. இது டெயில் என்ட் பகுதியாக இருக்கும் காரணத்தால் மின்சாரம் போதிய அளவுக்குக் கிடைக்க வில்லை. குழாய்களை செய்வதற்கு ஏர்கூல் மெஷின்கள் போன்ற பெரிய இயந்திரங்கள் கொரியாவிலிருந்து வரவழைக்க வேண்டும். அதற்கு அன்னிய செலாவணி தேவைப்பட்டது. இப்பேர்ப்பட்ட இடர்பாடுகள் தான் இது நல்ல முறையில் இயங்காததற்கு காரணமாக இருந்தன. மற்றபடி இந்த பைப்புகளுக்கு கிராக்கி இல்லை என்று சொல்லுவது சரியல்ல. இப்போது ரூ. 30 லட்சம் பெறுமானம் உள்ள பைப்புகள் தேவை என்று வெளி மாநிலங்களி லிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் கேட்கின்றனர். ஆனால் இந்த இயந்திரங்களைக் கொண்டு வந்து அமைத்து விரிவாக்கிய பிறகு தான் இந்தத் தொழிற்சாலையை நல்ல லாபத்தில் நடத்த முடியும் என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன். ஒரு உண்மையை மட்டும் சுட்டிக்காட்டுகிறேன்.

[திரு. கா. வேழவேந்தன்] [1975 நவம்பர் 6

அத்தொழிற்சாலை மூடியிருக்கின்ற சூழ்நிலையை மாற்றி தொழிலாளர்கள் பட்டினியால் பரிதவித்து சாகின்ற சூழ்நிலையை மாற்றி ஏறத்தாழ ரூ. 1½ கோடி நிதி உதவி செய்து கம்பெனியைத் திறந்த பிறகு முதலாவதாக 12 லட்சம் டன் அளவுக்கு உற்பத்தியை அதிகரிக்க முயன்றோம் அதன் மூலம் படிப்படியாக நஷ்டத்தை ஈடுசெய்ய முடிந்தது என்பதை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன்.

ஒரு பெரிய வாதம் கிளப்பப்பட்டது. ரூ. 1¾ கோடி அல்லது 2 கோடி நஷ்ட ஈடு தரப்பட வேண்டுமா என்று இன்னொரு பக்கம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அதற்கு பணம் கொடுத்த கிராமப்புற விவசாயிகளுக்கு எல்லாம் நஷ்ட ஈடு தரவில்லையே என்று சொன்னார்கள். இப்போதே நஷ்ட ஈடு 2 கோடி கொடுக்கப்படுவது ஏன் என்று கேட்கின்றனர். இன்னொரு பக்கத்தில் விவசாயிகளுக்கு ஏன் நஷ்ட ஈடு கொடுக்க வில்லை என்கிறார்கள். இவர்களுக்கும் கொடுத்தால் இந்த ரூ. 3 கோடி நஷ்ட ஈடு தேவையில்லை என்று சொல்லுவார்கள். இதில்

(முற்பகல் 11-00)

ஸ்டேட் பாங்க் ஆப் ஹைதராபாத் 1½ கோடி கடன் கொடுத்திருக் கிறது. இந்த ஒண்ணேமுக்கால் கோடியில் 1½ கோடி அந்த பாங்க் கடனுக்கே போகிறது. மீதியிருப்பதில் ஆளுங்காங்கிரஸ் கட்சி பஞ்சாலைகளைத் தேசியமாக்குகிற நேரத்தில் ப்ரீ டேக் ஓவர் பகுதிக்கு தொழிலாளர்களுக்கான ப்ராவிடண்ட் பண்டு, இ.எஸ்.ஐ., க்ராஜுடி போன்றவற்றைக் கொடுக்காமல் கைகழுவி விட்டது. அது போன்று நம் அரசு செய்யாமல் தொழிலாளர் களுக்குச் சேரவேண்டிய பாக்கிகளை எல்லாம் கொடுப்பதற்கும், வணிக வரி பாக்கி, மின்சாரக் கட்டண பாக்கி ஆகியவற்றுக்கும் தான் கொடுத்திருக்கிறது. நமது அரசு அங்கே பணியாற்றிக் கொண்டிருந்த தொழிலாளர்களை மறந்துவிடாது, ப்ரீடேக் ஓவர் பகுதியில் தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய தொகையைக் கொடுத்திருக்கிறார்கள் என்றால் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் களும், ஆளுங்காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் இதைச் சற்றுச் சிந்தித்துப்பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதியதாகப் பல தொழிற்சாலைகள் தமிழகத்தில் உருவாக வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிற நேரத்தில் இயங்கிக் கொண்டிருக்கிற இந்தத் தொழிற்சாலை மூடப்படவேண்டும், அதை நசிக்கவிடவேண்டும் என்று யாரும் விரும்பமாட்டார்கள்.

இன்னும் சொல்லப்போனால் அங்கே இருக்கிற பொள்ளாச்சி மகாலிங்கம் பற்றிப் பேசப்பட்டது. நான் அதைப்பற்றி அதிகமாகப் பேசவில்லை. கொடுக்கப்படுகிற நஷ்டஈடு பாங்கு கடனுக்கும், தொழிலாளர்களுக்கும், மின்சார இலாக்கா, வணிகவரி இலாக்கா ஆகியவற்றுக்கும்தான் போய்ச் சேர்ந்திருக்கிறது என்பதை வெளிப்படையாகவே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவருக்கு ஒரு காசும் போகவில்லை.

எனக்கு முன்னாலே பேசியவர்கள் இதை விரிவுபடுத்தினால் நன்றாக இருக்கும் என்ற கருத்தை ஒப்புக்கொண்டார்கள். அவர்களுக்கெல்லாம் எனது தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்வேன். இந்தத் தொழிற்சாலையை விரிவுபடுத்த 1½ கோடிக்கு ஒரு திட்டம் இருக்கிறது. அதைச் செயல்படுத்தினால் இந்தத் தொழிற்சாலை நல்ல லாபகரமாக நடைபெற முடியும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுங் கட்சி காங்கிரசைச் சேர்ந்த திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் . . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தயவுசெய்து திருத்திக் கொள்ளவேண்டும். நான் ஆளும் காங்கிரஸ் அல்ல.

திரு. கா. வேழவேந்தன்: ஸ்தாபன காங்கிரஸைச் சேர்ந்த திரு. பொன்னப்பநாடார் அவர்களும், திருமதி ஜோதி அம்மாள் அவர்களும் எஸ்டிமேட்ஸ் கமிட்டியின் சேர்மெனாக நான் இருந்த நேரத்தில்—எந்த எந்தத் தொழில்களை எப்படி எப்படியெல்லாம் விரிவுப்படுத்தலாம் என்று ஆராய்ந்த நேரத்தில் நமது கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. அழகர்சாமி உட்பட இந்தப் பகுதிக்கு வந்து இந்தத் தொழிற்சாலையைப் பார்வையிட வேண்டுமென்று. . .

THIRU K. T. K. TANGAMANI: The former Chairman of the Estimates Committee is now revealing to the House what transpired inside the Committee. Is it proper? If that is the

1975 நவம்பர் 6] [திரு. கே. டி. கே. தங்கமணி]

case, I may be permitted to reveal whatever happened in the Public Accounts Committee concerning this particular plant because so many things happened in the Public Accounts Committee about this particular undertaking. In the Report of the Committee all these things are not revealed. But what has been revealed in the Report is open to us and it is like an open book. But what transpired inside the Committee, if it is proper to reveal it in the House, then I may also be allowed to say whatever transpired inside the Public Accounts Committee concerning this particular undertaking, Sakthi Pipes.

MR. DEPUTY SPEAKER: The hon. Member may not and should not reveal here all those debates which took place in the Committee.

திரு. கா. வேழவேந்தன்: நான் ஏற்கனவே எல்லோரும் அறிந்த செய்தியைத்தான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அறிந்த செய்திதான் என்றாலும் மறைமுகமாகச் சொல்லலாம். இப்படி நேரிடையாகச் சொல்வது சரியல்ல.

திரு. கா. வேழவேந்தன்: அந்தத் தொழிற்சாலையின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டி வருகிற அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வேன். தொடர்ந்து 12 மாதங்களும் இந்தத் தொழிற்சாலை இயங்குவதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்து, தேவையான மிஷின்களை அமைத்துக் கொடுத்தால், இந்தத் தொழிற்சாலை நல்ல லாபகரமாக செயல்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. ஆகவே இந்த 1½ கோடி ரூபாய் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தொழிற்சங்கத் தலைவர் என்ற முறையில் நானும் கேட்டுக்கொள்வேன். ஒரு சிலருடைய பணிக்காலம் ரெகுலரைஸ் செய்யப்படாமல் இன்னமும் இருக்கின்றது. அவர்களுடைய சர்வீசை ரெகுலரைஸ் செய்து, நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த மசோதாவை மனதார, நெஞ்சார வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

1975 நவம்பர் 6]

***திருமதி த. ந. அனந்தநாயகி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று கொண்டுவரப்பட்டிருக்கிற சக்தி பைப்ஸை கையகப்படுத்தும் மசோதாவில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

தொழிற்சாலைகளைக் கையகப்படுத்தும் கொள்கையை நான் மனமார வரவேற்கிறேன். அதில் எந்தவிதமான மறுப்பும் கிடையாது. ஆனால் தமிழகத்தில் எத்தனையோ தொழிற்சாலைகள் மூடப்பட்டு அதிலுள்ள தொழிலாளர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிற நேரத்தில் அவற்றை எல்லாம் கையகப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு வந்ததில்லை. இன்றைய தினம் இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் தமிழக அரசு தன் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து—தனிப்பட்ட ஒருவருக்காக இந்தத் தொழிற்சாலையை கையகப்படுத்த முன்வந்திருக்கிறது என்பதை நான் பகிரங்கமாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தியா மீட்டார்ஸ் நிறுவனம் மூடப்பட்டுக் கிடந்தபோது. . . .

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 1974 மார்ச் பட்ஜெட்டிலேயே அறிவிப்பு செய்யப்பட்டது. மசோதா 1975 இல் கொண்டு வரப்பட்டிருக்கிறது. தாமதப்பட்டிருக்கிறது என்று சொல்லலாமே தவிர—முன்னே எதை எதை கையகப்படுத்த இருக்கிறோம் என்பது அறிவிக்கப்பட்டு, மத்திய சர்க்காருக்கும் போய் வந்திருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: 74-இல் சொன்னாலும், 71-இல் டேக் ஓவர் செய்துகொண்டிருந்தாலும் நீங்கள் உங்களுடைய அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து, தனிப்பட்ட ஒருவரைக் காப்பாற்றுவதற்காக இந்தத் தொழிற்சாலையைக் கையகப்படுத்த முன்வந்தீர்கள் என்று சொல்கிறேன். காரணம், சக்தி பைப்ஸ் நிறுவனம் தொடர்ந்து நஷ்டத்தில் நடந்து கொண்டிருக்கிற ஒரு நிறுவனம். இதன் தொழிலதிபர் மிக சாமார்த்தியமான தொழிலதிபர். பல தொழில்களை வைத்து லாபகரமாக நடத்திக் கொண்டிருப்பவர். இதில் தொடர்ந்து அவருக்கு நஷ்டம்

ஏற்பட்டு வந்தது என்றால் அதில் ஏதோ ஒரு கோளாறு இருக்கிறது என்பதை சாதாரணமாக நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

சட்டசபையில் இந்தத் தொழில் நிறுவனத்தின் நஷ்டங்கள், இதில் உள்ள கோளாறுகள், சங்கடங்கள் என்ன என்ன என்பதைப் பற்றி முன்னதாகவே ஒரு அறிக்கை கொடுத்திருந்தால் உண்மையிலேயே சாமானியர்களுடைய பணம் நல்ல காரியத்திற்குப் பயன்படுமா என்பதை நாங்களும் ஆலோசித்து எங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்க முடியும். இதை ஏன் சொல்கிறேன் என்றால் இங்கே வேலை செய்கிற 300 தொழிலாளர்கள் வேலையில்லாமல் போய்விடுவார்களே என்று கண்ணீர் விடுகிற இவர்கள், 14 மாதங்கள் இந்தியா மீட்டர்ஸ் மூடப்பட்டுக் கிடந்ததே அதைப்பற்றி உங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தோமே, கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எல்லாம் கொடுத்தோமே—அப்போதெல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள், இதற்காக தனி அதிகாரியைப் போட்டிருக்கிறோம். அந்த மீட்டர்கள் விற்குமா விற்காதா என்று கேட்டிருக்கிறோம். அதிகாரிகளும் சொல்கிறார்கள். அந்த மீட்டர்கள் விற்பனையாகாது. நமக்கு நஷ்டம்தான் வரும் என்கிறார்கள். அவர்கள் கொடுத்த அறிக்கையினை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்றெல்லாம் சொன்னவர்கள்—இன்றைக்கு யாரையும் கேட்காமல் சாமானியர்கள் கொடுத்த வரிப்பணத்தைக் கொண்டு சீமானைக் காப்பாற்ற சக்தி பைப்ஸ் நிறுவனத்தை கையகப்படுத்த முன்வந்திருக்கிறது என்றால். . .

திரு. சி. ஆறுமுகம்: அம்மையார் குறிப்பிடுகிற சீமான் அம்மையார் இயக்கத்தைச் சேர்ந்தவர் அல்லவா?

திருமதி த ந. அனந்தநாயகி: அந்தச் சீமான் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர் என்பதை உங்களாலேயே கண்டுபிடிக்க முடியாது. அதுதான் சீமான்களின் சாமர்த்தியம். நாளைக்கு கம்யூனிஸ்டுக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இந்தச் சீமான்கள் உள்ளே புகுந்துவிடுவார்கள். சாமானியர்கள் ஆட்சி என்று சொல்லிக்கொண்டு, சாமானியர்களுடைய வரிப் பணத்தை எடுத்து, சீமான்களுக்குச் செலவழிப்பது. . .

1975 நவம்பர் 6]

திரு. சி. ஆறுமுகம்: அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் எந்தச் சீமான்களுக்கும் அஞ்சி நாட்டில் வாழவில்லை. ஆட்சி நடத்தவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: அம்மையார் அவர்கள் கம்யூனிஸ்டுக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சீமான்கள் உள்ளே நுழைந்து விடுவார்கள் என்றார்கள். கம்யூனிஸ்டுக் கட்சியில் சீமான்கள் இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அந்த ஆராய்ச்சியை திரு. ஜேம்ஸ் செய்யட்டும், நான் வேண்டாமென்று சொல்லவில்லை. சீமான்களை ஆதரிக்கவில்லையென்று சொல்கிறார்களே, இந்த ஒரு சட்டம் போதுமே அவர்கள் சீமான்களை ஆதரிக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்ட. சீமான்களுக்காகவே கொண்டு வரப்பட்ட சட்டம் இது—கைப் புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா என்று கேட்பது மாதிரி இருக்கிறது இந்தச் சட்டம். தொழிலாளிகளுக்குத் தொழிலில்லாமல் போய் விடும்; ஐயோ! தொழில் நசித்து விடும் என்ற கவலையினால் இதைச் செய்கிறோம் என்று சொல்கிற இவர்கள், இந்தியா மீட்டர்ஸ் பற்றி கவலைப்படவில்லையே. சீமான்களுக்கு உதவத்தானே இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறீர்கள். அங்கே ஒரு விதி, இங்கே ஒரு விதி. இந்தக் கம்பெனி நிர்வாகத்திற்குப் பல வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறோம். இவர்களது பஸ்களை தேசியமயமாக்கியபொழுது அவர்கள் கேட்ட நஷ்ட ஈட்டைவிட ரூ. 1 இலட்சம் அதிகமாகவேக் கொடுத்திருக்கிறோம்.

Report of the Comptroller and Auditor-General—1972-73—page 87

இதைச் சுட்டிக்காட்டுகிறது. ஆகவே, நீங்கள் சாமானியர்களது வரிப் பணத்தை எடுத்து, சீமான்களுக்குத் தாராளமாக நஷ்ட ஈடாகக் கொடுக்கிறீர்கள். ரூ. 1,95,64,000 கொடுக்கப் போகிறீர்கள். பாட்டா கம்பெனியிலே விலையைப் போடுவான், ரூ. 1.99 என்று. ஒரு பொருளின் விலை ரூ. 6 என்று போட மாட்டான்.

ரூ. 5.95 என்று போடுவான். அதுபோல் ரூ. 2 கோடி என்று சொல்லாமல், ரூ. 1,95,64,000 என்று ரொம்ப அழகாகக் கணக்குப் போட்டு நஷ்ட ஈடு கொடுக்கிறீர்கள். நஷ்ட ஈடு எதற்காகக் கொடுக்கிறோம்? மத்திய அரசாங்கம் ரொம்ப முற்போக்கோடு அரசியல் சட்டத்தையே திருத்தியிருக்கிறது. Give them a token Compensation நஷ்ட ஈடு கொடுக்க வேண்டிய அவசியமிருந்தால் டோக்கன் காம்பன்சேஷனை, ரூ. 1, ரூ. 5 கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறது மத்திய அரசு. எங்களிடத்திலே ஒன்றுமில்லை, மத்திய அரசாங்கம் கால தாமதம் செய்கிறது, அது அனுமதி கொடுக்கவில்லை, அது அதைச் செய்யவில்லை, இதைச் செய்யவில்லையென்று சொல்கிறீர்களே தவிர. . . .

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, மேட்டூரிலே உள்ள அலுமினியத் தொழிற்சாலையை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் கையகப்படுத்த வேண்டுமெனத் தமிழ் நாடு மத்திய அரசுக்குத் திட்டத்தை அனுப்பியும், அவர்கள் இன்னும் அதற்கு ஆணை பிறப்பிக்கவில்லையே—அம்மையார் அவர்கள் அதற்கு என்ன பதில் சொல்வார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நான் சொல்கிறேன்—நாங்கள் கொடுப்பதை நீங்கள் பயன்படுத்தமாட்டீர்கள். ரொம்ப நாளாகச் சொல்கிறீர்கள், நீங்கள் செய்தீர்கள், அப்புறம் நாங்கள் செய்கிறோம் என்று. நீ குற்றம் செய்தால், அதே குற்றத்தை நாங்கள் செய்வோம்—செய்கிறோம் என்பது மாதிரி. . . .

திரு. கா. வேழவேந்தன்: துணைத் தலைவரவர்களே, இது பற்றி நான் பேசும்பொழுது கூடக் குறிப்பிட்டேன். கொடுக்கப் படுகிற தொகையில் ஏறக்குறைய ரூ. 1½ கோடி ஸ்டேட் பாங்க் ஆஃப் ஐதராபாத் என்ற வங்கிக்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது. அது நாம் ஏற்றுக்கொண்ட பின்னாலே, நிர்வாகம் பெற்ற கடனுக்காகக் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அந்தக் கடன் கொடுக்கப்பட வேண்டாமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

1975 நவம்பர் 6]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நஷ்ட ஈடு கொடுக்கக் கூடாது என்று சொல்கிறீர்களே, மத்திய அரசுக்கும் அது பொருந்துமா என்று சொன்னால் விளக்கம் சொல்ல முடியும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: மத்திய சர்க்காருக்குப் பொருந்துமா, பொருந்தாதா என்ற கேள்வி கேட்க வேண்டியது உங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய கடமை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கனம் உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி, மால்கோ நிறுவனம் நாட்டுடமை ஆக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு, அந்தச் செயற்குறிப்பு டெல்லிக்கு அனுப்பப்பட்டு, இதுவரையில் ஒரு முடிவும் காணோம்.

மத்திய சர்க்கார் சில சட்டங்களை நிறைவேற்றி, சில மில்களை எடுத்திருக்கிறது. அதற்கு அவர்கள் காம்பன்சேஷன் கொடுத்திருக்கிறார்கள். அதே போல்,

Coaking and Coal Mines, Indian Copper Corporation

இவற்றிற்கும் நஷ்ட ஈடு கொடுத்திருக்கிறார்கள். நஷ்ட ஈடு கொடுப்பதை ஒரு முறையாக வைத்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் நஷ்ட ஈடு கொடுத்திருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், மத்திய சர்க்கார் சிக் மில்களை எடுத்ததிலே—pre-takeover பீரியடுக்கு Wages, provident fund கொடுக்க மறுத்தது. post-takeover பீரியடுக்கு மட்டும்தான் கொடுத்தது. ஆனால், நம்மைப் பொறுத்தவரையிலே, தொழிலாளிகளுக்கு நன்மை தரக்கூடிய வகையிலே pre-takeover பீரியடுக்கும் அவற்றைக் கொடுத்து எடுத்திருக்கிறோம் என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: மால்கோவைப் கையகப்படுத்தத் திட்டம் அனுப்பியது எனக்கும் தெரியும். நாங்களும் ஆதரித்தோம். அன்னிய நாட்டு கம்பெனிகள் அதிலே

ஈடுபட்டிருப்பதாலே சில சிக்கல்கள் இருக்கின்றன என்பதும் எங்களுக்குத் தெரியும். அரசுக்கு—அரசு சிக்கலைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். அதை எப்படித் தீர்க்க வேண்டுமென்பது உங்களுக்குத் தெரியும். அதை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி வாங்கிக்கொள்ள வேண்டிய சாமார்த்தியம் உங்களைப் பொறுத்தது.

திரு. சி. ஆறுமுகம்: * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஆறுமுகம் இப்பொழுது கூறியது அவைக் குறிப்பிலே இடம் பெறாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இன்றைக்கு இந்தக் கம்பெனியைப் பொறுத்தமட்டில் நான் எதற்குச் சொல்கிறேன் என்றால் எவ்வளவு பணத்தை அவர்கள் சிட்டிங் ஃபீஸாகவும், மற்ற இனங்களுக்கும் செலவழித்திருக்கிறார்கள், என்பதைச் சுட்டிக்காட்டத்தான்.

நேற்று கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. என். கே. பழனிசாமி அவர்கள் அழகாக எடுத்துச் சொன்னார்கள். ஒவ்வொரு மானேஜருக்கும் ரூ. 50,000, ரூ. 60,000 என்று ஆண்டுக்குச் சம்பளம் கொடுத்திருக்கிறார்கள். இப்படி ஆண்டுச் சம்பளம், சிட்டிங் ஃபீஸ், மானேஜரியல் ஸ்டாஃப் ஆகிய இனங்களில் செலவழித்திருக்கிறார்கள். வேண்டியவர்களெல்லாம் மானேஜரியல் ஸ்டாஃப், தனியார் கம்பெனிகளிலே மானேஜர்களாக யார் இருக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியும். அனாவசியமாக சிட்டிங் ஃபீஸ், இன்னும் இதுபோன்ற செலவுகளிலே ஈடுபடுத்தி, நஷ்டப்படுத்தியிருக்கிற கம்பெனிக்கு நீங்கள் நஷ்ட ஈடு கொடுக்கிறீர்கள் என்றால், நல்லெண்ணத்திலே கொடுக்கிறீர்களா? இப்படிப்பட்ட செலவுக்குத்தான் கடன்பட்டார்கள். இப்படி அனாவசியச் செலவுக்குக் கடன்பட்டதை, ரொம்ப தாராள மனப்பான்மையோடு மக்கள் வரிப் பணத்தை எடுத்து வசதி செய்து கொடுக்கிறோம் என்று சொல்வது வருந்தத்தக்கது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.]

திரு. கா. வேழவேந்தன்: துணைத் தலைவரவர்களே, ஒரு தவருன தகவலை அவர்கள் சொல்கிருர்கள். நாம் எடுத்த பின்னுல், சிட்டிங் ஃபீஸை டைரக்டர்கள் வாங்குவதில்லையென்று நான் சொன்னேன்—1972-க்குப் பின்னுல் வாங்குவதில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: 1972-க்குப் பின்னுலே சிட்டிங் ஃபீஸ் வாங்கியிருக்க மாட்டார்கள். அதற்கு முன்னுலே வாங்கியதெல்லாம் என்னவாயிற்று? நஷ்டத்திலே ஓடுகிற கம்பெனியை இவ்வளவு அவசரமாகக் கையகப்படுத்த வேண்டிய அவசியம்தான் என்ன?

நஷ்ட ஈட்டை கேஷாகக் கொடுக்கப் போகிருர்கள். சாதாரணமாக 2 பஸ் வைத்திருந்தவனுக்கு நஷ்ட ஈட்டை பான்டாகக் கொடுத்திருக்கிருர்கள். 50 பஸ்ஸுக்கு மேல் எடுத்தால் கேஷ் கொடுக்கிருர்கள். பெரிய பணக்காரர்களிடம் எடுத்தால் கேஷ். எதற்காக இதைச் சொல்கிறேன் என்ருல் தங்களுடைய பதவியை, அதிகாரத்தை, அத்தனையையும் தங்களுக்கு வேண்டியவர்களுக்காகப் பயன்படுத்துவது என்ற முடிவுக்கு வந்து, அதற்காக இருக்கிற அதிகாரத்தைத் துஷ்பிரயோகப்படுத்தி, ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிருர்கள் என்று நான் சொல்கிறேன். நீங்கள் நஷ்ட ஈடு கொடுங்கள், டோக்கன் காம்பன்சேஷனுக ரூ. 5, ரூ. 10 கொடுங்கள். எனி லோன், எனி டெட் என்று போட்டிருக்கிருர்கள். அனுவசியமான செலவுகளைச் செய்திருப்பதால் அதனையெல்லாம் ரத்து செய்யுங்கள். டோக்கன் காம்பன்சேஷனுக ரூ. 5, ரூ. 10 கொடுக்கலாமே தவிர, பல கோடி ரூபாய்கள் கொடுத்து, நஷ்டத்திலே இருப்பதை எடுப்பது உண்மையிலே அருவருக்கத் தக்கது என்று சொல்லி முடிக்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்தவரையிலே, சில விஷயங்களில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன்.

இந்த சக்தி பைப்ஸ் நிறுவனம் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்பதிலே இந்த அவையிலே இருக்கக்கூடிய அத்தனை அங்கத்தினர்களும் ஏகோபித்த கருத்தைத் தெரிவிப்பார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனல் இங்கே ஆளுங்கட்சியிலே இருக்கக்கூடியவர்களுக்கும் எதிர்க்கட்சியிலே இருக்கக்கூடியவர் களுக்கும் என்ன கருத்து வேறுபாடு இருக்கிறதென்றால், தேசியமயமாக்குகின்ற முறையைப் பற்றித்தான். இங்கே இதிலே உள்ள வேறுபாட்டைப் பற்றி ஏற்கனவே பழனிசாமி அவர்களும் மற்றவர்களும் எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்து வேறுபாட்டைத்தான் நானும் சொல்ல விரும்புகிறேன்.

'பாய்ன்ட் ஆஃப் டைம்'—எந்த நேரத்தில் தேசியமயமாக்கப் படுகிறது? இதற்கு முன்பு ஏன் தேசியமயமாக்கவில்லை என்பது தான் கேள்வியாக இருக்கிறது. இந்த நிறுவனம் ஏறத்தாழ 4, 5 ஆண்டுகளாகவே சரியாகச் செயல்படவில்லையென்று நான் இந்த மன்றத்திலே குற்றம் சொல்லியிருக்கிறேன். அந்த நேரத்திலே இந்த அரசாங்கம் 'நெல்சன் ஐ' என்று சொல்லக் கூடிய அளவிலே, அந்தக் குற்றச்சாட்டுக்களை எல்லாம் கேளாது, தாங்கள் உதவி செய்வதற்காக, சக்தி பைப்ஸ் சரியாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்று மன்றத்திலே எடுத்துச் சொல்லியதற்கான எடுத்துக்காட்டுகளை நான் இந்த அவையிலே எடுத்துக் காட்ட முடியும்.

ஏறத்தாழ 3 ஆண்டுகளுக்கு முன்பாக நான் சொன்ன நேரத்தில் அதைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை. சக்தி பைப்ஸ் நிறுவனம் பற்றி அரசாங்கத்தின் சார்பாக ஒரு பெரிய தவறு நடந்திருக்கிறது. ஏற்கனவே வாட்டர் சப்ளை போர்ட் என்ற ஒரு போர்ட் இருக்கிறது. அந்த வாட்டர் சப்ளை போர்டுக்கு, இந்தச் சக்தி நிறுவனத்தில் உற்பத்தி செய்யக் கூடிய பைப்புகளைக் கொடுக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப் பட்டது. ஏராளமான இலட்சக்கணக்கான பணம், ரிலீஃப் அன்டர்டேக்கிங் என்ற வகையில், வாட்டர் போர்டுக்கு பைப்கள் சப்ளை செய்ய என்று ஏறத்தாழ 4 ஆண்டுகளுக்கு முன்பாகவே கொடுக்கப்பட்டது. 1972 டிசம்பர் 9 ஆம் தேதி நம்பிக்கையில்லா

1975 நவம்பர் 6] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

தீர்மானத்தில் நான் பேசுகின்ற நேரத்திலே மிகத் தெளிவாக பல்வேறு கருத்துக்களை இந்த மன்றத்திலே சொன்னேன். சுருக்கமாக இரண்டு வார்த்தைகளிலே அவற்றை எடுத்துக் காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். 286 ஆம் பக்கத்திலே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறேன். அதை நான் படிக்கிறேன்.

"Another important charge is, I charge this Government with showing undue patronage to one particular company and that is the Sakthi Pipes Company, Limited. As far as the Sakthi Pipes are concerned, the Government have given undue patronage giving rise to serious doubts about some underhand dealings."

என்று மிகத் தெளிவாக அன்றைக்குச் சொல்லியிருக்கிறேன். அதற்கு அமைச்சர் மாதவன் கொடுத்த பதில் சரியான வகையிலே இல்லை என்பது என் கருத்து.

I question the *bona fides* of this Government in this particular transaction. பிறகு சொல்லியிருக்கிறேன்.

'Another point is that there has been omission on the part of the Division to enforce the conditions of supply of finished products by the Sakthi Pipes, Limited. The next point is delay in supply of pipes by the Sakthi Pipes, Limited to the Tamil Nadu Government, that itself amounting to a loss of Rs. 1.6 lakhs.

அதை ஒரு கருத்தாகச் சொல்லியிருக்கிறேன்.

THIRU V. KRISHNAMOORTHY (NELLIKUPPAM): Sir, on a point of information. The Sakthi Pipes, Limited, is the only manufacturing unit for pipes in Tamil Nadu, especially in our part. There has been a severe competition from the manufacturers in Bengal. They wanted that this factory should be closed down. That is why they have quoted low rates and underquoted. They wanted the factory not to compete with them. Due to the low rate, the factory could not produce more. What is the harm in taking over such a factory? What is the harm in taking over the unit and competing with the factories in Bengal? May I be informed on these points by the Doctor, Sir?

டாக்டர் எச். வி. ஹாண்டே: அன்றையதினம்கூடப் பேசியிருக்கிறேன். டெவலெப் செய்ய வேண்டும். தக்க பாதுகாப்பு அரசாங்கத்தின் சார்பில் கொடுக்க வேண்டும். ஆனால் அப்படிப் பாதுகாப்பு கொடுக்கும் நேரத்தில் நாம் கொடுத்திருக்கும் பணம் சரியாகச் செலவு செய்யப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். ஆதாரம் தருகிறேன், கொஞ்சம் பொறுத்தால் ஆதாரத்தைப் பார்க்கலாம். அடுத்தபடியாக ஒரு விஷயத்தைச் சொல்லியிருக்கிறேன்.

'Then regular supply of pipes could not be ensured by the Sakthi Pipes. Paragraph 4(ii) of the G.O. Ms. No. 349, Public Department, dated 9th February 1971, stipulated that Messrs. Sakthi Pipes, Limited, should supply their entire quantity of pipes manufactured out of the raw materials supplied to it, to the Government of Tamil Nadu only.'

தயார் செய்திருக்கும் பைப்களை பி.டபிள்யூ.டி.-க்கு, வாட்டர் போர்டுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அங்கே என்ன சமாசாரம்?

'As seen from paragraph 3 of the G.O. dated 9th February 1971, the Company's normal production has been estimated to be 3,000 tonnes per month. Then for 12 months from February 1971 to January 1972, the production should have been about 36,000 tonnes and this should have been possible as a result of the financial assistance provided by the Government to the Company.'

மாதத்திற்கு 3,000 டன் என்றால், 12 மாதங்களுக்கு 36,000 டன். இரண்டாண்டுகளுக்கு 72,000 டன் கொடுத்திருக்க வேண்டும். நாம் பாதுகாப்பு கொடுக்க வேண்டியதுதான். ஆனால் கொடுத்திருக்கின்ற பாதுகாப்பு என்ன? அன்றையதினம் முதலாளிக்கு அரசாங்கம் நல்ல நோக்கத்தோடு கொடுத்திருக்கலாம். ஆனால் என்ன நடந்திருக்கிறது? ஆண்டுக்கு 36,000 டன் கொடுக்க வேண்டும். இரண்டு ஆண்டுகளுக்கு 72,000 டன் கொடுக்க வேண்டும். ஆனால் 7,800 டன்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Out of 72,000 tonnes, the production is only 7,800 tonnes.

1975 நவம்பர் 6] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

அந்த 7,800 டன்னும்கூட முழுவதும் வாட்டர் போர்டுக்கு வரவில்லை. பாதிதான் வந்திருக்கிறது. ஜி.ஓ.-வில் சொல்லி யிருக்கிறது. எதற்காக அன்றைக்கே செய்யவில்லை. எனக்கு தனிப்பட்ட முறையில் முதலாளியிடமோ யாரிடமோ வெறுப்பு கிடையாது. நேற்றைக்குக்கூட முதலமைச்சரவர்கள் சொன்னார் கள். அந்த முதலாளி காங்கிரஸ் கட்சி பிளவுபடக் காரணமாக இருந்தார்கள் என்று பேசிக்கொள்கிறார்கள். எந்தக் கட்சி என்றுகூட சொல்ல முடியாத அளவிற்கு இருக்கிறது என்று அம்மையார் சொன்னார்கள்.

I have nothing against anybody.

எப்படி துஷ்பிரயோகம் செய்யப்பட்டது என்று சொல்கிறேன்.

முதல் கட்டமாக வாட்டர் போர்டுக்குக் கொடுக்க வேண்டிய பைப்புகள் கொடுக்கப்படவில்லை. அரசாங்கம் ஏமாற்றப்பட்டது. கொடுக்கப்பட்ட பணம் விரயமாக்கப்பட்டது. ஏ.ஜி. பல இடங்களில் சொல்லியிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுகூட நான் அன்றையதினம் சொல்லியிருக்கிறேன். முதல் கட்டமாக அரசாங்கம் இப்படி ஏமாற்றப்பட்டது.

இரண்டாவது கட்டமாக எப்படி ஏமாற்றப்பட்டது என்றால், 'Relief undertakings' என்று கொடுத்த நேரத்திலே கூட பல சலுகைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அப்படிக் கொடுத் திருக்கின்ற சலுகைகள்கூட துஷ்பிரயோகம் செய்யப்பட்டது இரண்டாவது கட்டம். எப்படி படிப்படியாக அரசாங்கத்தைத் திட்டமிட்டு தன்னுடைய திறமையின் காரணமாக இந்த நிறுவனம் ஏமாற்றிக்கொண்டு வருகிறது என்பதைத்தான் சொல்ல விரும்புகிறேன். வேழவேந்தன் அவர்கள்கூடச் சொன் னார்கள் தொழிலாளர்கள் பாதிக்கப்படக்கூடும் என்று.

தேசியமயமாக்கப்பட வேண்டும், தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் சாதிக்பாட்சா அவர்கள் சொன்ன கருத்தை நான் வரவேற்கிறேன். பாதுகாப்பு கொடுக்க வேண்டியது நியாயம் என்பதில் கருத்து வேறுபாடு

இல்லை. ஆனால், எப்பொழுது செய்திருக்க வேண்டும்? அதுதான் நம்முடைய குற்றச்சாட்டு எல்லாம். ஏற்கனவே நான்காண்டுகளுக்கு முன்பு, மூன்றாண்டுகளுக்கு முன்பாக

You should have pulled up the organisation. You should have pulled up the officials. You ought to have pulled them up at the right time.

அந்த ரெமிடியல் மெஷரைச் செய்யாமல் இப்பொழுது மூன்றாவது கட்டமாக காம்பென்சேஷன் கொடுக்க வகை செய்து அரசாங்கத்தினுடைய வரிப்பணம் போகும் நிலையில் அங்கே 'லகூனா' இருக்கிறது. பேங்கில் அடைமானம் வைத்திருக்கிறார்கள், அதற்குப் பணம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை நான் மறுக்கவில்லை. இப்பொழுதுகூடக் கடைசியாகச் சொல்கிறேன். முதலமைச்சர் அவர்கள்கூட அன்றைக்குச் சொன்னார்கள். நல்ல யோசனைகள் சொன்னால் ஏற்றுக்கொள்ளப்படும் என்று சொன்னார்கள். நான் சொன்ன பல நல்ல யோசனைகள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

அப்பொழுதே நான் சொன்ன யோசனையைக் கேட்டிருந்தால் இலட்சக்கணக்கான ரூபாய் நஷ்டத்தைத் தவிர்த்திருக்கலாம் என்று சொல்கிறேன். இப்பொழுதுகூட அந்த உத்தரவைப் போடும் நேரத்தில், சட்டமாக்கும் நேரத்தில் மிகவும் ஜாக்கிரதையாக ஒரு நயாபைசாகூடத் தவறாகப் போகாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். தொழிலாளர்களுக்குப் போக வேண்டியது போகட்டும், மற்ற வேறு சில 'என்கம்பரன்ஸ்' இருந்தால் விடுதலை செய்ய அந்த பேங்குக்குப் போக வேண்டுமென்றால் அது தவிர்க்க முடியாமல் இருக்கலாம். அவர்கள் எப்படியாவது தந்திரத்தைக் கையாண்டு,—அவர்களுடைய ஃபைனான்ஷியல் இன்ஸ்டிடியூஷன்ஸ்—ஆகக் கூட இருக்கும். நமக்குத் தெரியாது. இப்படியெல்லாம் இருக்கும், ஜாக்கிரதையாக கண்காணித்து, பொதுமக்களின் பணத்தை வீணாக்கக் கூடாது என்றுதான் இதைச் சொன்னேனே தவிர, நல்ல, காரியத்தை ஆதரிக்க எப்பொழுதும் தயாராக இருக்கிறோம் என்று சொல்லி, இந்த முறைகேடுகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி விடைபெற்றுக் கொள்கிறேன்.

1975 நவம்பர் 6]

* **திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவரவர்களே, இந்த சக்தி பைப்ஸை அரசாங்க நிறுவனமாக ஆக்கிக்கொள்ளும் இந்த மசோதாவை ஆதரிக்கின்ற அளவிலே என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

1972-ஆம் ஆண்டு இதை எடுத்துக்கொள்ள அரசாங்கம் முடிவு செய்தது. இந்த சக்தி பைப்ஸை ஆரம்பித்ததன் காரணமே அதற்கென்று அரசு பெருமளவில் நிதி கொடுத்து உதவிய காரணத்தினால். முக்கியமான காரணம் அரசாங்கம் பணத்தைக் கடனைக் கொடுக்கும்பொழுது சில சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுதான் கொடுக்கப்படுகிறது. அந்த அளவிலே சக்தி பைப்ஸுக்கு அரசாங்கம் பணத்தைக் கடனைக் கொடுத்தபொழுது ஒரு அக்ரிமென்ட் செய்திருக்க வேண்டும். அந்த அக்ரிமெண்ட் நான் நினைக்கிற அளவிலே, குறிப்பாக அவர்கள் தயார் செய்யும் பைப்புகளையெல்லாம் அரசாங்கத்திற்கு உபயோகப்படுகின்ற அளவிலே தயார் செய்துகொடுக்க வேண்டுமென்ற முதல் சார்ஜ் அவர்களுக்கு இருக்க வேண்டும். அந்த அளவில் அவர்கள் இந்த பைப்புகளை உற்பத்தி செய்ய ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும்.

ஆனால், நடைமுறையில் பார்க்கும்பொழுது அரசாங்கத்திற்குத் தேவைப்படும் பைப்புகளை சக்தி பைப்ஸால் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருப்பதை உணர்கிறேன். அரசின் ஸ்பெசிஃபிகேஷன் பிரகாரம் அவர்களுக்குச் செய்த ஏற்பாட்டின் காரணத்தால் அப்படிப்பட்ட பைப்புகள் செய்ய இயலாத நிலைமை மட்டுமல்ல என்றும் 14-வது ரிப்போர்ட்டில் கூறப்பட்டிருக்கிறது. பல காரணங்கள், மின்சார வெட்டும் ஒரு காரணம். மின்சார வெட்டு காரணமாய் இருந்தாலும்கூட அரசாங்கத்தின் முதல் பொறுப்பு, அவர்களுக்கென்று தயார் செய்யும் பைப்புகளுக்கு மின்சாரக் கட்டுப்பாடு பெருமளவில் நீக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாததால்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு காரணமாக இருக்கிறது.

மற்றொன்று இங்கே கூறப்பட்டிருக்கிறது, 'டிராப் பாட்டம் அப்போலா' ஏற்கனவே ஒன்றுதான் பொருத்தப்பட்டிருந்தது. அதிகமாக எத்தனை பொருத்தப்பட வேண்டுமென்பது கொடுக்கப்படவில்லை. இப்பொழுது அரசு அவர்களிடமிருந்து

எடுத்துக்கொண்ட பிறகு அதைச் செய்வதாகக் கூறியிருக்கிறார்கள். ஒரு தொழிற்சாலை ஏற்படும்பொழுது -- எனக்கு ஞாபகம் இருக்கிறது. கனம் மதிப்பிற்குரிய அன்றைய தொழில் அமைச்சராகயிருந்த திரு. மாதவன் அவர்கள் கூறினார்கள்.

(முற்பகல் 11-30)

இந்த அவையிலே, இந்த பைப்புகள் வெளியிலே சப்ளை செய்யப்படுவது பற்றிக் கேட்கப்பட்டபோது அரசாங்கம் கொடுத்திருக்கும் கடனுக்கு உரிய முறையில் வட்டி வந்து விடுகிறது. வெளியிலே பைப்புகளைக் கொடுக்கிற காரணத்தால்தான் அவர்களுக்கு லாபம் கிடைக்கிறது; இரண்டாயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைத்திருக்கிறது; அப்படி இரண்டாயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பது தவறா? என்று கூறினர். அது தவறு என்று சொல்லவில்லை. ஆனால் இப்படிப்பட்ட இந்த ஒரு நிறுவனம் தரமான பைப்புகளைச் செய்யத் தவறிய காரணத்தால் அன்றே பரிகாரம் காண அரசு தவறி விட்டது என்றுகூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மின்சாரவெட்டின் காரணமாக பல தொழிற்சாலைகளிலே ஜெனரேட்டர்கள் புகுத்தப்பட்டன என்று இந்த ரிப்போர்ட்டில் இருக்கிறது. ஜெனரேட்டர்களுக்கு முன்கூட்டியே ஏன் ஏற்பாடு செய்ய அரசு முன்வரவில்லை?

பினிஷிங் செக்ஷன் அதிகப்படியாக பைப்புகளைச் செய்து அவற்றை வெளியிலே விற்க முடியாத நிலைமை இருந்திருக்கிறது. குஜராத், மகாராஷ்டிரம், ஒரிஸ்ஸா போன்ற மாநிலங்கள் வாங்குவதாகக் கூறப்பட்டிருந்தாலும் அவர்களும் வாங்க மறுத்திருக்கிறார்கள். காரணம், அவர்களுக்குத் தேவைப்பட்ட பைப்புகள் இல்லை என்ற காரணத்தினால் அல்ல. அதைத் தொடர்ந்து அந்த ஆண்டு டிசம்பர் முதல் மார்ச் மாதம் வரை உற்பத்தி தேங்கியிருக்கிறது. மார்க்கெட்டிங் குவாலிடி இல்லாத காரணத்தால் விற்க இயலாத நிலைமை ஏற்பட்டது.

சக்தி பைப்புக்கு ஏற்கனவே அரசாங்கம் கடன் கொடுத்திருக்கிறது. பிறகு அரசாங்கம் 40,000 ரூபாய் அட்வான்சாக கல்கத்தா பைப்புக்குக் கொடுத்து ஒரு அக்ரிமென்ட் செய்து கொண்டது. இவர்கள் பைப்ஸ் சப்ளை செய்ய வேண்டுமென்று கூறி இவர்களுக்கும் கடன் கொடுத்து விட்டு, கடனோடு மாத்திரமல்லாமல் பல உதவிகளைச் செய்து கொடுத்து

விட்டு கல்கத்தா பைப்ஸிடம் அக்ரிமெண்ட் செய்து கொண்டது ஏன்? பல காரணங்களால் இந்த நிறுவனம் ஏழு ஆண்டுக் காலமாக நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது என்றால் அதைப் பற்றி ஆச்சரியப்படத் தேவையில்லை.

இப்போது அரசாங்கம் இதை ஏற்றுக் கொண்டு பத்தாண்டுக் காலம் இதிலே அனுபவம் பெற்ற ஒருவரை நோயைத் தீர்க்கக் கூடிய பெரிய ஸ்பெஷலிஸ்டாக போட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். சக்தி பைப்ஸுக்குக் கொடுக்கக்கூடிய காம்பன்சேஷன் ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாய் ஆகிறது. அதோடு அதற்கு 4 சதவிகிதம் வட்டியும் சேர்த்துக் கொடுக்கப் போவதாகக் கூறியிருக்கிறார்கள். அதை மூன்று ஈக்வல் இன்ஸ்டால்மெண்டில் கொடுக்கப் போவதாகக் கூறி கமிஷனர் ஒருவரை அமர்த்தி அவர் மூலம் செய்வதாக இருக்கிறது.

அந்தக் கம்பெனிக்குக் கொடுக்கப்படக் கூடிய காம்பன்சேஷன் எந்த முறையில் கொடுக்கப்படுகிறது என்று புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்களுடைய டிப்ரிசியேஷன் அக்கவுண்ட் இதிலே சேரவில்லை. அதைக் கணக்கில் அரசாங்கம் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. அவர்களுடைய ஃபிக்ஸட் அசெட்ஸ், டிப்ரிசியேஷன் அக்கவுண்டைப் பார்க்கும்போது இந்த நட்ட ஈட்டுத் தொகை மிகவும் குறைவாக இருக்க வேண்டும். இது எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது என்பதையும் அரசாங்கம் கூற வேண்டுமென்று கூறி இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன்.

திரு. டி. இராசரத்தினம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சக்தி பைப்ஸ், சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ், லாஸ்கோ ஸ்டீல்ஸ், டெக்ஸ்டூல் கம்பெனி ஆகிய நான்கு நிறுவனங்களையும் கையகப்படுத்துகிற திட்டத்தை மனப் பூர்வமாக வரவேற்று அதிலே குறிப்பாக என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

இது 1967-லேயே தனியார் துறையிலிருந்து மூடப்பட்டு இரண்டாண்டுக் காலம் அந்தப் பகுதியிலுள்ள 1,200 தொழிலாள நண்பர்களின் குடும்பங்கள் பாதிக்கப்பட்ட சூழ்நிலையில் அதற்குப் பின்னால் அரசாங்கமே அதை எடுத்து சிறப்பான முறையில்

இன்றையதினம் நடந்து வருகிறது. அந்த நிறுவனத்தை மேலும் வளர்ச்சியடையச் செய்வதன் மூலம் அந்தப் பகுதி மக்களுக்கு மேலும் வேலை வாய்ப்புத் தருகிற நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டும்.

எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் எல்லாம் நஷ்ட ஈட்டுத் தொகை நிர்ணயிப்பதைப் பற்றிச் சொன்னார்கள். இன்றையதினம் அதை எடுத்துக் கொள்ளும்போது அந்த மெஷினரிகளின் புக் வால்யூ எப்படி இருக்கிறது, உண்மையான விலை என்ன என்று பார்க்கும்போது இந்த நட்ட ஈடு நம் கண் முன்னால் தெரிகிற தன்மை நிச்சயமாக அமையவில்லை.

குறிப்பாக, மேற்படி தொழிற்சாலையில் நல்லதொரு தொழில் நுணுக்கம் உடையவர்களைப் போடுவதன் மூலம் அந்தத் தொழில் வளர வழி செய்ய வேண்டும். அதற்குப் பக்கத்தில் வேண்டிய இடமும், உற்பத்திக்கேற்ற ஆற்றும் இருக்கும் காரணத்தால் சிறப்பாக இதை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தொழிற்சாலை என் தொகுதியில் 1,200 குடும்பங்களை வாழ வைக்கும் தொழிற்சாலை. அதனை நல்ல முறையில் திறந்து அரசாங்கம் பொதுவுடைமையாக்கி அந்த மக்களுக்கு நன்மை கிடைக்கச் செய்ததற்காக அங்கிருக்கும் 1,200 குடும்பங்களின் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் அரசாங்கத்திற்கு நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: உதவி சபாநாயகர் அவர்களே, இந்த சக்தி பைப்ஸ் லிமிடெட் அக்விசிஷன் அண்டர்டேக்கிங்ஸ் மசோதாவின் பேரில் சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

சாதாரணமாக, ஒரு தொழிற்சாலையை அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று சொன்னால் அந்த நஷ்ட ஈட்டைக் குறைவாகக் கொடுக்கலாம்; அந்த நஷ்ட ஈடு குறைவு என்று சொல்லி கோர்ட்டில் வாதாட முடியாத நிலைக்கு இப்போது அரசியல் சட்டத்திலேயே ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அரசியல் சட்டத்

1975 நவம்பர் 6] [திரு. கே. டி. கே. தங்கமணி]

திருத்த நோக்கமே என்னவென்றால் எந்தெந்த மாநிலங்களில் இந்தமாதிரி தொழிற்சாலைகளையோ அல்லது வேறு காலி இடங்களையோ அரசு ஏற்றுக் கொள்ள முன்வரக்கூடிய நேரத்தில் நஷ்ட ஈடு குறைவாகக் கொடுக்க வேண்டுமென்பதற்காக ஒரு மசோதா கொண்டு வரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த மாதிரி மசோதாவை முதல் முதலாக தமிழ்நாட்டில் கொண்டு வந்திருக்க வேண்டும். இதைப் பற்றி முன்பு ஒரு தடவை கூடச் சுட்டிக் காட்டியிருக்கிறேன். அந்த மசோதாவின் அடிப்படையில் நஷ்ட ஈடு நிச்சயம் பண்ணுவது பற்றிப் பரிசீலனை செய்ய லகுவாக இருக்கும்.

இரண்டாவதாக சக்தி பைப்ஸ் சம்பந்தமாக இரண்டு மூன்று விவரங்களை நம்முடைய அமைச்சர் அவர்கள் கொடுத்திருந்தால் உதவிகரமாக இருந்திருக்கும். ஒன்று, சக்தி பைப்ஸ் ஆரம்பித்த காலத்திலிருந்து எந்தக் காலம் வரை அது லாபமாக நடந்து கொண்டிருந்தது ? இப்போது நாம் கம்பெனியை எடுக்கின்ற நேரத்தில் எவ்வளவு நஷ்டம் இருந்தது ? ரிலீஃப் அண்டர்டேக்கிங் என்று எடுத்த பின்னால் வருஷத்தில் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது ? வருங்காலத்தில் இன்னும் நஷ்டம் இருந்து கொண்டுதான் இருக்குமா ? லாபம் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறதா ? இதுபோன்ற விஷயங்களை எல்லாம் அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக பதில் சொல்லுகின்ற நேரத்திலாவது சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காரணம், ஒரு பெரிய தொழிற்சாலையை நாம் ஏற்று நடத்தப் போகிறோம். அதற்காக இந்தச் சபையின் அங்கீகாரத்தைக் கேட்கப் போகிறோம். அப்படிக் கேட்கப்படுகிற காலத்தில் கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபாய் நஷ்டயீடு கொடுக்க இருக்கிறோம். இந்த மசோதாவில் உள்ள இன்னொரு அபாயகரமான பகுதி என்னவென்றால் இதுவரையில் அவர்களுக்கு ஏதாவது அண்டிஸ்சார்ஜ்ட் லயபிலிட்டி இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். இதுவரை கொடுக்க வேண்டிய கடன் ஏதாவது பாக்கியிருக்கிறது என்றால் அப்படி வரும்போது சில பாங்கு கடன்கள் இருக்கலாம். அதைப்பற்றிக்கூட

ஆட்சேபணையில்லை. ஷெட்யூல் 1-யைப் பார்த்தால் 'any other loan' என்றிருக்கிறது. 'Relief undertaking' என்று வரும்போது இன்னும் பலவிதமான கடன்கள் இந்தத் தொழிற்சாலையின் பேரில் இருக்கின்றன. அவைகளை நம்மேல் சுமத்த இருக்கிறார்கள்.

இம்மாதிரியான மசோதா வரும்போது நிரந்தரமாக எவ்வளவுதான் கொடுக்கப் போகிறோம் என்பதும் வருங்காலத்தில் இனி கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது என்ற நிலை இல்லாமல் செய்ய வேண்டும். சொத்து நம் கைக்கு வந்தபிறகு பழைய கடன்களை எல்லாம் கொடுக்கிறோம் என்ற நிலை இருக்கக்கூடாது. அந்த வகையில் இந்த மசோதாவில் ஒரு ஊனம் இருக்கிறது.

இன்னொன்று. 1972 ஆம் ஆண்டு இதை ரிலீஃப் அண்டர்டேக்கிங்காக எடுக்க வேண்டும் என்று வந்தபோது நாம் எல்லோரும் ஆதரித்தோம். காரணம், அங்கு 500 தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். தொழிற்சாலை மூடப்பட்டுவிட்டது, அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்பதற்காக ஆதரித்தோம், அது தப்பு என்று நினைக்கவில்லை. அந்த நேரத்தில் இம்மாதிரி அரசே ஏற்று நடத்த வேண்டும் என்ற கருத்து இருந்ததா? அல்லது நாம் ஏற்று நடத்த வேண்டும் என்று எப்போது முடிவு செய்தோம்? முடிவு செய்வதற்கும் இன்றைக்கும் இருக்கக்கூடிய இடைவெளி என்ன? நான் கேட்பதில் ஒரு நோக்கம் இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குப் புரியும். அப்போதுதான் நஷ்டம் ஏற்படுவதைக் குறைப்பதற்கும் அதிகப் பணம் கொடுக்க வேண்டியதைக் குறைக்க முடியும் என்பதற்கும் ஏதுவாக இருக்கும் என்பதால் கேட்கிறேன். கொஞ்ச காலத்திற்கு முன்னால் for the purchase of raw materials, we advanced Rs. 50 lakhs.

இது எந்தக் கொள்கையில் சேர்ந்தது? எடுக்கப் போகிறோம். நிர்வாகத்தை எடுக்கிற நேரத்தில் ஐம்பது லட்சம் ரூபாய் கடன் கொடுத்து, ராமெட்டீரியல்ஸ் வாங்குவதற்கு என்று கொடுத்தால் என்ன அர்த்தம்? தவறாகக் காரியங்கள் நடந்தன என்பதற்கு எடுத்துக்காட்டாக எனக்கு இது படுகிறது.

1975 நவம்பர் 6] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இரண்டு விஷயங்கள் பற்றி சொல்லி முடிக்கலாம் என்று நினைக்கிறேன். ஒன்று, இந்த நிறுவனத்தைப் பற்றி, தனிப்பட்டவரைப் பற்றிச் சொல்லவில்லை. இங்கு ஒரு உறுப்பினர்கூடச் சொன்னார்கள் கம்யூனிஸ்ட் கட்சியில் பூராவும் பணக்காரர்கள் இருக்கிறார்கள் என்று.

He is entitled to have his opinion.

கம்யூனிஸ்ட் கட்சி முதலாளி வர்க்கத்தின் கட்சி என்று அவர் நினைத்தால் நினைத்துவிட்டுப் போகிறார். உலகத்தில் எல்லோருக்கும் அந்தக் கட்சி எப்பேர்ப்பட்ட கட்சி என்று தெரியும். சாதாரண முதலாளிகள் இருக்கிறார்கள். ஏகபோக முதலாளிகளும் இருக்கிறார்கள். ஏகபோக முதலாளிகளைத்தான் கோடீஸ்வரர்கள் என்று சொல்கிறோம். வெறும் கோடீஸ்வரர்கள் மட்டுமல்ல. பலவிதமான தொழிற்சாலைகள் அவர்களுடைய கண்ட்ரோலில் இருக்கின்றன. அப்படி அவர்கள் கண்ட்ரோலில் இருப்பதால் சாமான்களின் விலைகளைக் குறைக்காத அளவிற்கு செய்யக்கூடிய சக்தி அவர்களுக்கு இருக்கிறது. அப்பேர்ப்பட்ட முதலாளிகளாக இருந்தால் அவர்கள் விஷயத்தில் நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அப்படி 13 அமைப்புகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த 13 அமைப்புகளில் ஒரு அமைப்பில் சேர்ந்தவர்களின் தொழிற்சாலையாக இது இருக்கும் என்றால் நாம் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அவ்வளவுதான் நான் சொல்ல முடியும்.

இந்த அமைப்பில் இருக்கக்கூடியவர் பெரிய ஆள். அவருடைய திறமையை நாம் பயன்படுத்திக் கொள்ளலாமா என்றால் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் விவகாரம் என்னவென்றால், நாம் நினைப்போம் அதிகாரத்தில் இருப்பதால் பெரிய ஏகபோக முதலாளிகள் நம் கண்ட்ரோலில் இருக்கிறார்கள் என்று. நடைமுறையில் அவர்கள் நம்மை கண்ட்ரோல் செய்வார்கள். அதுதான் சாதாரண அனுபவமாக இருந்து வருகிறது.

மற்றபடி டெக்ஸ்டூல் போன்றவை வரும்போது இந்த அளவிற்கு விவாதம் இருக்காது. இந்த சக்தி பைப்ஸ் சம்பந்தமாக பத்திரிகைகளில் பல செய்திகள் வந்தன. துள்ளக்

போன்ற பத்திரிகையில் நான்கு பக்கங்களுக்கு என்னென்ன நடந்தது என்பதைப்பற்றி வந்தது. எப்படியெல்லாம் ஏமாற்றுகிறார்கள்? நம்மிடத்தில் பணம் வாங்கிக் கொண்டு உங்களுக்கு நாங்கள் சப்ளை செய்கிறோம் என்றுசொல்லி சப்ளை செய்யாமல் இருக்கக்கூடிய காரியங்களைச் செய்திருக்கிறார்கள்.

அந்தமாதிரியுள்ள சக்தி பைப்ஸ்ஸுக்கு ஐம்பது லட்சம் ரூபாய் அட்வான்ஸ் கொடுத்திருப்பது எந்த முறையில் என்று புரியவில்லை. தொழிற்சாலை விரிவடையவேண்டும். எனக்கு முன் பேசிய கும்முடிப்பூண்டி தொகுதி உறுப்பினர் அவர்கள் விரும்பியபடி பெரிய தொழிற்சாலை ஆகவேண்டும், நல்ல முறையில் நடைபெற வேண்டும், அதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஏற்றுக்கொண்ட முறையில்தான் இருக்கிறது. 1972-ல் இருந்து செய்த முறைகளைப் பார்த்தால் மிகப் பெரிய கோளாறு இருக்கிறது. அரசாங்கம் செய்த இந்த நல்ல காரியத்தில்கூட பலவித கோளாறுகளோடு இந்தக் காரியம் நடந்திருக்கிறது என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவேதான்,

It is now necessary for the Government to lay all the cards on the Table. எந்தமுறையில் இது செய்யப்பட்டது, எப்போது இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. எப்போது லாபம் வந்தது, எப்போதிலிருந்து இந்த நஷ்டம் ஆரம்பித்தது, ஐந்து கோடி ரூபாய் நஷ்டம் எந்த அளவில் வந்தது, எப்போது வந்தது, எந்தக் காரணத்தால் வந்தது, நாம் எடுத்தற்குப் பிறகு உள்ள உபனங்கள் என்ன என்றெல்லாம் சொன்னால் இந்தத் தொழிற்சாலையை எடுப்பதில் எல்லோருடைய அங்கீகாரமும் இருக்குமே தவிர தொழிலாளர் களைப் பாதுகாப்பதற்காகத் தொழிற்சாலையை எடுக்கிறோம் என்றால் யாரும் எதிர்க்கமுடியாது. தொழிற்சாலைகளை நாம் அரசாங்க உடைமையாக்குகிறோம் என்றால் யாரும் எதிர்க்க முடியாது. இது குறுக்கு வழியில் இருக்கிறது என்ற காரணத் தால், மற்ற மசோதாக்கள் பின்னால் வருவதாக இருந்தாலும், இந்த மசோதாவைப்பற்றிய பின்னணி, இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தியாகக் கூடிய சாதனங்கள், அதனுடைய மார்க்கெட்ஸ்

என்னென்ன, எந்த அளவிற்கு அரசாங்கம் அதன்மீது கண்ட்ரோல் வைத்திருக்கிறது என்பனபோன்ற விவரங்களைத் தரவேண்டு மென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I would like to offer a few remarks regarding this important Bill which is being discussed in this House.

I welcome this Bill and I would once again reiterate and emphasise that on behalf of our Party, we are for nationalisation. But, in the name of nationalisation, prudence should dictate that it should be used in a very careful manner.

So far as this institution is concerned, I have had occasion to visit this institution twice. As a Member of the Committee on Public Undertakings I had occasion to see this plant, and as a Member of the Committee on Estimates, I had also occasion to see this plant. It is located in a backawrd area and the labourers working in that plant are very poor and there is no other industry in that area. So much so, there is nothing wrong in the Government assuming its management.

But there are certain factors which would have to be taken note of. In a backward area like this, the industry has got its own peculiarity and whether the required know-how from the Korean expert has been obtained by the management is the question. Also it would be just and proper that all those pipes which are in demand in the market should be manufactured because there has been large-scale accumulation of certain pipes which are not in good demand and the production of those pipes should not be encouraged by the management.

So far as the management is concerned, they have got to reduce the establishment charges. It has been stated on the floor of the House that the establishment charges, pay and other things are exorbitantly high and I think this Company and the Department should take efficient and prudent steps to see that expenditure is minimised.

I may, in this connection, make one suggestion, Sir, I would invite the attention of the House to one important point mentioned in the 14th Annual Report for 1974–75. At page 19, it is stated

that the net loss is Rs. 70,17,941-53 and in the previous year it was Rs. 30,70,872.85. When you just compare the figures, you will see that the cumulative loss is great. It has also been stated that this Company has not been functioning on profit for a pretty long time.

How can we set right things ? One method is rationalisation. According to me some more rationalisation of machinery has to be made. Some of the machinery are old and outmoded. I have had occasion to see the *copula* and other equipments there. Steps have to be taken to remodel and re-build it. I think it would be advantageous that this industry is developed. So far as this industry is concerned, this is the only industry in South India industry is concerned, this is the only industry in South India manufacturing these pipes. Other manufacturers are in Bengal and other places. As a matter of fact, we will have to encourage this industry. In the matter of encouragement, it should not be at the loss of efficiency. Efficiency will have to be taken into account. I think the department will take steps to see that wasteful expenditure is discouraged.

So far as the matter of compensation is concerned, I think formula and norms will have to be worked out carefully. The accounts disclosed in the balance-sheets of the company will have to be scrutinised with greater care. The reality of those entr es will have to be examined at depth so much so public funds should not be frittered away to any individual or company. We are not against any particular individual. In the matter of compensation, formula and norms will have to be worked out. I think th's will be devised properly by the management as well as government

Workers' participation may also be considered in this industry. They may also be associated with management.

There are certain basic amenities that will have to be meted out to workers now working. This company has remained closed for a long time. Old workers will have to be given re-employment. Their provident funds accounts will have to be settled.

I would once again appeal to the Hon. Minister that there should be no retrenchment as far as possible. There should be no harsh demand by workers. They should feel that this is

1975 நவம்பர் 6] (Thiru R. Ponnappa Nadar)

their institution. I think th's aspect will be gone into. The raw material available now is being sought to be changed and other ingredients that go to make up for production are also being changed. The institution has been having losses previously and this has affected production obviously.

To set right all the lacunae, efficient management will have to come in. Rationalisation of old machinery has to be effected. Wasteful expenditure on the managerial side will have to be checked. I hope these aspects will be considered. I welcome the move. The pipes of this institut'on are being ordered by TWAD and there are orders from foreign countries also. The industry deserves encouragement. Workers also should be allowed to participate with the management. With these words, I commend the Bill for the acceptance of the House.

* **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, பொதுவாக உறுப்பினர்கள் அனைவரும் இந்த நாட்டுடைமையாக்கப் படும் மசோதாவை ஆதரித்துக் கருத்துக்களைச் சொல்லி யிருக்கிறார்கள்.

முக்கியமாகப் பேசப்பட்ட பிரச்னை, நஷ்ட ஈடு கொடுப்பது பற்றியதாகும். அது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். நஷ்ட ஈடு கொடுப்பதில் ஒரு பிரின்சிபிள் ஓர்க்-அவுட் செய்து இருக்கிறோம். கொள்கையளவில் இந்த நஷ்ட ஈடு கொடுப்பதை நம்முடைய சட்டத்தின் மூலமாக மட்டும் அல்ல, மத்திய சர்க்காரின் சட்டத்திலும் இதுபோன்ற நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டு இருக்கிறது. குறிப்பாக, சிக் மில்களை எடுத்துக்கொள்ளும்போது நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டு இருக்கிறது. மத்திய சர்க்கார் Coaking Coal M... -க்கு நஷ்ட ஈடு கொடுத்து இருக்கிறது. இந்தியன் காப்பர் கார்ப்பரேஷனுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டு இருக்கிறது.

இந்த நஷ்ட ஈடு எப்படி வந்தது என்றால், இந்த நிறுவனத்தைப் பற்றி பரிசீலித்து ஒரு அறிக்கை கொடுக்க வேண்டுமென்று காஸ்ட் அக்கௌண்டென்ட் ஒருவரை நியமித்தோம். அவர் மத்திய அரசாங்க அதிகாரி, ரிடையர் ஆனவர். அவர் அதனுடைய

நிலைமைகளைப் பரிசீலித்து விட்டு, அந்த நிறுவனத்திற்கு எவ்வளவு நஷ்ட ஈடு கொடுப்பது என்று அறிக்கை கொடுத்து இருக்கிறார்கள். அந்த அறிக்கையில், மொத்தமாக அந்த நிறுவனத்திற்கு வேல்யூ என்று சொல்கிறபோது பிக்ஸட் அசெட்ஸ், கரென்ட் அசெட்ஸ், ஸ்டாக்ஸ் அண்டு ஸ்டோர்ஸ், அஸ்யூம்ட் லையபிலிடிஸ் என்று எடுத்து, அந்தத் தொகையிலிருந்து அரைவ் செய்த தொகையில் 75 சதவிகிதம் கணக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று குறிப்புத் தந்து இருக்கிறார்கள். இந்த 75 சதவிகிதத்தில் அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய கடன் தொகைகள், மத்திய மாநில அரசுகளுக்குச் சேர வேண்டிய—எஸ்டிமேடட் லயபிலிடி வரிப் பணத்தைக் கழித்துக் கொண்டு, மீதமுள்ள தொகையை அந்தக் கமிஷனிடத்தில் டிபாசிட் செய்ய வேண்டுமென்று இருக்கிறது. அப்படிக் கணக்குப் போடுகிறபோதுதான் ரூ. 1,95,64,000 என்று வருகிறது. கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய் காம்பன்சேஷன் கமிஷனிடத்தில் டிபாசிட் செய்ய வேண்டுமென்று ஒரு முறை ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. இந்தக் காம்பன்சேஷன் தொகையிலே—அறிக்கையிலே கொடுக்கப்பட்டு இருக்கிறது—

Order of priorities for the discharge of liabilities in respect of the undertaking—Part A—Post-take-over management period.

Part B—Pre-take-over management period.

In category I, (a) loans advanced by a Bank; (b) loans advanced by an institution other than a bank; (c) any other loan and (d) any credit availed of for purpose of trade or other manufacturing operations

எனவே இந்த நகல் கேட்டகரிக்கு இந்த காம்பன்சேஷன் கமிஷன் சொல்லியிருக்கும் தொகை கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் இங்கே எடுத்துச் சொன்னது போல, இந்தச் சர்க்கார் காம்பன்சேஷன் கமிஷனிடத்தில் இந்தத் தொகையை ஒப்படைக்கும் போது தேவைகளை அது சாடிஸ்பை செய்யும் நிலை அந்தத் தொகையிலே இல்லையென்றால், அரசாங்கம் மீதித் தொகையையும் காம்பன்சேஷன் கமிஷனிடத்தில் ஒப்படைக்க வேண்டுமென்று இந்த மசோதா கொண்டு

1975 நவம்பர் 6] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

காம்பன்சேஷன் கமிஷனிடத்தில் ஒப்படைக்கும் தொகை ரூ. 195 லட்சம், ஆனால் கேட்டிகிரி ஒன்றில் மாத்திரம் வரும் தொகை 295 லட்சம் என்று பார்க்கிறபோது, கேட்டிகிரி 2-இல்

Revenue, taxes, cesses, rates or any other dues to the Central Government or a State Government and any other dues

என்று இருக்கிறது.

ஆகவே, கேட்டிகிரி 2-க்கு தொகை இல்லாமல் இருக்கிறது. அதற்கு அடுத்து மற்றவர்களுக்கு எல்லாம் எந்தவிதமான தொகையும் வராது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

இதிலே ஷேர்-ஹோல்டர்ஸ் என்று வருகிறபோது, ஆர்டினரி ஷேர் ரூ. 159.95 லட்சம், பிரிபரன்ஸ் ஷேர் ரூ 50 லட்சம், ஆக ரூ. 210 லட்சம் வருகிறது. ரூ 210 லட்சம் கிடைக்குமா என்றால் இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்த டோடல் ஷேர் ஹோல்டர்ஸ் என்று பார்க்கிறபோது ரூ. 210 லட்சம் ஏற்கனவே சொன்னது போல,

total share holders Rs. 210 lakhs, cane growers Rs. 80.25 lakhs, financial institutions like TIIC, IDBI and IFCI Rs. 48 lakhs, promoters Rs. 22 lakhs and others Rs. 0.9 lakhs.

இதிலே கேன் குரோயர்ஸ்—விவசாயிகளுக்கு சுமார் 10,000 பேர் களுக்கு ரூ 86.25 லட்சம்,

promoters Rs. 22 lakhs, financial institutions Rs. 48 lakhs, preference shares Rs. 67.70 lakhs, financial institutions' preference shares Rs. 47.50 lakhs, promotors' preference shares Rs. 3 lakhs.

அவர்களுக்கு எல்லாம் எந்தவிதமான தொகையும் கிடையாது.

இந்த காம்பன்சேஷன் ஒர்க்-அவுட் செய்வதற்கு நியமிக்கப்பட்ட அதிகாரி கொடுத்த விவரங்களின் மீது, இவையெல்லாம் கொடுக்கப்பட்டு இருக்கின்றன, எனவே, காம்பன்சேஷன்

கமிஷனிடத்தில் ஒப்படைக்கும் தொகை ரூ. 195 லட்சம். ஆகவே, காட்டிகரி 1 இல் ரூ. 295 லட்சம் என்று வருகிற போது 1 கோடி ரூபாய் அளவுக்கு அரசாங்கம், அரசாங்கம் 'டேக்கன்-ஓவர்' செய்த பிறகு, (post taken over management) கடன்களைக் கொடுக்கிற அளவுக்குத்தான் இருக்க வேண்டுமே தவிர வேறு எந்தத் தனிப்பட்டவர்களுக்கோ, நிர்வாகத்தை நடத்தியவர் களுக்கோ எந்த விதமான நஷ்ட ஈடும் கிடைக்க வாய்ப்பு இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

இந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது 1960-ல். அது நடை பெற்று வந்து, 1972-லே ரிலீப் அண்டர்டேக்கிங் சட்டப்படி டேக்கோவர் செய்யப்பட்டது.

இந்த நிறுவனத்தின் நிர்வாகத்தைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். இந்த நிறுவனத்தின் நிர்வாகம் அரசாங்கத்தின் பொறுப்புக்கு வந்த பிறகு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதில் ஒரு 'எர் கூலிங்' மெஷின் சரியான முறையில் செயல்படவில்லை என்று தெரிந்து, அதை Korean experts நிபுணர்களைக் கலந்தாலோசித்து சரி செய்திருக் கிறோம். நமது நிர்வாகத்திற்கு வந்தபிறகு தவறாகக் கடன்களை எழுப்புகின்ற காரியங்களைச் செய்யவில்லை. நிறுவனத்தை முறை யாக நடத்தி வந்திருக்கிறோம். நம்முடைய நிர்வாகத்திற்கு வந்தபிறகு உற்பத்தி அதிகரித்திருக்கிறது. அங்கே உற்பத்தி செய்யப்பட்ட பைப்புகளுக்குப் போதுமான ஆர்டர்கள் நமது மாநிலத்தில் கிடைக்கவில்லை. அந்த நிலைமை இப்போது சீராக்கப் பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

1972-வது ஆண்டு வரை உற்பத்தி செய்யப்பட்ட பைப்புகள் வாட்டர் போர்டுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1973-74, 1974-75 ஆண்டுகளில் 35 சதவிகிதம் வாட்டர் போர்டுக்கு கொடுக்கப் பட்டது. இந்த மாநிலத்தில் போதுமான டிமாண்டு இல்லாத தால், வேறு மாநிலங்களில் இந்த பைப்புகள் விற்கப்பட்டிருக் கின்றன.

1975 நவம்பர் 6] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

இந்த நிறுவனத்திலிருந்த சில நிர்வாகிகளுக்கு அதிகமான சம்பளம் கொடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டை உறுப்பினர்கள் சொன்னார்கள். இன்றைக்குக்கூட வேறு நிறுவனங்களில் அப்படி கொடுக்கிறார்கள். இது இந்தியன் கம்பெனிகள் சட்டப்படி கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அரசாங்கம் நிர்ணயிக்கும் சம்பளத்தை மீறி அவர்களுக்குக் கொடுக்க முடியாது. அவர்கள் நிர்வாகத்தில் இருந்தபோது கொடுக்கப்பட்டிருந்தாலோ, அல்லது நமது நிர்வாகத்திற்கு வந்த பிறகு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள சம்பளம் அதிகம் என்று கருதினாலோ, நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதிலும் குறிப்பாக செக்ஷன் 5-ல்

"(1) Every liability, other than the liability specified in sub-section (2), of the owner of the undertaking in respect of any period prior to the appointed day, shall be the liability of such owner and shall be enforceable against him and not against the Government or the Government company.

(2) Any liability arising in respect of—

(*a*) loans advanced by the Central Government, or a State Government, or both, to the undertaking (together with interest due thereon) after the date of management; and

(*b*) wages, salaries and other dues of employees of the undertaking, in respect of any period whether before or after the date of management, shall, on and from the appointed, day, be the liability of the Government and shall be discharged, for and on behalf of the Government, by the Government company as and when repayment of such loans or amounts becomes due or as and when such wages, salaries or other dues become due and payable."

என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, அரசாங்கத்திற்கு வரவேண்டிய கடன்களை எல்லாம் எடுத்துக் கொள்கின்ற ஏற்பாடு இதில் செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தொழிலாளர்களைப் பொறுத்த வரையில், அரசாங்கம் நிர்வாகத்தை எடுத்துக்கொள்

வதற்கு முன்னால் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய சம்பளம், ஊதியம் எல்லாவற்றையும் டேக்கோவர் செய்த பிறகு கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் சொன்னார்கள், தவறாக நிர்வாகம் நடத்துகின்றவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கக் கூடாதா, அவர்களைக் கைது செய்யக்கூடாதா என்று. இது பேசுவதற்கு சுவாரஸ்யமாக இருக்கும். பத்திரிகையில் போடுவார்கள். இன்றைக்கு பாராளுமன்றத்தில் பப்ளிக் அண்டர்டேக்கிங்களில் நிர்வாகக் குறைவு, இன்னெஃபிஷியன்ட் மானேஜ்மெண்டு என்றெல்லாம் பேசப்படுகிறது. உறுப்பினர் தெரிவித்தபடி நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தால், அது எங்கே போய் முடியும் என்று தெரியவில்லை. உறுப்பினர் எண்ணத்தைக் கவனத்தில் கொண்டாலும், கணக்குப் பார்க்கின்றபோது தனிப்பட்ட நபர்களுக்கு எந்த நஷ்டஈடும் போய்ச் சேரும் நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஃபைனான்ஷியல் இன்ஸ்டிடியூஷன்களுக்குக் கிடைக்கின்ற நிலைதான் இருக்கிறது. இன்டஸ்டிரியில் டெவலப்மெண்டு பாங்க் ஆஃப் இந்தியா, டிஐ.சி., ஐ.எஃப்.சி., போன்ற நிறுவனங்களுக்குப் பல லட்சக்கணக்கான ரூபாய் வரவேண்டியிருக்கிறது. இருந்தாலும், கொள்கை அடிப்படையில் கொடுக்க ஏற்பாடு நடைபெறுகிறது. சக்தி பைப் நிறுவனத்துக்கு 1¾ கோடி ரூபாய் கொடுத்தாலும் கூட, இன்னொரு நிறுவனமாகிய சதர்ன் ஸ்டரக்சுரல்ஸ்க்கு ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை என்று இருக்கிறது. டோக்கனை 1,000 ரூபாய்தான் கொடுக்க வேண்டியிருக்கிறது. கொள்கை என்று வரும்போது சிலருக்குத் தொகை கொடுக்க வேண்டிய நிலைமையும், சிலருக்குக் கொடுக்காத நிலைமையும் இருக்கலாம். ஆனால் போஸ்ட் டேக்கோவர் செய்து கொடுக்கின்ற நிலைமை இருக்கிறது. இந்த நிறுவனம் செம்மையாக நடைபெற எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. பொதுவாக இந்தச் சட்டத்தை வரவேற்ற உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவிக்கு. இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

1975 நவம்பர் 6]

திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, போஸ்ட் டேக் கோவர் பீரியட் என்றும், கேட்டிகிரி 1 என்றும் சொல்லி சில ஐட்டங்களை குறிப்பிட்டிருக்கிறார்கள். அதன் விவரம் அரசாங் கத்தின் மேற்பார்வையின் கீழ் வந்தபிறகு ஏற்பட்ட கடன்கள், தொகைகள் பொறுத்த வரையில் இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படியானால் 22-வது பிரிவின்கீழ்:

"Where any liability of the owner of the undertaking arising out of any item specified in category I of the Schedule is not discharged fully by the Commissioner out of the amount paid to him under the Act, the Commissioner shall intimate in writing to the Government the extent of the liability which remains undischarged, and that liability shall be assumed by the Government."

என்றிருக்கிறது. அப்படியானால் அரசாங்கத்தின் மேற்பார்வையின் கீழ் வந்தபிறகு 'ஓனர்' என்று சொல்லப்படுகிற நபர், நிறுவனம் சம்பந்தமாக தொகை பெற வாய்ப்பிருக்கிறது. அப்படியானால் அந்தத் தொகை எவ்வளவு என்று அமைச்சரவர்கள் கூறுவாரா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஓனர் என்றவுடன் திரு. மகாலிங்கம் என்ற நினைவு வரக்கூடாது. கம்பெனி என்ற ஞாபகம் வரவேண்டும். கம்பெனியை நாம் எடுத்து நடத்து கிறோம். நாம் வாங்கின லோன்களைத் திருப்பிக் கட்டுகிறோம்.

திருமதி. த. ந. அனந்தநாயகி: நீங்கள் எடுப்பதற்கு முன்னால் வேறு பல விதமான லோன்கள் கொடுக்கப்பட்டிருக் கின்றன. அவற்றையெல்லாம் என்ன செய்யப் போகிறீர்கள்? 'ரைட் ஆப்' செய்யப் போகிறீர்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, இந்த நிறுவனத்தைப் பொறுத்த வரையில் மிக மோசமாக நடத்தப் பட்ட தனியார் நிறுவனம், இதில் அரசாங்கம் போய் மாட்டிக் கொண்டதே என்பதுதான் இங்கே பேசப்பட்ட ஒன்றாகும். இதில் வேடிக்கை என்னவென்றால், இந்த நிறுவனம் ஆரம்பிக்கப் பட்டது 1960-ம் ஆண்டு. இவ்வளவு மோசமான நிலையை உருவாக்கினது 1967-க்கு முன்னால். அதற்குப் பொறுப்பான

வர்கள் எல்லாம் நம்மை தாக்குகின்ற நிலையைப் பார்க்கின்றோம். 1967-க்கு முன்னால் இந்த மோசமான நிலைக்கு யார் யார் காரணமோ! ஆனால் அவ்வளவு மோசமாக நடத்தப்பட்ட 20-க்கு மேற்பட்ட நூல் ஆலைகள் நிர்வாகத்தை ஏற்க வேண்டிய பொறுப்பு எங்கள் தலையில் விழுந்தது.

ஸ்பின்னிங் மில்களைப் பொறுத்த வரையில் நாங்கள் எடுத்துக் கொண்ட பிறகு 10,000 பேருக்கு வேலை கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தற்போது பிரச்னையில் உள்ள நான்கு ஆலைகளைப் பொறுத்த வரையில் பல நூற்றுக்கணக்கான பேருக்கு வேலை கொடுக்கிறோம். இதில் ஆட்சேபனை செய்யமுடியாது. ஆனால் இந்த நிர்வாகத்தின் பொறுப்பை ஏற்கும்போது தனியாருக்கு லாபம் வருகிறதா—இதுதான் இந்த மசோதாவைப் பொறுத்த வரையில் கவனமாக ஆராய வேண்டும். எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் பேச்சுக்கள் எல்லாம் அதில்தான் கருத்தாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். நாங்கள் எடுத்து நடத்தும் போது, அதில் வரக்கூடிய பயன் தனிப்பட்ட முதலாளிக்குப் போகக்கூடாது என்பதில் கவனமாக இருக்கிறோம். இன்னும் விரிவாகச் சொல்லப் போனால், அது தனியாருக்கு சாதகமாகப் போகுமே என்று அஞ்சுகிறேன். இன்றைய தினம் நாம் ஆலையிலிருந்து எடுக்கும் மொத்த சொத்துக்கும் பணம் கொடுக்கவில்லை. இது ஒன்றே நாம் எப்படி எடுத்திருக்கிறோம், தனியாருக்கு லாபம் இல்லை என்பதற்கு உதாரணம் என்று கருதுகிறேன். கடனைப் பற்றிக் கேட்டார்கள். அதுதான் பயங்கரமான கேள்வி. இதற்கு விளக்கம் சொன்னால் தனியாருக்குச் சாதகமாகப் போகும். தனியாரிடம் இருக்கிறபோது, அவர் யாரிடம் கடன் வாங்கியிருந்தாலும், அதை நாங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. எதெது ஃபைனான்ஷியல் இன்ஸ்டிட்யூஷன் கடனோ, அதை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கிறோம். நாம் எடுத்த பிறகு, என்ன லயபிலிடி என்று அதை கணக்கில் எடுத்துக்கொண்டு, அதுவும் அவர்கள் வாங்கியுள்ள சொத்துக்குள் வரவேண்டும் என்று வைத்திருக்கிறோம். அரசாங்கத்தின் சார்பில் ஆலையிலிருந்து எவ்வளவு சொத்து எடுக்கி

றேமோ, அந்தச் சொத்துக்குள்தான், கடன், காம்பன்சேஷன் எல்லாம் வரும் என்று அவ்வளவு ஜாக்கிரதையாக செய்திருக்கிறோம். 1967-க்கு முன்னல் எப்படியிருந்தது என்று டாக்டர் ஹாண்டேக்கு தெரியும். இப்போது இருக்கிற நிலையைப் பாருங்கள். நாங்கள் எடுத்ததால் அது தப்பு இது தப்பு என்று சொல்கிருர்கள். இதில் வேடிக்கை என்னவென்ருல் நான் முதலில் விளக்கியதுபோல ரூ. 210 லட்சத்தில் தனி நபரின் பணம் ரொம்பக் குறைவு. இதில் பிரமோட்டர் என்ற டெஃபனிஷனை எடுத்துக் கொண்டால், அதன் பின்னல் யார் யார் வருகிருர் என்பது தெரியும். இதில் பெரும்பான்மையான பணம்—ரூ. 10,000-க்கு மேற்பட்ட பணம் விவசாயிகளின் பணம் ரூ. 210 லட்சம் பணம் போட்ட ஒரு தனி நபரை அன்றைய அரசாங்கம் ஊக்குவித்தது. இவ்வளவு பெரிய முதலைப் போட்டு ஒரு ஆலையை உருவாக்கச் சொல்லி, இந்த ரூ. 210 லட்சத்திற்கு என்ன கொடுக்கப்போகிருர்கள் என்று கேட்டால்—அதற்குப் பதில் சொன்னல் ஆபத்து. இதில், கணக்குப் போட்டால் ஆபத்து தான்.

இதில் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், ரூ. 210 லட்சம் முதலைப் பற்றியோ, விவசாயிகளின் முதலைப் பற்றியோ, கடனைப் பற்றியோ, எதைப் பற்றியும் கவலைப் படவில்லை. நாங்கள் கவலைப் படுவதெல்லாம் இன்றைக்கு எவ்வளவு அஸெட் வருகிறது? அந்த அஸெட்டுக்கு எவ்வளவு மதிப்பு இருக்கிறது? அந்த மதிப்புக்குக் குறைவாகத்தான் கொடுக்க வேண்டும் என்பது எங்கள் கொள்கை. இந்த மன்றத்தைப் பொறுத்த வரையில் இதைப் புரிந்து கொண்டால் போதும். அந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் அரசு செயல்பட்டிருக்கிறது. ஆனல், தேசிய மயமாக்கப்படுகிற கொள்கை சரியா, தவரு என்ற பிரச்சினை வேறு. தேசிய மயமாக்குதலை மத்திய அரசு ஏற்றுக் கொள்கிறதா என்று வருகிறது. நாம் என்ன சட்டம் நிறைவேற்றினலும் மத்திய அரசின் அனுமதி அதற்குக் கிடைக்கவில்லை என்ருல் நாம் சட்டம் நிறைவேற்றிப் பயன் இல்லை. தேசிய மயமாக்குகின்ற கொள்கை இந்தப் பேரவையின் தத்துவம் என்ற அடிப்படையில் இந்தக் காரியத்தை நாம் செய்கிறோம். இதில் மத்திய அரசை அப்படியே பின்பற்றி இருக்கிறோம். எனவே, மத்திய

அரசின் முட்டுக்கட்டை வந்து விடுமோ என்று நினைக்க வேண்டியதில்லை. இதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால், மத்திய அரசு செய்யும்போது இதைப் போல ஒரு அரசு உண்டா என்று சொல்கிறார்கள். அதையே நாங்கள் செய்யும்போது வருத்தமாக இருக்கிறது. அதிலேயும், அதில் சேர்ந்து கொண்டிருப்பவர்களுக்கு இன்னும் வருத்தமாக இருக்கிறது. டாக்டர் ஹாண்டே அவர்கள் இதை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்கள் என்ன சொன்னாலும் ஒத்துக்கொள்ள வேண்டும் என்ற முறையில் பேசுவது சரியா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் சட்ட ரீதியாக இப்படி மாட்டிக் கொண்டிருக்கிறோம். இதிலே நான் அங்கத்தினர்களுக்கு உறுதியாகக் கூற விரும்புவதெல்லாம் நாங்கள் இன்றைய தேதியில் அந்தக் கம்பெனியில் என்ன அஸெட் எடுத்திருக்கிறோமோ அதற்கு அதிகமாக, அனாவசியமாக ஒரு காசு கூடத் தனியாருக்குக் கொடுக்கவில்லை என்பதுதான். இதற்கு மேல் சொல்ல வேண்டுமென்றால் அது தனியாருக்குச் சாதகமாகப் போய் விடும் என்ற காரணத்தால் சூசகமாகக் கூறியிருக்கிறேன்.

இதில் பணம் போட்டவர்களின் கதி என்னவாகும் என்றெல்லாம் நான் கூறப்போவதில்லை. இந்த விளக்கத்தை அங்கத்தினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை நாங்கள் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

இன்னொரு உதாரணத்தையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன். சதர்ன் ஸ்டிராக்சுரல்ஸ் என்ற ஒரு தனியார் நிறுவனம்—அது யாருடைய செல்வாக்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பது தமிழ் நாட்டில் யாவருக்கும் தெரிந்த ஒன்று. திருவாங்கூர் மகாராஜாவின் செல்வாக்கில் அது நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. நாங்கள் இந்த கம்பெனிகளை கையகப்படுத்தும்போது திருவாங்கூர் மகாராஜாவையும் பார்க்கவில்லை, பொள்ளாச்சி மகாலிங்கத்தையும் பார்க்கவில்லை—எங்களுக்கு கொள்கைக்கு எது ஒத்து வருகிறதோ அதைக் கணக்கில் எடுத்துக் கொள்கிறோம். சதர்ன் ஸ்டிரக்சு

1975 நவம்பர் 6] [திரு. செ. மாதவன்]

ரல்ஸ் நிறுவனத்திற்குக் கொடுக்கப்படுவது ரூ. 1,000 தான் என்று அறிக்கையில் சொல்லி இருக்கிறோம். எனவே, இது எங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை. இதை நாங்கள் மாறி மாறிப் பேச விரும்பவில்லை. நஷ்ட ஈடு ஒன்றுமே கொடுக்கக் கூடாது, ஜெயிலில் போட வேண்டும் என்ற தத்துவங்கள் எல்லாம் பேசப் பட்டன. அது ஒருவேளை நாட்டின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையாக இருக்குமானால் நாங்கள் அதற்கு முன்னால் போவோமே தவிர ஒருக்காலும் பிற்போக்குவாதிகளாகப் பின்னால் இருக்க மாட்டோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். பணக்காரர்களுக்கு விட்டுக்கொடுக்க வேண்டுமென்ற முறையில் செயல்படக்கூடிய அரசாங்கம் அல்ல இந்த அரசாங்கம்.

12 தொழிற்சாலைகளை நாம் ஏற்று நடத்தினோம். நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருந்த அந்தத் தொழிற்சாலைகள் ஒரே வருஷத்தில் 3 கோடி ரூபாய் லாபம் பெறும் முறையில் அத்தொழிற்சாலைகளை ஏற்று நடத்தினோம். மற்ற மத்திய அமைச்சர்கள் இதைப் பாராட்டிய போதுகூட திரு. சி. சுப்பிரமணியம் பச்சாதாபம் இல்லாமல் பேசிய பேச்சை டாக்டர் ஹாண்டே அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படிச் சிந்தித்துப் பார்ப் பாரேயானால் திரு. ஹாண்டே அவர்கள் இந்த அரசாங்கத்திற்குப் பக்கமாக வர வேண்டிய நிலை ஏற்படும். அந்தப் பக்கம் போக வேண்டிய அவசியம் இருக்காது. இந்த உண்மையான கொள்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, 'எங்கள் தலையில் வந்து விழுந்து விட்டது' என்று பேசினார்கள். எத்தனையோ நல்ல கம்பெனிகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஏன் இந்த அரசு ஏற்று நடத்தக் கூடாது? அதை விட்டு, எங்கள் தலையில் வந்து விழுந்து விட்டது என்று பேசுவது சரியல்ல.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அவர்களுடைய நிர்வாகம் தொழிலாளர்களுக்குச் சாதகமாக இருக்கிறது. எனவே அவற்றில் தலையிட அவசியம் இல்லை என்ற நிலை இருக்கிறது.

இந்த நிறுவனத்தை தேசியமயமாக்காமல் விட்டுவிட்டால் இதனால் யாருக்கு லாபம் என்பதை திரு. பழனிசாமி அவர்கள் மறந்து விடக்கூடாது. இதை மறந்து பேசுவதால் யாருக்கு லாபம் என்பதையும் உறுப்பினர் அவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். இந்தத் தொழிற்சாலை முன்பு எப்படி நடந்து கொண்டிருந்தது? மூலப் பொருள்கள் 100 சதவிகிதம் என்றால் ஃபினிஷ்ட் கூட்ஸ் 25 சதவிகிதம் தான்—இதுதான் 1967-க்கு முன்னால் இருந்த திறமை என்பதை எல்லாம் நண்பர் பழனிச்சாமி அவர்கள் அறிந்தவர்கள். ஆகவே, லாபம் தனி யாருக்குப் போய்ச் சேர்ந்து விடக்கூடாது என்பதை அவர் ஏற்றுக்கொள்வார் என்று நினைக்கிறேன்.

(பேரவைத் தலைவர்—தலைமை)

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, 1967-க்குப் பிறகு திறமையை அதிகப்படுத்தி இருக்கிறார்கள் என்று சொல்லவில்லை. 1974-75-இன் ஆன்யுவல் ரிபோர்ட் இருக்கிறது. இதைப் பார்க்கும் போது 'நெட் லாஸ் டபிள் ஆகியிருக்கிறது' என்று கொடுக்கப் பட்டிருக்கிறது, அமைச்சருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தெரியும், நாம் இதை எடுக்காமல் விட்டிருப்போமேயானால் இதை விட நிலைமை மோசமாகி இருக்கும். நாம் எடுத்ததால்தான் 75 சதவிகிதம் ரிஜெக்ட்ஸ் குறைந்து இருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது 10 ஆயிரம் விவசாயிகள் ரூ. 86 லட்சம் போட்டிருக்கிறார்கள் என்று கூறினார்கள். அந்தப் பத்தாயிரம் விவசாயிகளும் என்னுடைய கோபி — பவானி — பகுதியைச் சேர்ந்தவர்கள்தான். இந்த இரண்டு தாலுகாவைச் சேர்ந்த விவசாயிகளும் தாங்களாக இந்தப் பணத்தைக் கொடுக்கவில்லை. கட்டாயப்படுத்தப்பட்டுதான் இந்த விவசாயி களிடம் பணத்தை வாங்கி இருக்கிறார்கள். இந்த விவசாயிகள் மிகவும் சிறிய விவசாயிகள். எனவே, அவர்களுடைய பணத்தை அவர்களுக்கே திருப்பித் தர — அவர்களுக்குப் பாதுகாப்புத் தரும் வகையில் இந்த அரசு நடவடிக்கைகளை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: தலைவரவர்களே, இதே முறையில் இண்டியா மீட்டர்ஸ் திறுவனமும் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அதையும் அரசு மேற்கொள்ள உத்தேசம் இருக்கிறதா? உத்தேசம் இருக்குமானால் அதை எப்போது அறிவிப்பார்கள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: "இண்டியா மீட்டர்ஸ்" பற்றி இந்த அவையில் நீண்ட நாட்களாகப் பேசப்பட்டு வந்திருக்கிறது. இதற்கு ஐ. சி. ஐ. சி. ஐ. திறுவனம் பணம் கொடுத்து உதவி இருக்கிறது. திரு. ஐயர் என்பவர் அங்கே மேனேஜிங் டைரக்டராக இருக்கிறார். மத்திய அரசின் யோசனையின்கீழ் அவருடைய தலைமையில் அந்த நிறுவனம் நடத்தப் பட்டு வருகிறது. அதில் கொஞ்சம் நஷ்டம் வந்தது. எலக்ட்ரிசிடி போர்டைப் பொறுத்தவரையில் அவர்கள் இதைக் கடுமையாக ஆட்சேபிக்கிறார்கள். இதுதான் இன்றைய நிலை. இதைத் தொடர்ந்து நஷ்டத்தில் நடத்துவதா அல்லது தொழிலாளர்கள் எப்படியாவது இந்தக் கம்பெனியை நடத்த அனுமதிக்கலாமா என்பது தற்போதுள்ள இரண்டு ஆலோசனைகள். இந்த இரண்டு யோசனைகளும் அரசாங்கத்தினால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி அவர்களின் திருத்தத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி: "1975-ஆம் ஆண்டு, சக்தி பைப்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 21 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு—22

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "பிரிவு 22 மசோதாவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

THIRU K. T. K. TANGAMANI: Sir, I move the amendment standing in my name, namely,

In clause 22, for sub-clause (2), substitute the following:

"The Government may by order direct the Government Company to write off such undischarged liabilities."

The amendment was duly seconded.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேழவேந்தன் அவர்கள் சொல்லும்போது நாம் கொடுக்க வேண்டிய கடன்களைக் கிட்டத்தட்ட 2 கோடி இருக்கும் என்று சொன்னார்கள். அதற்கு மேலும் இந்த நஷ்ட ஈடு தொகை வருகிறது என்று கருதுகிறேன். இப்போது உதவி அல்லது நஷ்ட ஈட்டுத் தொகை கொடுக்க வேண்டுமா என்று வரும்போது—லையபிலிடீஸ் பூராவும் கொடுக்க வேண்டும் என்று வரும்போது எந்த அளவுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப் போகிறோம்? அது இரட்டிப்பு ஆகும் என்று கருதுகிறேன். நஷ்ட ஈடு என்று நிச்சயம் பண்ணுவதற்கு இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் ஆகும் போல இருக்கிறது. இதைக் கைவிட வேண்டுமென்று—அதை கைவிடக்கூடிய நிலையை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே என்னுடைய திருத்தம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இப்போது குறைவாக உள்ளது என்று சொல்லிவிட்டு பின்பு இரண்டு மடங்கு மூன்று மடங்கு என்று குட்டி போட்டுக் கொண்டு போகக்கூடாது. நான் கேட்ட கேள்விக்கு பதில் கொடுக்காமல் வேறு ஏதோ பிரசங்கம் செய்து முடித்தீர்கள். நான் கேட்ட கேள்விக்கு அரசாங்கம் பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் வெறும் பிரசங்கம் பண்ணவில்லை என்பதை இந்த மாமன்றம் அறியும். அதைத்தான் ஜாடையாகச் சொன்னேன். நமது கொள்கை தேசியமயமாக்கு

1975 நவம்பர் 6] [திரு. செ. மாதவன்]

வது என்பதாகும். முதலாளியாக இருந்தவர் கடன் எங்கே வாங்கினர் என்பதைப் பற்றி நாம் கவலைப்படுவதில்லை. நாம் எடுத்துக்கொண்ட பிறகு பாக்கியை நாம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளுகிறோம். முதலாளிகள் கடன் வாங்கினர்கள். அவர்கள் கொடுக்க வேண்டிய கடனைப் பற்றி பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 22 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள் 23 முதல் 31 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

அட்டவணை பேரவை முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே,

"1975-ஆம் ஆண்டு, சக்தி பைப்ஸ் லிமிடெட் (நிறுவனத்தை கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1975) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவை முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

திருமதி த. ந. அனந்தநாயகி: பாய்ன்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பில் பாசாகிவிட்டது.

(4) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 21(3) இன்படி கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் அரசினர் சட்ட முன்வடிவுகள் என்ற தலைப்பின்கீழ் உள்ளினங்கள் 8, 9, 10 ஆகியவற்றை, உள்ளினம் ஒன்றுக்குப் பிறகு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று" முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(6) அறிவிப்புகள்.

(அ) 1975 ஆம் ஆண்டு, சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1975 ஆம் ஆண்டு, சதர்ன் ஸ்டிரக்சுரல்ஸ் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன் வடிவை (சட்டமன்ற பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1975) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

(ஆ) 1975 ஆம் ஆண்டு, சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1975)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பேரவைத் தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டு, சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவை* (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1975) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

* 25—10—1975-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

1975 நவம்பர் 6] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

ரயில்வே வேகன்கள், ரயில் பெட்டிகள், எல்லா வகையான ரயில் என்ஜின்கள், வண்டிகள், பளு தூக்கி இயந்திரங்கள், ரயில்வே கட்டுமானப் பொருட்கள் அவைபோன்ற பிற பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதில் சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனம் பல ஆண்டுகளாக விரயத்தில் செயல்பட்டு வந்துள்ளது. இந்த நிறுவனத்தையே மூடும்படியான சூழ்நிலை உருவாகியது. இதில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கவும், நிறுவனத்தின் உற்பத்தி வசதிகளைத் திறம்படப் பயன்படுத்தவும் இந்த நிறுவனத்திற்கு தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு நிவாரணத் தொழில் நிறுவனங்கள் (சிறப்பு விதித்துறைகள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1969) பயனை மாநில அரசு அளித்துள்ளது.

இந்நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவும், இதன் பங்குதாரர்களும் இந்நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பையும் 1971 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 8-ஆம் நாளன்று அரசிடம் ஒப்படைத்தனர். அன்று முதல் அரசு இந்நிறுவனத்தின் நிர்வாகத்தைத் தனது நியமனதாரர்கள் மூலமாக நிர்வகித்து வருகிறது. இந்நிறுவனத்திற்கு அரசு கணிசமான நிதியுதவியையும் அளித்துள்ளது. இந்நிறுவனத்தை விரிவுபடுத்துவதற்கு கணிசமான அளவுக்குப் புதிதாக முதலீடு செய்ய வேண்டியுள்ளதோடு இந்நிறுவனத்தின் மீது அரசு நிர்வாகக் கட்டுப்பாட்டைத் தொடர்ந்து செலுத்துவதற்கு வகை செய்யவும் வேண்டியுள்ளது. எனவே, இந்த நிறுவனத்தைக் கையகப்படுத்துவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன நோக்கத்தை எய்த விழைகிறது.

இதனை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம் மாமன்றத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1975 ஆம் ஆண்டு. சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்ற பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1975) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 31 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டன.

திருமதி த. ந. அனந்தநாயகி: பில் மூவ் பண்ணி ஒருவரைக் கூட பேசவிடவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான்கு பில்களையும் 12-30 மணிக்கு முடித்துவிட்டுத்தான் பிறகு அர்பன் லேண்டு டாக்ஸ் பில்லுக்குப் போகவேண்டுமென்று ஏற்கெனவே முடிவு எடுத்திருக் கிறோம்.

அட்டவணை பேரவை முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: "1975 ஆம் ஆண்டு சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப் படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 39/1975) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(6) அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஆ) 1975 ஆம் ஆண்டு, லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1975-ஆம் ஆண்டு லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1975) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி).

(இ) 1975 ஆம் ஆண்டு, லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1975).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: சட்டமன்ற பேரவைத் தலைவர் அவர்களே,

"1975 ஆம் ஆண்டு லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு* (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1975) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 31 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பேரவைத் தலைவர் அவர்களே,

"1975 ஆம் ஆண்டு, லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1975) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு. சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

* 25—10—1975-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

(6) அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(இ) 1975 ஆம் ஆண்டு, டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1975 ஆம் ஆண்டு, டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1975) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

(ஈ) 1975 ஆம் ஆண்டு, டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1975)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பேரவைத் தலைவர் அவர்களே, "1975ஆம் ஆண்டு டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன் வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1975) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 31 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டன.

அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

* 25—10—1975-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

1975 நவம்பர் 6]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே,

"1975-ஆம் ஆண்டு டெக்ஸ்டூல் கம்பெனி லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்ட மன்ற பேரவை சட்ட முன்வடிவு எண் 41/1975) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது. (

(உ) தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/1975)

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பேரவைத் தலைவர் அவர்களே,

"1975-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்ட மன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 51/1975) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என நான் முன்மொழிகிறேன்.

குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் திட்டங்கள் வெளியார் உதவியின்றி மாநில அரசின் நிதிகளைக் கொண்டே நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். இத்திட்டங்களுக்கான நிதிவாயில்களைத் திரட்டிட, தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின்கீழ் (காலி நிலம் உட்பட) குடியிருப்புக்காகவும், குடியிருப்புக்கு அல்லாத நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகிற நிலங்களுக்கு வெவ்வேறு படித்தரங்களில் வரி விதிக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. இவ்வாறு வரி விதிப்பதன் வாயிலாகக் கிட்டும் கூடுதல் வரித் தொகையை குடிசை மாற்றுப் பணிகளுக்காகவும், மறு வளர்ச்சித் திட்டங்களுக்காகவும், குறைந்த வருவாய்த் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டங்களுக்காகவும் செலவிட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. மற்றும், சென்னை

* 31—10—1975-ம் தேதிய தமிழ்நாடு அரசிதழ் சிறப்பேட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

மாநகரப் புற எல்லைகளிலிருந்து 16 கிலோ மீட்டருக்குள் அமைந்துள்ள பகுதிக்கும் இச்சட்டத்தை நீட்டிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இச்செயல் நோக்கத்திற்காக, 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/1975) அதிகார முறையில் வெளியிடப் பட்டது.

பொதுமக்களிடமிருந்தும், வெவ்வேறு தொழில் நிறுவனங் களிடமிருந்தும், வர்த்தக சங்கங்களிடமிருந்தும், கல்வி நிறுவனங் களிடமிருந்தும் பற்பல சலுகைகள் கோரி முறையீடுகள் பெறப் பட்டன. இம் முறையீடுகள் அனைத்தையும் ஆய்வு செய்து, இச்சட்ட முன்வடிவின் பின்வரும் விதித் துறைகள் இயற்றப் படுகின்றன. அவையாவன:—

(1) சென்னை, மதுரை, கோவை, சேலம், திருச்சிராப்பள்ளி நகரங்களிலும், சென்னை மாநகரின் புற எல்லைகளிலிருந்து 16 கிலோ மீட்டர் தொலைவிற்குள் இருக்கிற எல்லைப் பகுதியிலும் உள்ள நிலங்களின் நிலவரி விலை 1971 ஜூலை 1-ம் நாளன்று உள்ளபடி முடிவு செய்யப்படும். ஆயினும், கிராமத்தின் ஒரு பகுதி மட்டும் மேற்சொன்ன 16 கிலோ மீட்டருக்குள் அமைந் திருந்தால் அந்தக் கிராமம் முழுவதும், இவ்வரி விதிப்பின் செயல் நோக்கத்திற்காக விலக்குப் பெறும்.

(2) பொதுமக்களுக்கு சில நன்மைகளை வழங்கிட, படித்தர மான வரி விதமும் மாற்றி அமைக்கப்படுகின்றது;

(3) எல்லைப் பகுதியைப் பொறுத்தவரையில், தொடக்க வரி விலக்கின் வரம்பு உயர்த்தப்படுகிறது.

கட்டிடச் சொந்தக்காரரே அனுபவித்து வருகிற நிலங்களுக்கு அளிக்கப்பட்டு வந்த சலுகையை நிறுத்திவிட உத்தேசிக்கப்பட் டுள்ளது.

1975 நவம்பர் 6] [திரு. செ. மாதவன்]

மேற்படி அவசரச் சட்டத்திற்குப் பதிலாக, இச்சட்ட முன் வடிவை இயற்றும் வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு மூலச் சட்டத்தின் 29 ஆவது பிரிவைச் சேர்ந்த (c), (d), (h), (i), (k) பகுதிகளின்கீழ் விலக்குகள் அளிப்பது குறித்துச் சில திருத்தங் களைச் செய்திட உத்தேசிக்கப்படுகிறது.

1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரி (திருத்த) அவசரச் சட்டத்தில் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/1975) சில மாறுதல்களைச் செய்து, அதற்குப் பதிலாக ஒரு சட்டத்தைக் கொண்டுவர இச்சட்ட முன்வடிவு விழைகிறது.

இச்சட்ட முன்வடிவை ஏற்று, நிறைவேற்றித் தருமாறு இப் பேரவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-30]

THIRU N. K. PALANISAMY: Sir, I move the following amendment :—

'That the Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 51 of 1975), be circulated, for the purpose of eliciting opinion thereon.'

The amendment was duly seconded.

DR. H. V. HANDE: Sir, I move—

"That the Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1975 (L. A. Bill No. 51 of 1975) be referred to a Select Committee consisting of................Members of the Legislative Assembly." (List of members will be given later).

The amendment was duly seconded.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I move—

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் கொடுத்துள்ள திருத்தம் டாக்டர் ஹாண்டே கொடுத்துள்ள திருத்தம் போன்றதுதான்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: ஒரு மணியில் இந்த மசோதாவை முடிக்க முடியுமா? நிறைய பாயின்ட்ஸ் இருக்கின்றன. நாளைக்கு வைத்துக்கொள்ள முடியாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளைக்கு சட்ட அமைச்சர் ஊரில் இருக்கமாட்டார். ஆகவே இன்றே முடித்து விடலாம்.

* திரு. என். கே. பழனிசாமி: நான் திருத்தம் கொடுத்திருந்தாலும் சர்க்கார் கொண்டுவந்திருக்கக்கூடிய மசோதாவை ஆதரிக்கின்றேன். என்றாலும் சர்க்கார் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த மசோதா எந்த அளவுக்கு ஜனங்களுடைய பிரச்சினையைத் தீர்க்கும் என்பதுதான் நமக்கு முன்னுள்ள பிரச்சினை. இந்த மசோதாவின் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸில்

'The increase in the amount of tax will be expended for the slum clearance and re-development programme and for housing schemes related to low income groups.'

என்று சொல்லியிருக்கிறார்கள். இதனால் வரக்கூடிய பணத்தைக் கொண்டு என்ன என்ன காரியங்களுக்குச் செலவிட இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்? சர்க்கார் இதில் எதிர் பார்ப்பது 2 கோடி ரூபாய். கொஞ்சம் அதிகமாக வரலாம். என்றாலும் இந்த 2 கோடியை வசூல் பண்ண எவ்வளவு செலவாகும்? மீதியுள்ள பணத்தை வைத்து சர்க்கார் என்ன செய்ய முடியும்? ஏன் ஒரு காம்ப்ரிஹென்சிவ் பில்லாகக் கொண்டு வரக் கூடாது? இன்றைக்கு நடுத்தர மக்கள் ஏழை மக்களுடைய வீட்டுப் பிரச்னை பெரியதாக இருக்கிறது. ஏன் அர்பன் லாண்டுக்கு உச்ச வரம்பு கொண்டுவரக் கூடாது? ஏற்கெனவே 20 அம்சத் திட்டத்தில் நகர்ப்புற நிலத்திற்கு உச்ச வரம்பு கொண்டு வருவது பற்றி இருக்கிறது. அவசர நிலையைப் பயன் படுத்தி நகர்ப்புற நிலத்திற்கு உச்சவரம்பு கொண்டு வருவதில் எந்தவிதமான சங்கடமும் இல்லை. அதிகாரம் இருந்தும் கூட சர்க்கார் ஏன் இதைச் செய்வதற்கு முன்வரவில்லை என்று கேட்க விரும்புகிறேன்.

உதாரணமாக, இன்று சோஷியோ எக்கனமிகல் சர்வே எடுத்தார்கள். அதில் 42 பங்கு ஜனங்கள் வெளி மாநிலங்களில் இருந்து, கிராமப்புறங்களில் இருந்து இங்கே வந்து குடியேறி இருக்கிறார்கள்—1,602 சேரிகளில் இவர்கள் குடியிருக்கிறார்கள்—இங்கே பன்றிகள் கூட இருக்காது. அவர்களுடைய ஜனத் தொகை 7½ லட்சம். ஒருவரது மாத வருமானம் ரூ. 33.22. ஒரு நாளைக்கு ஒரு வேளைதான் சாப்பாடு.

1975 நவம்பர் 6] [திரு. என். கே. பழனிசாமி]

இன்னும் நடைபாதையில் 40 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். கல்யாணம், சாவு எல்லாம் அங்கேயேதான். நான்கூட ஓரிடத்திற்குப் போய் இருந்தேன். நான்கு பெண்கள் ஒரு சேலையைச் சுற்றிப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். என்ன என்றேன். பிரசவம் ஆகிறது என்றார்கள். இப்படி நடைபாதையிலேயே செத்துக்கொண்டிருக்கிற, வாழ்ந்துகொண்டிருக்கிற ஜனங்களுக்கு ஏன் நிவாரணம் கொடுக்கக்கூடிய வகையில் ஒரு காம்ப்ரிஹென்சிவ் மசோதாவைக் கொண்டுவரக்கூடாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நகர்ப்புற நிலத்திற்கு ஏற்கனவே நாம் வரி போட்டிருக்கிறோம். அந்த வரியை உயர்த்துகிற மசோதாதான் இது. உலகத்திலுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளை எல்லாம் பேசவேண்டுமென்றால் எப்படி பில் சீக்கிரத்தில் முடியும்?

திரு. என். கே. பழனிசாமி: இன்னொன்று. இந்த மசோதாவில் 2 கிரவுண்டுக்கு எக்சம்ஷன் கொடுத்திருக்கிறார்கள். ரொம்பப் பேர் 15 கிரவுண்டு, 50 கிரவுண்டு என்று வாங்கிப் போட்டிருக்கிறார்கள். இது ஒரு வியாபாரம்—கள்ளப் பணம்—இண்டஸ்ட்ரியிலே போட்டால் வருமானத்திற்கு வரி—நிலத்திலே போட்டால் வரியை ஏய்க்கலாம்—நல்ல விலை விற்கிறபோது விற்று விடுவது—இதை எல்லாம் விட்டுவைப்பது அவசியந்தானா? ஏற்கெனவே கள்ளப்பணத்தைப் பிடிக்க அதிகாரம் எங்களுக்கும் கொடுங்கள் என்று கேட்டீர்கள். இந்த அவசர நிலையைப் பயன்படுத்தி இதையெல்லாம் ஏன் கையகப்படுத்தக் கூடாது? ஒரு பக்கத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் வீடு இல்லாமல் கஷ்டப்படுவதைப் பார்க்கிறோம். இங்கே கலீலிக்கு 90 வீடுகள்—ஷரப்பாலிக்கு 100 வீடுகள்—ஆயிரக்கணக்கில் வாடகை. ஒரு சின்ன இடத்திற்குக் கூட நூறு, இருநூறு வாடகை. 50 ரூபாய்க்குக் குடிசைக்கூட கிடைக்கவில்லை. சர்க்கார் அதிகாரிகளுக்கு கண்டிரோல் வாடகையில் வீடு கொடுப்பது போல நகரத்திலுள்ள மற்றவர்களுக்கும் ஏன் வாடகைக்கு வீடுகளை எடுத்துக் கொடுக்கக்கூடாது? வேகண்டாக வாங்கிப் போட்டிருக்கிற கிரவுண்டுகளை எல்லாம் ஏன் எடுத்துக்கொள்ளக்கூடாது?

[திரு. செ. மாதவன்]

இன்னொன்று, 2 கிரவுண்டுக்கு விலக்கு கொடுத்திருக்கிறார்கள். அதுவும் தேவையில்லை. மார்க்கெட் வால்யூ 1971 என்று போடு வானேன்? 1975 மார்க்கெட் வால்யுவையே போடலாம். நான்-ரெசிடென்சியல் ஏரியாவுக்கு ½ கிரவுண்டுக்கு கொடுத்திருக்கிற விலக்கையும் எடுத்து விடலாம். அங்கேதான் அதிக வாடகை வருகிறது. இன்னும் இங்கே 0.7 சதவிகித வரி, அங்கே 0.5 சதவிகித வரி என்று தனித்தனியாக வைத்திருப்பதும் அவசியமில்லை. எல்லாவற்றுக்கும் 0.7 சதவிகிதம் என்று போடலாம். இதனால் நான்கு கோடிக்கு மேல் வருமானம் சர்க்காருக்கு வரும். இதை எல்லாம் கவனிக்க வேண்டுமென்றுதான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். என்னுடைய திருத்தத்தை ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Mr. Speaker, Sir, while moving my amendment that this Bill be referred to a Select Committee, I wish to remove certain misconceptions that are there in the minds of the Members of the Treasury Bench. Their misconception is this. Once this was brought as an Ordinance and later on brought as a Bill to replace the Ordinance, they feel, it is difficult to send it to the Select Committee. It is the misconception which is there in the minds of the Members of the Treasury Bench or Government or Officials.

My submission with regard to this is this. This means that we are consciously trying to prevent the Legislature from exercising its fundamental right by not sending this Bill to a Select Committee. If you want to prevent the Members of the Legislature from sending a Bill to a Select Committee, the best thing would be to bring in an Ordinance for all the Bills. The Ordinance is normally promulgated when the Legislature is not in session, because the Legislature has been prorogued. Since the Legislature is not in Session, the Governor has promulgated the Ordinance. I feel there is full power for the Legislature to refer...

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஆர்டினன்ஸ் வந்த பிறகு மறுபடியும் அதை ஆய்வுக் குழுவுக்கு—அதைப் பொறுக்குக் கமிட்டிக்கு—விடுவது என்பது மரபல்ல

1975 நவம்பர் 6] [டாக்டர் மு. கருணாநிதி]

என்பது ஒன்று. அதே நேரத்தில் இந்த ஆர்டினன்ஸ் வந்த பிறகு—ஹாண்டே அவர்கள் கொண்டு வந்த அந்தத் திருத்தத்தின்படி கூட—இன்று வரையில் பொதுமக்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்திருக்கிறார்கள், பத்திரிகைகளிலே எழுதியிருக்கிறார்கள். அதற்குப் பிறகுதான் திருத்தங்களோடு இந்த பில் இங்கே வந்திருக்கிறது. ஆகவே, ஹாண்டே அவர்கள் கூறுகின்ற கருத்து இதிலே அடிபடுகிறது.

DR. H. V. HANDE : I am now trying to remove that resistance. I would like to say that we should have free and frank discussion on this Bill by cutting across party lines and party affiliations because it is a very important Bill. It is a very important public matter. Let us not bother about our party affiliations. This is what I want the members of the House to do. What the Hon. Chief Minister stated has strengthened my argument for referring this Bill to a Select Committee.

In this connection, I would like to say that there is a lot of difference between the Ordinance and the Bill. That is what the Hon. Chief Minister has stated. I have gone through the Ordinance and the Bill. I am having the Ordinance on one hand and the Bill on the other hand. It is a fact that on certain facts, the Bill has been revised. This is the pedastal on which the Government wanted to think and rethink on this matter. In this connection, I would like to say that our Legislature is supreme and the Minister or the Chief Minister cannot have more to say on this. Let us give some weightage to the Members suggestion and also let us give our consideration to the opinions of the public by referring the Bill to a Select Committee.

In this connection, I would like to bring back to my memory, the incident that took place in 1965 when the Bill was first introduced when the Congress was the Ruling Party. Subsequently, several amendments to the Bill have come. When the Bill came up before the Legislature, Rajaji immediately called me and told me that I should argue on this Bill properly and if necessary, I should oppose this Bill. Because he felt that like Sales Tax,

this Urban Land Tax will also become a main source of revenue to the Government. A very small amount was levied as sales tax, but later on, this has been increased and the collection from Sales Tax has become a main source of revenue for running of the Government. Though a paltry sum was levied as Sales Tax, it has become a main source of revenue to the Government. Huge sum is derived through devolution of funds. Thus if the urban land tax is encouraged in this way, time may come, when the State has no other source of revenue and if they are not able to find any other source to levy, the Government will increase the urban land tax as it was done in the case of sales tax. Then it will become another 'Kamadhenu' for the Government. That is why, I want the State Government to study the implications in greater detail.

It has been stated in the Statement of Objects and Reasons that the increase in the amount of tax will be expended for the slum clearance and re-development programme and for housing schemes related to low income groups. There can be no two opinions on this. As far as Slum Clearance Board is concerned, there can be no two opinions. I agree that we have to spend a substantial amount. As far as this point is concerned, I always welcome such proposals. In fact, on an earlier occasion, I have said that the slums have to be remodelled and people must be given proper facilities. Therefore, there can be no two opinions on this.

As far as the spending of the amount is concerned, it will be welcomed by all the sections of the House. But with regard to methodology of spending the amount, there may be difference of opinion. In addition to the earmarking of the amount for slum clearance, we can pressurise the Central Government to grant more money. Here in the City, we are spending a substantial amount to clear the slums.

We can say this in clear cut terms and we can ask the Central Government to give more funds. We can ask them with clear plans of the Slum Clearance Board. In addition to earmarking this amount, some more funds can be obtained and more slums can be channelised.

I want to speak with reference to the difference between the Ordinance and the Bill. I would like to point out only one or two things. I wish to point out how much difference there is between the Ordinance and the Bill. The Bill is a complete change from the Ordinance. In the Original Ordinance, there has been only two parts—Part I and Part II. In the present Bill, there are four parts. The original rate was 0.7 per cent of the market value which was included for 2 grounds. Now two grounds have been given exemption. There has been substantial reduction in the rate of market value. This only substantiates my argument because it was thought necessary to reduce the amount.

As regards 16 kms. area is concerned, I would request the Hon. Chief Minister to give proper consideration to this aspect. It may be 16 kms. from Madurai, it may be 16 kms. from Coimbatore or 16 kms. from any Municipality or Township. Under this there may be some villages which may come under urban area. Even between Kanchipuram and Cheyyar, Sir, a number of villages may come under urban areas. The poor people may not be able to pay the taxes at all. They may feel the taxes heavy because they will be engaged in agriculture.

ஆகவே அவர்கள் விவசாயத்திலே ஈடுபட முடியாது.

This may include a part of the village also. In the Urban area one may have half-a-ground and build a multi-storeyed building and earn a good amount of rent. In the villages, one may not have any income, he is forced to pay but persons in urban areas owning two grounds are exempted. This is the point which I want the Government to examine. All these lacunae are there. This Bill has been drafted in a haphazard manner. This Bill has been drafted in a slipshod manner. I know there were some impediments and the Hon. Chief Minister took steps to mitigate them.

I would like to say a few words with regard to industries.

(Mr. Speaker sounded the gong)

I shall finish my speech in another five minutes. Within 16 kms. from the city, a number of industries have come up and a number of them are coming. These industries are producing a number of

valuable goods which earn a good amount of sales tax. If you see the sales tax assessment, you will find that a sum of Rs. 200 crores is derived from Sales Tax. Of that 40 to 50 per cent comes from the industries which are situated near Madras City. It contributes much to the Government. Whenever big factories are coming, they have to provide certain amenities for which a few grounds are necessary. For providing water and drainage facilities, they have to provide a few grounds. There is no provision in the Bill to provide them exemption.

In other words, we are going to tax the capital itself. So, it becomes a capital taxation. From the Urban Land Tax, it becomes a capital tax. We will be killing the goose that lays the golden egg and this is likely to happen because of this piece of legislation and I think the Hon. Chief Minister will give proper thought to this aspect of the matter.

Sir, already the industrial tariff is very high and slowly the industries are going away from our State to other States. Even the Hon. Chief Minister had stated with reference to the discussion on the film industry that some industries were going away from Tamil Nadu. So, attempts must be made to attract industries in other States to our State. Otherwise, we will be landing ourselves in a precarious position.

Then, the industries are providing underground water resources, wastage, disposal. Even for trials, they require a lot of area, railway sidings and residential areas for workers and also lands for hospitals, playground, etc. I want to know, whether this particular aspect of the matter has beeen properly examined.

Then, coming to four parts mentioned in the Bill, it is not clearly stated whether you are going to club Part I with Part III or IV. For instance, a person may be having two grounds in Madras and two or three grounds in Tambaram and how are you going to link it? There are so many lacunae in this Bill and it has not been properly drafted.

Finally, I want to know whether this Bill is going to confer social equity. But this is not a Bill to remove social inequity. Even with regard to the ceiling on urban holdings, the Hon. Chief

1975 நவம்பர் 6]

Minister has rightly stated that questions like the total valuation of a particular area has to be considered. For instance, in the Bombay City, half a ground may be worth some lakhs of rupees or even crores. In the Malabar Hill area, a six or seven storeyed building would cost crores of rupees. The ceiling on urban holding is a different matter. Theoretically speaking, the ceiling on urban holding may remove social inequity but this particular piece of legislation is definitely not going to remove social inequity. Well-to-do persons with half a ground or two grounds will continue to be rich and a poor man with 10 grounds of useless land will have to pay a fabulous amount as tax.

So, I once again make a very, very impassioned plea to the Ministry to see that this Bill is referred to a Joint Select Committee which can invite persons for giving evidence on the Bill and the Members of that Committee belonging to various parties could discuss it and bring forward proper legislation which will definitely deliver the goods. That is my submission.

MR. SPEAKER : Thiru K. M. Subramaniam......

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I have **already** given an amendment.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டும் ஒரே அமென்ட்மென்ட் தான். திரு. சுப்பிரமணியம் அவர்கள் பேசட்டும்.

• THIRU K. M. SUBRAMANIAM : Hon. Speaker, Sir, though at the time of passing the Urban Land Tax Act I opposed it, I welcome this amending Bill because this Bill saves a lot of middle class and lower class people from the payment of tax which they really cannot afford it and it is illegal to collect it from them. According to the original Act, two grounds were exempted but that exemption was removed in the case of a person owning more than two grounds and he had to pay tax for the whole extent of his land without any exemption for the first two grounds. Now the Government have seriously thought about it and have given exemption for the first two grounds. But, they have stated that if the holding is more than 5 grounds, they will collect the tax for the whole extent of land. As 90 per cent of the middle class people have four grounds or less, I suggest that four grounds and above can be taxed.

[திரு. கே. எம். சுப்பிரமணியம்]

As regards lands outside the City limits, there is the Metropolitan Development Council. Prices of lands are going to increase automatically after development takes place there. Now what will happen is that many people will buy lands at the present price in spite of the levy of the urban land tax because after 10 years due to improvements effected there, the land costing Rs. 2,500 would cost Rs. 10,000. So, the purpose of the Bill is not served at all. Even the levy of 0.7 per cent or 1.0 per cent or even 2.0 per cent is not going to stop people from speculating in places outside the 16 kilometre area. So much so, the prices of lands will be shooting up in that area.

Then, so far as the Urban Land Tax is concerned, a sum of Rs. 10 to 11 lakhs is going to be deducted as rebate for the purpose of income-tax. So, a portion of the income-tax revenue of the Central Government will be taken by the State Government in the form of urban land tax. By one stroke they are hitting the Central Government—I appreciate the brain of the person who brought forward the legislation—and also collecting the tax from the industries. I am not against taxing the industry. They should be taxed to the maximum extent. Now what is going to happen is, that the Government of India will lose definitely a portion of the income-tax because the industrialists have to pay the urban land tax.

The fourth most important point is that the increase in the amount of tax will be expended for the slum clearance programme. There are 9 lakhs of slum dwellers.

(பிற்பகல் 1-00)

The moment they come to know that the land within 16 kms. is going to be improved, prices will go up. Government may now itself say that no one should sell land above Rs. 2,000 per ground. They can even now do that so that land value will not appreciate in 10 to 15 years from now. I finally say that this urban land taxation is not a substitute for urban land ceiling. It is not a substitute for ceiling on urban properties. That is entirely

1975 நவம்பர் 6] [திரு. கே. எம். சுப்பிரமணியம்]

different. If the Government is earnest, they must bring urban land ceiling, suburban land ceiling, property ceiling etc. If price is not fixed now, it will go on increasing in coming years. If ceiling price is fixed, nobody could speculate. With these words, I conclude.

திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்னால் இருக்கும் மசோதாவைப் பற்றி என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கிற நேரத்தில் இந்த மசோதாவிலே எனக்குள்ள சில சந்தேகங்களை, அச்சங்களை, சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவதன் மூலமாக சமாதான முறையில் பேசுவதன் மூலமாக அமைச்சர் அவர்களிடத்திலிருந்து சில நல்ல முடிவுகளை எதிர்பார்க்கின்ற வகையில் இந்தப் பேச்சை ஆரம்பிக்கிறேன்.

இதன் பேரன்ட் ஆக்ட் ஆரம்பத்தில் கொண்டு வந்தபோது 0.04 சதவீதம் போடப்பட்டிருந்தது.

There was no slab system, there was no progressive taxation and there was no differentiation between residential and non-residential sites.

ஆனால், இன்றைக்கு அந்த ஸ்லாப் சிஸ்டம் ப்ரோக்ரசிவ் டாக்சேஷனை வந்திருக்கிறது. ரேட்டை அதிகப்படுத்தியிருக்கிறார்கள். ரெசிடென்ஷியல் நான்-ரெசிடென்ஷியல் என்று வித்தியாசத்தைக் காட்டியிருக்கிறார்கள். இந்தச் சட்டப்படி எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கைகளைப் பார்த்தால் எந்தக் கொள்கை சரிதானா என்பதை அமைச்சர் அவர்கள் பரிசீலித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அர்பன் லாண்ட் டாக்ஸ் பற்றி எங்களுக்குத் தரப்பட்டிருக்கும் பர்ஸ்பெக்டிவ் பிளானில் இருந்து ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எங்களுக்குக் தரப்பட்டிருக்கும் முக்கிய தஸ்தாவேஜுகளிலிருந்து சில வரிகளை மட்டும் நான் படித்துக் காட்ட விரும்புகிறேன். அதன் தலைப்பே—

Perspective Plan for Tamil Nadu—1974-84—Urban Land Development as a source of revenue

என்று போடப்பட்டிருக்கிறது. அதிலே—

Urban land taxation is a promising field for resource mobilisation. A suitable means of taxation by which a part of the unearned increment in property values may be mopped up, would not only conform to the principle of equality but would also be productive source of revenue to the State.

என்று சொல்லப்பட்டிருக்கிறது.
அதன் பிறகு,

Apart from the direct means of levying a tax on urban land there is also the possibility of revenue collections from this source in an indirect way.

It is estimated that about one lakh acres will have to be made available during the perspective plan period (1974-84) for residential use alone. This has to be undertaken by the State.

A rough estimate shows that the cost of developing a lakh of acres of land in the urban areas of the State, the value of land together with cost of development would amount to Rs. 390 crores and the total value at which the developed lands can be sold will be about Rs. 448 crores leaving a margin of Rs. 58 crores.

The undertaking of this work by the State is in agreement with the socialist principle என்று காணப்படுகிறது.

அதைப் போலவே இந்திராகாந்தி அவர்கள் வானொலிப் பேச்சில் 20 அம்சத் திட்டம் பற்றி குறிப்பிடுகிற நேரத்தில்—

" Fortunes have been made out of urban land at the Nation's expense. Speculation in land and the concentration of urban property have led to glaring inequalities and to a great deal of haphazard urban growth. Regulation is being initiated to impose ceilings on the ownership and possession of vacant land, to acquire excess land, to restrict the plinth areas of new dwelling units to socialise urban and urbanisable land " என்று சொல்லப்பட்டிருக்கிறது.

1975 நவம்பர் 6] [திரு. செ. அரங்கநாயகம்]

இந்த இரண்டு கருத்துக்களையும் வைத்துப் பார்க்கும்போது இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை மனதில் வைத்திருக்க வேண்டும். தனிப்பட்ட நபர்கள் தங்கள் குடியிருப்புக்கு அல்லது எதற்குமே பயன்படுத்தாமல் இருக்கும் நிலங்களை எல்லாம் அவர்கள் உரிமை கொண்டாடுவதில் இருந்து டிஸ்கரேஜ் பண்ணுவது அல்லது அதைத் தடுக்கின்ற முயற்சியில் இந்தச் சட்டத்தை உருவாக்க வேண்டும். விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் ஏற்கெனவே இருக்கிற தொழில் வளர்ச்சியையும், அர்பன் லாண்ட் பிராப்பர்டி தனி நபர் கையில் இருப்பதைத் தடுக்க வேண்டுமென்ற கருத்திலும் இதைக் கொண்டு வந்திருக்கிறது.

உதாரணமாக, ஒரு ஏக்கர் நிலத்தில் பங்களா கட்டிக் கொண்டிருப்பதாக வைத்துக் கொண்டால், இன்னொரு ஏக்கர் நிலத்தில் ஓர்க்ஷாப் கட்டி இருப்பதாக வைத்துக் கொண்டால் பங்களா ஓர்க் ஷாப்பாக மாறுகிற வகையில் இந்தச் சட்டம் இருக்க வேண்டுமே தவிர, ஓர்க் ஷாப் பங்களாவாக மாறுகிற வகையில் இந்தச் சட்டம் இருக்கக்கூடாது. பத்து கிரவுண்டுக்குக் கீழ் இருக்கும் ரேட்டைப் பார்க்கும்போது ரெசிடென்ஷியல் பர்ப்பசுக்காக உள்ள நிலத்திற்குப் போடப்பட்ட வரி, நான்-ரெசிடென்ஷியல் பர்ப்பசுக்காகப் போடப்பட்டுள்ள வரியை விட குறைவாக இருப்பதை வன்மையாக கண்டிக்கிறேன். சொல்லப்போனால் நான்-ரெசிடென்ஷியல் பர்ப்பசுக்கான நிலங்களுக்கு ரெசிடென்ஷியல் நிலங்களை விட அதிகமான வரி போடுவதன் மூலம் எதிர்பார்க்கின்ற தொழில் வளர்ச்சி பாதிக்கப்படும். ஆகவே, தேவையில்லாமல் வீட்டை தனி நபர்கள் நிலத்தை வைத்துக் கொண்டிருப்பதைத் தடுக்கின்ற வகையில் கொள்கை அடிப்படையில் இந்த வரியை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஐந்து கிரவுண்டுக்கு மேல் இருந்து நான்-ரெசிடென்ஷியல் பர்ப்பசுக்குப் பயன்படுத்தினால் வரி உண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். அல்லது, இரண்டும் கலந்திருந்தால் நான்-ரெசிடென்ஷியல் பர்ப்பசுக்கு ஒரு பகுதியைப் பயன்படுத்தினால் வரி அதிகமாகி விடுகிறது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1975 நவம்பர் 6

கோவை நகரத்திலும், சேலம் நகரத்திலும் பெரும்பாலான நெசவாளர்கள் இருக்கிறார்கள். வீடுகளிலேயே நெசவு செய்கிறார்கள். அதிலே அவர்கள் தறிகளைப் போட்டு நெய்து கொண்டிருக்கும் இடங்களைப் பார்த்தால் ஒரு அறை சமையலறையாக இருக்கும், மீதிப் பகுதி நான்-ரெசிடென்ஷியலாக இருக்கும். இந்தச் சட்டம் அவர்களைப் பாதிக்குமா? பாதிக்கும் என்றால் அவர்களுக்கு விதிவிலக்கு தர அமைச்சர் அவர்கள் முயலுவார்களா?

பள்ளிக்கூடங்கள் என்று வருகிறபோது விதிவிலக்கு தந்திருக்கிறார்கள். ரெகக்னைஸ்டு பை தி கவர்ன்மெண்ட் என்று சொல்லியிருக்கிறார்கள். கோவை நகரத்திலும் சென்னையில் மற்ற இடங்களிலும் சென்ட்ரல் எஜுகேஷன் போர்டால் அங்கீகரிக்கப்பட்ட ஹையர் செகன்டரி பள்ளிகள் நிறைய இருக்கின்றன. அந்தப் பள்ளிக்கூடங்களின் அதிக்கத்தில் உள்ள நிலங்களுக்கு வரி விலக்கு இல்லை என்பதுபோல் இருக்கிறது. 'கவர்ன்மென்ட்' என்று சொல்லுகிறபோது 'போத் சென்ட்ரல் அண்டு ஸ்டேட்' என்று இருக்குமானால் அந்தக் குறைபாடும் போய்விடும். இத்தகைய விதிவிலக்கைத் தருவதோடு கைத்தறி நெசவாளர்கள், சாதாரண சிறு தொழில், குடிசைத் தொழில் செய்கிறவர்களுக்கும் விதிவிலக்கு தரவேண்டும்.

குறிப்பாக, இரண்டு கிரவுண்டுக்குக் கீழ் இருப்பவர்களுக்கு விதிவிலக்கு தருவதன் மூலம் இந்த எண்ணம் நிறைவேறும். இவையும் அமைச்சர் அவர்கள் பரிசீலித்து இன்றைக்கு முடிவு தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, நகர்ப்புற சொத்துவரி மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று ஒருசில காரணங்களுக்காகத் தான் நானும் ஒரு திருத்தத்தைக் கொடுத்தேன். நகர்ப்புறச் சொத்துக்கு வரி விதிப்பதிலே ஒன்றரை அல்லது இரண்டு ஆண்டுகளாக பல முறை மாற்றிக்கொண்டு வந்திருக்கிறார்கள். இதை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பினால் எப்படி சரியான முறையில் வரிகளைப் போடுவது என்று முடிவு கட்டுகின்ற சூழ்நிலை ஏற்படும். கனம் முதலமைச்சர் அவர்கள், இது அவசரச் சட்டமாக,

1975 நவம்பர் 6] [திருமதி த. ந. அனந்தநாயகி]

வந்த பிறகு, பல பேர் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள், அதுவே போதும் என்று சொன்னார்கள். பல பேர் கருத்துக்களுக்கு அரசாங்கம் தன் முழு கவனத்தையும் செலுத்தியிருக்க முடியாது. பொறுக்குக் குழு என்றால், மேல்சபை அங்கத்தினர்கள், சட்டசபை அங்கத்தினர்கள் அதிலே அங்கம் வகிப்பார்கள். மக்கள் குறைகள் என்ன என்று சொல்ல முடியும்.

Then they can apply their minds to these points.

போஸ்டில் பல மகஜர்கள், மனுக்கள் வந்திருந்தாலும் அதையெல்லாம் வாங்கி தொட்டியில் போட்டாலும் யாரும் பார்க்க முடியாது. பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பினால் நியாயம் இருக்கிறதா என்று பார்க்க வசதியாக இருக்கும்.

இந்தச் சட்டத்தை இன்றைக்கு திருத்திக் கொண்டு வந்திருப்பது நகரத்தில் இருக்கும் மேடுபள்ளத்தை நிரப்ப வேண்டும். சமதர்ம சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற 20 அம்சத் திட்டத்தில் ஒன்றாகக் கொள்ள முடியாது. ஏனென்றால் 20 கிரவுண்டுக்கு மேல் இருக்கக்கூடியவர்களுக்கு 2.5 பெர்சன்ட் வரி போட்டிருக்கிறார்கள். இருபது கிரவுண்ட் நிலம் ஒருவருக்கு இருந்துதான் தீரவேண்டுமா? இரண்டு கிரவுண்ட், மிஞ்சினால் நான்கு கிரவுண்ட் போதாதா? அதற்குப் பிறகு படிப்படியாக 1, 1½, 2, 2½ சதவிகிதம் என்றுதான் போட்டிருக்கிறார்கள். இவ்வளவு நெருக்கடி இருக்கும்போது ஒரு ஆள் 20 கிரவுண்ட் வைத்துக் கொண்டு தான் ஆக வேண்டுமா? நான்கு கிரவுண்டுக்கு மேல் இருந்தால் கையகப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால்

put it as cent per cent.

இன்றைக்கு ரெசிடென்ஷியலுக்கு 10 கிரவுண்ட், 20 கிரவுண்ட், 50 கிரவுண்ட் என்பது அவசியம் கிடையாது. உண்மையில் நீங்கள் பணக்காரர்களுக்குச் சலுகை கொடுக்கக்கூடிய வகையிலே தான் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்களே தவிர, சமதர்ம சமுதாயத்தை அமைக்கும் சட்டத்தையா கொண்டு வந்திருக்கிறீர்கள்?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): அம்மையார் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன் சொன்னார்கள். இந்தச்

சட்டத்தைக் கொண்டு வந்து கொல்லோகொல்லு என்று வரி போடப்போகிறார்கள் என்று சொன்னார்கள். இப்போது போடப் பட்டிருக்கிற வரி போதவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த அரசாங்கம் கொல்லோகொல்லு என்று கொல்லவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: நீங்கள் வரி போடவில்லை என்று சொன்னீர்கள். அப்படிச் சொல்லாதீர்கள். வரி போடு கிறீர்கள், அதை ஒத்துக் கொள்ளவேண்டும் தைரியமாக. ஸ்டேட் மென்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீஸன்ஸில் to augment the resources of the State என்றிருக்கிறது. வேண்டிய வரிகளைப் பெற்றுக்கொள்ள இதை கொண்டு வந்திருக்கிறீர்கள். ஸ்டேட்மெண்டிலேயே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரமாகிவிட்டது.

திருமதி த. ந. அனந்தநாயகி: நீங்கள் கொஞ்சம் நியாயமாக இருக்க வேண்டும். இப்போதுதான் பேச ஆரம்பித்திருக் கிறேன். ஆரம்பிக்கும் முன்னரே இப்படிச் சொன்னால் எப்படி? இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறேன். பேசாதே என்று சொல் கிறீர்களா?

You want to discourage me. That is not fair. You have allowed 25 minutes to Dr. Hande.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று நீங்கள் எவ்வளவு நேரம் பேசியிருக்கிறீர்கள் என்று மொத்த நேரத்தைப் பாருங் கள். கே. எம். எஸ். பேசினார். ஐந்து நிமிடங்கள் கொடுத்தால் போதும் என்று சொன்னீர்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நான் நகரப் பிரதிநிதி. நான் பேசாமல் எப்படி முடியும்? இந்தச் சர்க்கார் பாம்பை பாதி அடித்ததுமாதிரி செய்திருக்கிறார்கள். இதனால் நன்மையும் இல்லை. தீமையும் இல்லை; நீங்களும் போட்டீர்கள், நாங்களும் போடுகிறோம் ஏற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்கிறீர்கள். நகர்ப்புறங்களில் யாருக்கும் நான்கு கிரவுண்ட்ஸுக்கு மேல் இருக்கக்கூடாது. பெரிய பங்களா கூட நான்கு கிரவுண்ட்ஸ்க்கு மேல் போகாது.

1975 நவம்பர் 6] [திருமதி த. ந. அனந்தநாயகி]

ஆகவே, நான்கு க்ரவுண்ட்ஸ்க்கு மேல் உள்ளவற்றை முழுசாக எடுத்துக் கொள்ளுங்கள் அல்லது செண்ட் பெர் செண்ட் வரி போடுங்கள்.

தொழில் அதிபர்கள் பல ஏக்கராக்களை வளைத்துப் போட்டிருக்கிறார்கள். ஒரு கமிட்டி போடுங்கள் என்று சொல்லி வந்திருக்கிறோம். 300 ஏக்கர்கள் வைத்திருக்கிறார்கள். தொழிற்சாலைகளை பின்னால் விஸ்தரிக்கவேண்டும் என்ற அவசியம் இருந்தால் எவ்வளவு தேவைப்படும், அதற்கு மேல் இருப்பது அவசியமா என்று பார்க்க ஒரு கமிட்டி போட்டு தயவுதாட்சண்யம் இல்லாமல் அதற்கு மேல் உள்ளவற்றை எடுத்துக்கொள்ளுங்கள். அப்படியின்றி அவர்களுக்கும் வரி போட்டால் கொடுக்கிறார்கள். தொழில் அதிபர்களுக்காக நான் பேசத் தயாராக இல்லை. லாபம் வந்தாலும் நஷ்டம் வந்தாலும் அது உங்கள் பொறுப்பு. அண்டை மாநிலங்களில் இந்த வரி உண்டா—இல்லையா? தொழில்கள் பறந்து போய்விடும். பங்களூருக்கு சினிமாத் தொழில் போய் விட்டது என்று சொன்னார்கள்.

இங்கு என்டெர்டெயின்மெண்ட் டாக்ஸ் ஹையஸ்ட், எலெக்ட்ரிசிட்டி டாரிப் ஹையஸ்ட், எல்லாம் ஹையஸ்ட். திருவொற்றியூர், அம்பத்தூர் 14 கிலோ மீட்டருக்குள் வந்துவிடும். இங்கு தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் கொடுக்கக்கூடிய சக்தி கிடையாது. அவர்கள் தண்ணீரைக் கண்டுபிடித்துக் கொண்டுவரவேண்டும். சேல்ஸ் டாக்ஸ் ஹையஸ்ட். அண்டை மாநிலங்களில் இந்த வரி இல்லை என்று—தொழில் அதிபர்கள் ஒரு நயா பைசா லாபம் இருந்தாலும் எந்த மாநிலம் என்று கவலைப்படமாட்டார்கள். எந்த மாநிலத்திற்கும் ஓடத் தயாராயிருப்பார்கள். எங்கு போனாலும் தொழில் அதிபர்களுக்கு நஷ்டம் இல்லை. அவர்கள் சொத்து பத்து தலைமுறைகளுக்குத் தாங்கும்.

தொழிலாளர்களுக்கு உத்தரவாதம் தாருங்கள். இந்த வரியின் காரணமாக எந்தத் தொழிலும் தமிழ்நாட்டை விட்டு வெளியே ஓடாது, அப்படி ஓடினால் இன்று சக்தி பைப்ஸ்-யை எடுத்துக்கொண்டமாதிரி உடனே எடுத்துக்கொள்வோம். அந்தத் தொழிலாளர்களுக்கு தொழில்வாய்ப்பு கொடுப்போம் என்று சொல்லுங்கள், தாராளமாக அந்த வரியை ஏற்றுக்கொள்ளத்

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1975 நவம்பர் 6

தயாராயிருக்கிறோம். இந்த வரி போடுவது சமதர்மக் கோரிக்கைகளை நிறைவேற்றுவது மாதிரி இல்லை. ஏதோ அப்போதைக்கப் போது தேவைப்படுகிற பணத்தைப் பெறுவது—லாட்டரிச் சீட்டை விட்டுவிட்டோம், இதைப் பிடித்தாகிவிட்டது. குடிசை மாற்று வாரியத்திற்கு பணம் தேவைப்படும் என்று சொன்னார்கள். நான்கு கோடி ரூபாய் வரப்போகிறது. குடிசை மாற்று வாரியத்துக்கு 17 கோடி ரூபாய் தேவை என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதுவரை 17 கோடி ரூபாய் தேவைப்பட்டதாகச் சொன்னார்கள். ஆண்டுக்கு நான்கு கோடி ரூபாய் குடிசை மாற்று வாரியத்துக்குப் போதும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அன்று அவர்கள் சொன்னார்கள், 17, 18 கோடி ரூபாய் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏதாவது சொல்லிவிட்டு போய் பிரசாரத்திற்குப் பயன்படுத்துவது. உடனே உட்கார்ந்து விட்டு சிரிப்பது, அதை யாராவது ரசிக்கிறார்களா என்று பார்ப்பது, இது சட்டமன்ற மரபாகாது. 17 கோடி ரூபாய் என்றால் இதுவரை குடிசைமாற்று வாரியத்திற்காகச் செலவழிக்கப்பட்ட தொகை, வருடத்திற்கு அல்ல.

திருமதி த. ந. அனந்தநாயகி: கிண்டல் பண்ண வேண்டாம். எங்களுக்கும் பொறுப்பு இருக்கிறது. எங்களுக்கும் பேசத் தெரியும். அன்று குடிசைமாற்று வாரியத் தலைவர் அவர்கள் சொன்னார்கள் 17, 18 கோடி ரூபாய் செலவழித்துக் கொண்டிருக்கிறோம் என்று. இன்று நகரில் உள்ள சேரிகளை எல்லாம் சுத்தப் படுத்தவேண்டுமென்றால் 17 கோடி அல்ல அதற்கு மேலும் தேவைப் படும். இதன் மூலம் பெற இருப்பது நான்கு கோடி ரூபாய். இதை அதிகரிக்க வாய்ப்பிருக்கிறது. இதில் ஒரு அபாயம் இருக்கிறது. முனிசிபாலிட்டிகளுக்கு விஸ்தரிக்கலாம். தங்களுக்குப் பிடிக்காத தொகுதியாக இருந்தால், பாங்கிமலையை எடுத்துக்கொண்டால் 16 கிலோ மீட்டர்ஸ் இருக்கிறது, அதுவரை நீட்டித்து அதற்கும் போடு என்று தாராளமாகக் கொண்டு வரலாம். இதில் எக்கச்சக்கமான ஓட்டைகள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் 100 முனிசிபாலிட்டிகள் இருக்கின்றன. அவற்றை

1975 நவம்பர் 6] [திருமதி த. ந. அனந்தநாயகி]

யும் சேர்த்து விட்டால் என்னவது? நோட்டிபிக்கேஷனில் எக்ஸ் பான்ட் செய்ய எல்லாவிதமான அதிகாரமும் இருக்கிறது. ஆகவே இந்த அர்பன் லான்ட் டாக்சை எவ்வளவு தூரம் போட்டால் யார் யாரைப் பாதிக்கும், சிறிய தொழில்களைப் பாதிக்குமா அல்லது பெரிய தொழில்களைப் பாதிக்குமா என்பதைப் பற்றி யெல்லாம் நல்லமுறையில் ஆராய்ந்து பார்க்க தயவு செய்து இந்த மசோதாவை ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு விடுங்கள். வரி அதிகமாக வேண்டுமானால் அதைத் தேடிக் கொள்ளவும் வழி இருக்கிறது. அதைப் புத்திசாலித்தனமாகச் செய்யலாம். ஆகவே, பொறுக்குக் கமிட்டிக்கு விடுங்கள் என்று சொன்னேன். இல்லை என்றால் சரி.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்தளவிற்கு பல்வேறு உறுப்பினர்கள் பல் வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். ஒவ்வொரு கருத்தையும் சொல்லச் சொல்ல எவ்வளவு கருத்து வேறுபாடு தன்னாலே வருகிறது என்பதையும் பார்த்தோம்.

இது ஒரு வருமானம் தருகிற அல்லது ஒரு வரி போடுகிற முறை என்ற முறையிலே பல்வேறு சங்கடங்கள் ஏற்படும் என்பதை அவர்கள் சுட்டிக்காட்டுவதுபோல்தான் தோன்றியதே தவிர வரி போடக்கூடாது என்று யாரும் சொன்னதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே, இந்த வரியைப் பொறுத்தளவிற்கு இது ஒரு புது வரியும் அல்ல. இந்த அரசு வந்ததற்குப் பின்னால் போட்ட வரியும் அல்ல. ஏற்கெனவே போட்ட வரிதான். நாங்கள் கொண்டு வந்திருக்கிற ஒரு புதுமை, ஒரு பிரச்சினை, ஒரு அம்சம், இந்தச் சட்டத்தில் வருமானம் அதிகமாக உள்ளவர்கள் நகர்ப்புறத்தில் இருப்பார்களானால் அவர்களுக்கு வரி விகிதங்கள் அதிகமாக இருக்க வேண்டும் என்பதுதான். ஆகவே அது சாதாரண ஆள்களைப் பாதிக்காது என்று நான் கருதுகிறேன்.

இந்த வரியைப் பொறுத்த அளவிற்கு இதை ஒரு ஆய்வுக் குழுவிற்கு அனுப்பவேண்டும் அல்லது பொதுமக்களின் கருத்தை அறிந்து செயல்படுத்த அனுப்ப வேண்டும் என்ற கருத்துக்கள் எல்லாம் எதற்காகச் சொல்லப்பட்டது என்பதை இங்கே

விளக்கிச் சொல்லியாகிவிட்டது. அதற்கு மேலே பொதுமக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது இந்தத் திருத்த மசோதா ரொம்ப ஆழ்ந்த முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது, நான்கு க்ளாரிபிகேஷன்ஸ் நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப் பட்டுள்ளது என்று இடையிடையே அவர்கள் அப்படி பில்லில் போட்டிருப்பதை எல்லாம் பாராட்டிக் கூறியதைப் பார்த்தேன்.

இந்த மசோதாவைப் பொறுத்த அளவிற்கு இதனால் ஏழைகள் பாதிக்கப்படமாட்டார்கள். நடுத்தர மக்களுக்கு இரண்டு க்ரவுண்ட்களுக்கு மேல் இருக்க முடியாது. பெல்ட் ஏரியாவைப் பொறுத்து மூன்று க்ரவுண்ட்களுக்கு மேல் இருக்க முடியாது. ஆகவே, நடுத்தர மக்களும் இதனால் பாதிக்கப்பட மாட்டார்கள். ஆகவே, வசதி உள்ளவர்களை இந்த வரி பாதிக்கலாம். அது நியாயம் என்ற கருத்தில் வாதாட வேண்டும்.

இந்த அரசு வந்த பிறகு தொழிலதிபர்களுக்கு அல்லது தொழிற்சாலைகளுக்கு உயர்ந்த வரி போடப்பட்டிருப்பதாக இங்கு சொல்லப்பட்டது. அதைக் கேட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அதனால் அவர்கள் வேறு மாநிலங்களுக்கு ஓடி விடுவார்களோ, ஆளும் காங்கிரஸ் கட்சி அதிகாரத்தில் இருக்கிற அந்த மாநிலத்தில் உங்களைப் போல் தீவிரமான வரி போடாமல் இருப்பதால் அந்த மாநிலத்திற்கு அவர்கள் ஓடிவிடுவார்களோ என்ற சந்தேகம் இங்கு கிளப்பப்பட்டது. அப்படி ஓடிவிட்டால் என்ன செய்யவேண்டும் என்ற ஆலோசனையும் கூறப்பட்டது. இப்படி நம் ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களே பேசியிருக்கிறார்களே, ஆகவே திராவிட முன்னேற்றக் கழக அரசு போல் நாமும் வேகமாகச் செயல்படுவோமே. இந்தப் புதுமையான முறைகளை அல்லது வரிகளை நாமும் போடுவோமே என்று—எங்க ஊர் தொழிற்சாலை அவர்கள் மாநிலத்திற்குப் போனாலும் சரி, படம் எடுப்பதற்குப் போனாலும் சரி, படம் எடுப்பதாகச் சொல்லிப் போனாலும் சரி—புது வரி போட நாமும் முன்வர வேண்டும் என்று அவர்கள் எல்லாம் விரைவில் முன்வர இந்த ஆலோசனை மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

1975 நவம்பர் 6] [திரு. செ. மாதவன்]

இந்த வரியைப் பொறுத்தளவிற்கு இது யாரைப் பாதிக்கிறது என்பதை எதிர்க்கட்சிகளிலிருந்து வருகிற வாதத்தில் இருந்து புரிந்துகொண்டோம். இதில் ஒரு தீவிர வாதம் இருக்கிறது. மத்திய அரசைப் பொறுத்தவரையில் ரொம்பத் தீவிரமாகப் பேசுவது நல்லதல்ல என்று சொல்லி வருகிறார்கள். ரொம்பத் தீவிரம் எது என்று எனக்குத் தெரியவில்லை. பழனிசாமி அவர்கள் ரொம்பத் தீவிரமாகப் பேசினார்கள். இந்த அரசைப் பொறுத்த வரையில் மத்திய அரசு சொல்வதுபோல் ரொம்பத் தீவிரமாகப் போகக்கூடாது என்று சொல்வதில் நம்பிக்கை இல்லாத அரசு. பழனிசாமி எதிர்பார்க்கிற ஒரு கால கட்டம் வந்து நாட்டில் உள்ள பெரும் பெரும் பணக்காரர்களுக்குள்ள சொத்துக்களை எல்லாம் பிடுங்கிடவேண்டும் என்று அவர்கள் சொன்னதுபோல், பெரிய பெரிய பணக்காரர்களின் சொத்துக்களைப் பிடுங்கி அதற்கு பணம் கொடுக்கக்கூடாது என்ற கட்டாயம் வருமேயானால் அந்த நேரத்தில்—சில நேரங்களில் மத்திய அரசு சொல்வதை எதிர்ப்ப தாகச் சொல்வார்கள், சில நேரங்களில் இப்போது தொடர்பு இருப்பதால் ஆதரிப்பதாகச் சொல்வார்கள்—அப்படிப்பட்ட ஒரு நிலையை மத்திய அரசு எடுக்குமானால் அதை நாங்கள் ஆதரிப் போம் என்று பழனிசாமி அவர்களுக்கு சொல்லிக்கொள்கிறேன்.

ஆக, எப்படி ஒரு முடிவை டெல்லி அரசாங்கம் எடுத்தாலும், அந்த டெல்லி அரசாங்கம் சமதர்ம சமுதாயத்தை ஏற்படுத்து வதற்காக, டைரக்டிவ் பிரின்சிபிளில் சொல்லப்பட்டு இருப்பதை எந்த அளவுக்குத் தீவிரப்படுத்த முடிவு எடுத்தாலும் அதை முதன் முதலாக நிறைவேற்றும் அரசாங்கம் திராவிட முன்னேற்றக்கழக அரசாங்கமாகத்தான் இருக்கும். ஏதோ சொத்துள்ளவர்களுக்கு பயந்து கொண்டு வாதாடும் நிலை இந்த அரசாங்கத்திற்கு என்றுமே ஏற்படாது. சொத்துள்ளவர்கள் பக்கத்திலுள்ள மாநிலத்திற்கு ஓடிப் போவார்கள் என்ற கருத்து இங்கே பேசப்பட்டதைப் பார்த்தோம். ஆனால் சொத்து இல்லாத சோசலிசம் கொண்டுவர விரும்புகிறோம் என்று அவர்கள் கட்சித் தலைவர் பேசுவதையும் பார்க்கிறோம்.

பல மாநிலங்களில் பலமாதிரி வருகிறது. எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையில், சமதர்ம நிலையில் எந்த முயற்சியை டெல்லி அரசாங்கம் கொண்டு வந்தாலும், அதை நிறைவேற்று

வதற்குத் தயாராக இருக்கிறோம் என்று நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த அடிப்படையில் நண்பர் பழனிசாமி அவர்கள் சொன்னதை ஆதரிக்கிறேன்.

வரி போடுவதோடு நாம் விட்டு விடவில்லை. வரி போடுவது நம் கையில் இருக்கிறது. நாம் செய்து இருக்கிறோம். நகரத்திலுள்ள சொத்துக்களுக்கு வரி போடுவதற்கு நம்முடைய அரசாங்கத்திற்கு இருக்கும் அதிகாரத்தை நாம் பயன்படுத்துகிறோம். அடுத்த கட்டம், நகர்புறத்தில் இல்லாமல், சொத்து வைத்து இருக்கிறவர்கள்—யாருக்கும் பயன்படாமல் வைத்து இருக்கும் மனைகள், விலை ஏறுமா, விற்கலாமா என்று பார்த்துக்கொண்டிருப்பவர்கள்—அந்த நிலையை ஒழித்து, அவர்களிடத்தில் இருக்கும் சொத்துக்களை எல்லாம் கையகப்படுத்தி, நகர்ப்புறச் சொத்துக்கு உச்சவரம்பு கட்டக்கூடிய நிலையை மத்திய அரசாங்கம் செய்யவேண்டுமென்று பல ஆண்டுகளுக்கு முன்னாலே இந்த அரசாங்கத்தின் சார்பில் நாமே கேட்டு இருக்கிறோம். உடனடியாக அந்தச் சட்டத்தைக் கொண்டு வாருங்கள். அந்தச் சட்டம் அகில இந்திய அளவில் இருந்தால், சொத்து வைத்து இருப்பவர்கள் பெங்களூரில் வைத்து இருந்தாலும் அங்கே ஓடிப் போக முடியாது, அங்கே செல்லும் நிலைமை இருக்காது. இப்படி நிலைமை ஏற்படுமானால், அகில இந்திய அடிப்படையில் சொத்துக்கு வரம்பு கட்டும் கொள்கை நிறைவேற்றப்படுமானால், அதைத் தீவிரமாகச் செயல்படுத்தவும் அரசாங்கம் ரொம்ப வேகமாக இருக்கிறது என்பதை அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாதாரண தொழில்கள் நடத்துபவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள். நான்-ரெசிடென்சியலாக ½ கிரௌண்டுக்கு மேல் வைத்துக்கொண்டு சாதாரணமானவர்கள் தொழில் நடத்த மாட்டார்கள். அதைப்பற்றி பயப்பட வேண்டாம். தொழில் நடத்துகிறவர்கள் அதிக வரி கட்டக்கூடாது என்ற கொள்கை இருக்கக்கூடாது. தொழில் நடத்துவதால் அவர்களுக்கு வருமானம் அதிகம் வருகிறது. ஆகவே, அப்படிப்பட்ட கொள்கையில் கொண்டு வந்து இருக்கிறோம். இதைப் பற்றி கவலைப்பட வேண்டியது இல்லை என்று கருதுகிறேன்.

1975 நவம்பர் 6] [திரு. செ. மாதவன்]

இந்த வரி போட்டதினால் மத்திய அரசாங்கத்தின் வருமான வரி பாதிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். இங்கே வாதாடுவது தமிழ் நாட்டு அரசுக்கு வாதாடுவதா அல்லது மத்திய அரசாங்கத்திற்கு வாதாடுவதா என்று தெரியவில்லை. நாம் யாருக்காக வாதாடுகிறோம் என்பதைச் சிந்திக்கவேண்டும்.

இந்தச் சட்டம் 1963-ம் ஆண்டிலே கொண்டுவரப்பட்டது. அப்போது அந்தச் சட்டத்திற்கு ஆதாரவாக இருந்தவர்கள் இப்போது இந்தச் சட்டத்திலே கூடுதல் வரி விதிக்கிறார்களே என்று பேசுவதைப் பார்த்தால் நமக்கு விசித்திரமாக இருக்கிறது. கொள்கை அளவில் இது நல்ல கொள்கை என்று ஏற்றுக்கொண்டு செயல்படுவார்களானால், இந்தப் புதிய திருத்தத்தைப் பொறுத்த அளவிற்கு நடுத்தர மக்கள், ஏழை மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்ற நிலைமையில் நாம் கொண்டு வந்து இருக்கிறோம்.

தொழில்களைப் பொறுத்தவரையில் ஏதோ கொடுமைப்படுத்துகிறோம் என்று குறைப்பட்டுக்கொண்டார்கள். அதற்கு ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். 15 லட்சம் ரூபாய் வருமானம் வரக்கூடிய தொழிற்சாலைக்கு 60,000 ரூபாய் தான் இந்த வரி வரும். 75 லட்சம் வருமானம் வரக்கூடிய தொழிற்சாலைக்கு 1 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய் தான் வரும். ஆகவே, இதிலே பெரிய அளவுக்கு தொழில்கள் நசித்து விடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். நமக்கு வருமானம் கூடுவது நியாயம் என்பதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. ஆகவே, நகர்ப்புற வரியைப் பொறுத்த அளவிற்கு வருமான வரி பாதிக்கும் என்ற கருத்தை நான் ஆதரிக்க விரும்பவில்லை. அதில் ஒரு பகுதி நம்முடைய வருமானத்தைப் பெருக்க சூழ்நிலை இருக்கிறது என்று இன்னும் அழுத்தமாகச் சொல்லியிருந்தால் வரவேற்று இருப்பேன்.

ஆண்டுக்காண்டு விலைவாசி ஏறிக்கொண்டு போவதால், வரி போட்டதால் சிரமம் ஏற்படும் என்று நான் கருதவில்லை. இதை குறை சொல்வதற்காகச் சொல்லமாட்டேன். நாடு போகின்ற சூழ்நிலையில் இது போன்ற வரி உயர்வால், சமத்துவ சமுதாயத்தை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லி. இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி அவர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியோடு, திரும்பப் பெறப்பட்டது.

டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு, 1975-ம் ஆண்டு, நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 51/75) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 2 சட்ட முன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்"

THIRU N. K. PALANISAMY : Sir, I move the amendment standing in my name, namely :—

In Clause 2, under the first proviso to the proposed new Section 1-A, for the words and figures "1st day of July 1971", substitute the words and figures "1st day of November 1975."

The amendment was duly seconded.

திரு. என். கே. பழனிசாமி : சபாநாயகர் அவர்களே, முதலில் இருக்கும் சட்டத்தில் 1963-ம் ஆண்டில் என்ன மார்க்கெட் வால்யூ இருந்ததோ அந்த அடிப்படையில்தான் வரி போடப்பட்டது. இப்போது கொண்டு வந்து இருக்கும் மசோதாவில் 1971-ம் ஆண்டு மார்க்கெட் வால்யூ அடிப்படையில் வரி விதிப்பதாக இருக்கிறது. இப்போது நான் கொடுத்து இருக்கும் திருத்தத்தை ஏற்றுக் கொண்டால் 1971-75-ம் ஆண்டிற்கிடையில் பல மடங்கு விலை ஏறி இருக்கிறது, ஆகவே, ஜாஸ்தியாக அரசாங்கத்திற்கு வருமானம் வரும்.

நான் எல்லா வீடுகளையும் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லவில்லை. அர்பன் சீலிங் என்று வந்தால், 20 கிரௌண்ட், 30 கிரௌண்ட் என்று வைத்துக்கொண்டு வியாபாரம் செய்யக் கூடியவர்களிடமிருந்து அதை ஏன் எடுத்துக் கொள்ளக்கூடாது

என்பதாகும். இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரையில், 1975-ல் உள்ள மார்க்கெட் வால்யூ என்று எடுத்துக்கொண்டால் நல்லது. ஆகவே, இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, ஏற்கனவே இருக்கின்ற சட்டப்படி 1963-ம் ஆண்டு மதிப்பு எடுத்துக்கொண்டு இருக்கிறோம். 1971-ம் ஆண்டு இப்போது எடுத்துக்கொள்கிறோம் என்று சொன்னால், 8-9 ஆண்டுகள் கழித்து உள்ள மதிப்பை ஒட்டி வரி போடுகிறோம். அதனாலேயே நமக்கு அதிக வருவாய் வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள் 3, 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

பிரிவு 5.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— "பிரிவு 5 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பட வேண்டும்".

THIRU N. K. PALANISAMY: The House has already rejected my previous amendment. That is why I am not moving the amendment to this clause.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்த நகர்ப்புற நிலவரி போடுகின்றபோது, ஏற்கனவே அதிலே இருந்து 3 கிரௌண்ட்டுக்கு விதிவிலக்கு உண்டு, அதற்கு மேல் உள்ளதற்கு வரி உண்டு என்று இருக்கிறது. பெல்ட் ஏரியாவைப் பொறுத்த வரையில், 7 கிரௌண்ட் அதற்கு மேல் உள்ளவர்களுக்கு வரி விதிக்கவேண்டுமென்று இருக்கிறது. முதல் 3 கிரௌண்ட் எக்சம்ஷன் அதில் வரவில்லையே, அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்களா?

(பதில் இல்லை)

பிரிவு 5, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள் 6 முதல் 12 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 13.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி— "பிரிவு 13 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக **ஆக்கப்பட** வேண்டும்".

THIRU N. K. PALANISAMY: Sir, I move the following amendment:

In Clause 13, in sub-clause (i) (a) of the proposed New Section 29-A, for the words "two grounds" substitute the words "one ground".

The amendment was duly seconded.

திரு. என். கே. பழனிசாமி: சார், இப்போது கிரௌண்ட் (60-க்கு 40-ன்) விலை கிட்டத்தட்ட ரூ. 50,000 ரூ. 60,000 என்று இருக்கிறது. ஆகவே, ஒரு கிரௌண்ட்டுக்கு விதிவிலக்கு கொடுத்தால் போதும். அதற்கு மேல் இரண்டு கிரௌண்ட்ஸ்க்கு விதிவிலக்கு கொடுத்து இருக்கிறார்கள். அது தேவையில்லை. சாதாரணமாக ரூ. 15,000 டர்ன் ஓவர் உள்ள வியாபாரமாக இருந்தாலே, வருமான வரி கட்ட வேண்டியிருக்கிறது. ரூ. 50,000 கிரௌண்ட் விலை இருக்கும்போது ஏன் அதை ஒரு கிரௌண்டுக்குக் குறைக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இங்கே டவுன் பிளானிங்படி கட்டினால் இரண்டு கிரௌண்ட் தேவைப்படும். ஆனால் நான் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், 4 கிரௌண்ட் வைத்து இருக்கிறவர்களுக்கு 100-க்கு 100 வரி போடுங்கள். ரொம்பப் பெரிய பணக்காரர்கள், அதிக நிலங்களை வாங்கி வைத்துக்கொண்டு, ரியல் எஸ்டேட் மூலமாக எப்போது விலையேறும் விற்கலாம் என்று பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

1975 நவம்பர் 6]

ஆகவே, அரசு 4 கிரௌண்ட்டுக்கு மேல் வைத்துள்ளவர்களுக்கு வரி போடவேண்டும். 100-க்கு 100 சதவிகிதம். அதற்கு ஏன் அரசாங்கம் தயக்கம் காட்டுகிறது என்று கேட்கிறேன்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, திரு. கே. எம். சுப்பிரமணியம் பேசியதைக் கேட்டோம். திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசியதையும் கேட்டோம். இருவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள். என்னைப் பொறுத்தவரையில் திருமதி அனந்தநாயகி சொன்னதை ஆதரிக்கிறேன். அதிகமாக நகர்ப்புறச் சொத்து வைத்திருப்பவர்களிடம் அப்படியிருக்கக்கூடாது அதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அவர் டில்லிக்குச் சொல்லி, நாளைக்கே சட்டம் கொண்டு வரச்சொன்னால், அதற்கு மறு நாள் நான் எடுத்து விடுகிறேன். (சிரிப்பு).

திரு. என். கே. பழனிசாமி அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 13, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள் 14 முதல் 16 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 51/75) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது.

7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

212. Notification issued in G.O. Ms. No. 2873, Home, dated the 26th December 1974, in regard to certain amendments to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

213. Notification issued in G.O. Ms. No. 972, Home, dated the 30th May 1975, in regard to an amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

214. Notification issued in G.O. Ms. No. 1103, Rural Development and Local Administration, dated the 4th July 1975, in regard to an amendment to the Surcharge and Disallowance Rules. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

B. Reports, Notifications and Other Papers

118. Notification issued in G.O. Ms. No. 359, Transport, dated the 28th July 1975 in regard to date of coming into force of the Indian Ports (Tamil Nadu Amendment) Act, 1975.

119. Notification issued in G.O. Ms. No. 360, Transport, dated the 28th July 1975 in regard to appointment of Officers to be the Conservator of certain Ports.

@ 120. The Tamil Nadu Urban Land Tax (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 51 of 1975) with Annexure.

@ 121. The Tamil Nadu District Development Councils (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 48 of 1975) with Annexure.

@ 122. The Tamil Nadu General Sales Tax (Third Amendment) Bill, 1975 (L.A. Bill No. 50 of 1975) with Annexure.

@ 123. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 52 of 1975) with Annexure.

£ 124. The Tamil Nadu Co-operative Societies (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 60 of 1974).

@ Despatched on 5-11-75.

£ Gazette copies with Annexure already circulated on 19-2-1975 —Bill as introduced—*Despatched* to Members on 5—11—1975.